Vol. 38 Issue No. 85 2026 Feb 07-10 Rs. 30
ஆண்டு – 38 இதழ் – 85 2026 பிப்.07–10 ரூ.30

உண்மை துணிவு உறுதி

# நக்கீரன்

NAKKHEERAN

'நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே' நெ.1 புலனாய்வு வாரமிருமுறை இதழ்



## பல்கலைக்கழக வேந்தராகும் முதல்வர்!
## உச்ச நீதிமன்றம் பச்சைக்கொடி!



# சீரழிக்கப்பட்ட சிறுமிகள்!

## அதிர வைக்கும் எப்ஸ்டீன் பைல்சில்
# மோடி பெயர்!



# விஜய் போட்டியிடும் தொகுதி?

வழக்கமான தேர்தல் அதிகார அரசியலைக் கடந்து, மாநில உரிமைகளை யார் பாதுகாக்கப் போகிறார்கள் என்பதை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது தமிழகத் தேர்தல் களம். ஒன்றிய அரசு என்ன சொன்னாலும் ஏற்றுக்கொள்ளும் அரசா? அல்லது தமிழகத்திற்கு எதிரான திட்டங்களை எதிர்த்து நிற்கும் அரசா? என்பதே இந்த தேர்தலில் முக்கியமான பிரச்சனையாக இருக்கும் என்கிறார்கள் அரசியல் நோக்கர்கள்.

கடந்த 2016 முதல் 2021 வரையிலான அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில், பா.ஜ.க. தலைமையிலான ஒன்றிய அரசின் பல முக்கிய முடிவுகளுக்குத் தமிழ்நாடு அரசு பெரிய எதிர்ப்பின்றி ஒப்புதல் அளித்ததாக விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. குறிப்பாக, நீட் தேர்வை அனுமதித்தது, உதய் மின்திட்டத்தை ஏற்றுக்கொண்டது, ஜி.எஸ்.டி., ஒரே நாடு ஒரே ரேஷன் போன்ற திட்டங்களுக்கு ஆதரவு அளித்தது என, மாநிலத்தின் பல்வேறு அதிகாரங்கள் ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டுக்குள் செல்வதற்கு அன்றைய எடப்பாடி பழனிச்சாமி அரசு உதவியது. மாநில உரிமைகள் பாதிப்புக்குள்ளான போதெல்லாம் அ.தி.மு.க.வின் மௌனம், அமைதியான ஒப்புதலாகவே பார்க்கப்பட்டது.

இது குறித்து விவாதிக்கும் அரசியல் விமர்சகர்கள், “2021ல் மு.க.ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும், ஒன்றிய அரசுடன் உறவாடும் முறையில் மாற்றம் ஏற்பட்டது என்றே சொல்லலாம். ஒத்துழைப்பு என்ற பெயரில் மாநில நலன்களை விட்டுக்கொடுத்துத் தலையாட்டாமல்; எதிர்ப்பை சட்டபூர்வமாகவும், நிறுவனரீதியான போராட்டமாகவும் அணுகும் முறையைக் கையாண்டது தி.மு.க. அரசு.

தேசியக் கல்விக் கொள்கையை ஏற்றுக்கொண்டு, ‘பிஎம்ஸ்ரீ’ திட்டத்தில் பள்ளிகளை இணைத்தால் மட்டுமே ‘சமக்ரா ஷிக்ஷா அபியான்’ திட்டத்தின்கீழ் வழங்க வேண்டிய நிதியை விடுவிப்போம் என மத்திய அரசு நிபந்தனை விதித்தது. ஆனால், பள்ளிக் கல்வி மாநில அரசுகளின் கட்டுப்பாட்டில் இருப்பதாகவும், எந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரம் மாநிலங்களுக்கே உண்டு என்றும் தமிழ்நாடு அரசு வாதிட்டதில் தி.மு.க.வின் உரிமைக்குரல் வெளிப்பட்டது” என்று சுட்டிக்காட்டுகிறார்கள்.

“பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களை நியமிக்கும் அதிகாரத்தை மாநில அரசுக்கு மாற்றுவது உள்பட சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட பத்து மசோதாக்களுக்கு ஒப்பு தல் வழங்காமல் காலதாமதம் செய்துவந்த ஆளுநர் ஆர்.என். ரவிக்கு எதிராக உச்ச நீதிமன்றம் வரை சென்று போராடியது தமிழக அரசு. ‘மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் ஆளுநர் கால தாமதம் செய்தது தவறானது, சட்டத்திற்குப் புறம்பானது’ என்று உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பு, தி.மு.க.வின் போராடும் குணத்தை வெளிப்படுத்தியது” என்கிறார்கள் கல்வியாளர்கள்.

இதுமட்டுமல்ல, நீட் விலக்கு மசோதாவிற்கு குடியரசுத்தலைவர் ஒப்புதல் அளிக்காமல் நிறுத்தி வைத்திருப்








பதை எதிர்த்து, உச்ச நீதிமன்றத்தில் வழக்குப் பதிவு செய்தது தமிழக அரசு. உச்ச நீதிமன்றத்தின் சிறப்பு அதிகாரமான சட்டப்பிரிவு 142-ஐ பயன்படுத்தி இந்த மசோதாவிற்கு ஒப்புதல் வழங்க வேண்டும்' என்று அழுத்தமாக தமிழக அரசு வாதிட்டத்தில் ஒன்றிய அரசே ஒருகணம் திகைத்துப்போனது.

ஆட்சியிலிருந்தபடியே ஒன்றிய அரசின் கொள்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் அணுகுமுறையை தி.மு.க. கையாண்டு வருவதும், 'ஒரே நாடு ஒரே தேர்தல்' என்ற திட்டத்திற்குக் கடும் எதிர்ப்பு தெரிவிப்பதும், சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் காலம் தாழ்த்திய ஆளுநரின் நடவடிக்கைகளுக்கு எதிராக நீதிமன்றத்தை நாடுவதும், இந்தியாவின் கூட்டாட்சி அமைப்பைப் பாதுகாப்பதற்கான தி.மு.க.வின் முக்கிய முயற்சிகளாகவே பார்க்கப்படுகின்றன. இந்தித் திணிப்பு, நிதிப்பகிர்வு, அதிகாரப் பகிர்வு போன்ற விவகாரங்களில் மத்திய அரசிடம் தொடர்ந்து கேள்வியெழுப்பும் மாநிலமாக தமிழ்நாடு மாறியிருப்பது, கடந்த ஐந்து ஆண்டுகளின் மிகமுக்கிய அரசியல் மாற்றமாகக் கருதப்படுகிறது.

ஆக, ஒன்றிய மோடி அரசின் முடிவுகளைப் பெரும்பாலும் ஏற்றுக்கொண்ட அ.தி.மு.க. ஆட்சிக்கால தமிழ்நாடு, அந்த முடிவுகளைக் கொள்கை ரீதியாகவும், சட்ட ரீதியாகவும் கேள்விக் குள்ளாக்கும் தற்போதைய தி.மு.க. ஆட்சிக்கால தமிழ்நாடு என இரண்டு வெவ்வேறு அணுகுமுறைகளோடு தற்போதைய தேர்தல் களம் தயாராகிவருகிறது.

இந்த இரண்டுக்கும் இடையிலான வேறுபாடே இன்றைய தமிழ்நாட்டு அரசியலின் மையப் புள்ளியாக மாறியுள்ளது. இதனை உறுதிப்படுத்தும் வகையில்தான், வரவிருக்கும் சட்டமன்றத் தேர்தலை 'தமிழ்நாடு vs என்.டி.ஏ' என்று சுட்டிக்காட்டிவருகிறார் முதலமைச்சர் ஸ்டாலின். இது ஒரு கொள்கை யுத்தம் எனவும் தி.மு.க.வினர் குறிப்பிடுகின்றனர்.

இதற்கு நேர்மாறாக 'தேசிய நலன்', 'ஒன்றிய அரசுடனான ஒத்துழைப்பு' போன்ற வாதங்களை முன்வைத்து அரசியல் செய்து வருகிறார்கள் அ.தி.மு.க. தலைவர்கள். எனினும், கடந்த காலங்களில் அ.தி.மு.க. அரசு அளித்த இத்தகைய ஒத்துழைப்பால் மாநிலத்தின் உரிமைகள் எந்த அளவிற்குப் பறிக்கப்பட்டன என்பதும், தற்போது தி.மு.க. ஆட்சியில் அவை எவ்வாறு பாதுகாக்கப்படுகின்றன என்பதுமே அரசியல் களத்தில் விவாதமாக மாறியுள்ளது. அந்த வகையில் வருகிற சட்டமன்றத் தேர்தல், நலத் திட்டங்களுக்காக அரசைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலாக மட்டும் இருக்கப்போவதில்லை. மாறாக, தமிழ்நாடு தன்னைத் தானே எவ்வாறு பாதுகாத்துக் கொள்ளப்போகிறது? என்ற அடிப்படை அரசியல் கேள்விக்கான பதிலைத் தேடும் களமாகவே இருக்கப்போகிறது.

அந்த வகையில், இந்த 'மாநில உரிமை யுத்தமே 2026 தேர்தல் களத்தில் மிகப்பிரதானமான இடத்தைப் பிடித்திருக்கிறது' என்கிறது உளவுத்துறையின் சர்வே!

**-இரா.இளையசெல்வன்**



# சீரழிக்கப்பட்ட சிறுமிகள்!

## அதிர வைக்கும் எப்ஸ்டீன் ஃபைல்சில் மோடி பெயர்!

**'எப்ஸ்டீன் ஃபைல்களில் மோடியின் பெயர்– பதிலளிக்குமா பா.ஜ.க.?' என்ற தலைப்பில் கடந்த டிசம்பர் 06–09 இதழில் வெளியான கட்டுரையில், சிறுமிகளைப் பாலியல் கடத்தல் மற்றும் சுரண்டலில் ஈடுபடுத்திய அமெரிக்க குற்றவாளி ஜெஃப்ரி எப்ஸ்டீனைச் சுற்றியுள்ள ஆவணங்களில் இந்திய பிரதமர் நரேந்திர மோடியைச் சந்திக்க முயன்றதாகக் கூறப்படும் குறிப்புகள் தொடர்பான சர்ச்சைகள் குறித்து நாம் எழுதியிருந்தோம்.**

அதேபோல், முன்னாள் மத்திய அமைச்சர் ஹர்தீப்சிங் புரியுடன் எப்ஸ்டீனுக்கு தொடர்புகள் இருந்ததாகச் சொல்லப்படும் பதிவுகள் அரசியல் வட்டாரத்தில் எழுப்பிய கேள்விகளையும் சுட்டிக்காட்டியிருந்தோம். இந்த விவகாரம் குறித்து மக்களிடையே எழுந்த சந்தேகங்களுக்கு பிரதமர் நாடாளுமன்றத்தில் விளக்கம் அளிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தோம்.

இந்நிலையில், கடந்த 3-ஆம் தேதி நாடாளுமன்றத்தில் ஜனாதிபதியின் உரை மீதான விவாதத்தின்போது எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்திக்கு பேச அனுமதி வழங்கப்படாதது புதிய அரசியல் சர்ச்சையை ஏற்படுத்தியது. வெளிநாட்டு அழுத்தங்களால் பிரதமர் சமரசம் செய்துகொண்டார் என்றும், எப்ஸ்டீன் தொடர்பான ஆவணங்களில் பெயர் இடம் பெற்றதாக எழுந்த விவாதம், அதானி மீதான அமெரிக்க வழக்குகள், இந்தியா -அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் மற்றும் தேசிய பாதுகாப்பு சூழ்நிலைகள் ஆகியவை ஒன்றோடொன்று தொடர்புடையவை என்றும் அவர் பேசத் திட்டமிட்டிருந்ததாக காங்கிரஸ் தரப்பு கூற, ஆயிரக்கணக்கான கோடிகளில் உருவாக்கப்பட்ட மோடியின் பிம்பம் உடைந்துபோகும் என்ற பயமே இந்தத் தடைக்கு காரணம் என ராகுல்காந்தியும் குற்றம்சாட்டினார்.

### உலக சர்ச்சையில் மோடி பெயர்!

உலகளவில் கவனம் பெற்றுள்ள எப்ஸ்டீன் தொடர்பான ஆவணங்களில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த செல்வாக்குமிக்க நபர்கள் குறித்த குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. அந்த வரிசையில் இந்திய பிரதமர் குறித்த குறிப்பும் இருந்ததாக வெளிவந்த தகவல்கள் இந்திய

www.nakkheeran.in



டெல்லியில் 15 நாட்களில் 807 பேர் மாயம்: அரவிந்த் கெஜ்ரிவால் குற்றச்சாட்டு



தங்களது சிறு வயது புகைப்படத்துடன் -பாதிக்கப்பட்ட பெண்கள்

அரசியல் வட்டாரத்தில் விவாதத்தை ஏற்படுத்தின. குறிப்பாக, 2017ஆம் ஆண்டு பிரதமர் மேற்கொண்ட இஸ்ரேல் பயணம் சர்ச்சையைத் தீவிரப்படுத்தியது.

ஆனால், இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் இந்த குற்றச்சாட்டுகளைத் தெளிவாக மறுத்தது. பிரதமர், எப்ஸ்டீனை சந்தித்ததாகவோ, எந்தவித தொடர்பும் வைத்திருந்ததாகவோ கூறப்படும் தகவல்களில் உண்மை இல்லை என்றும், அதிகாரப்பூர்வ வெளிநாட்டுப் பயணத்தைத் தவிர மற்ற குறிப்புகள் ஆதாரமற்றவை என்றும் விளக்கம் அளிக்கப்பட்டது.

இந்த மறுப்பை ஏற்க மறுத்து ராகுல் காந்தி தொடர்ந்து கேள்வி எழுப்பியதால், பா.ஜ.க. தரப்பில் கடும் எதிர்ப்பு கிளம்பியது. 'சரணடைந்த மோடி' கோஷங்களால் ஏற்பட்ட அமளியின் காரணமாக, 4-ஆம் தேதி பிரதமர் உரையாற்றாமல் மக்களவை ஒத்தி வைக்கப்பட்டது.

## குற்றச்சாட்டுகளின் மையமான பாலியல் தீவு!

அமெரிக்க நீதித்துறை, ஜெஃப்ரி எப்ஸ்டீன் தொடர்பான விசாரணை ஆவணங்களில் இருந்து சுமார் 30 லட்சம் பக்கங்களை வெளியிட்டுள்ளது. நீதிமன்ற பதிவுகள், சாட்சியங்கள் மற்றும் பல்வேறு குற்றச்சாட்டு தகவல்களை உள்ளடக்கிய இந்த வெளியீட்டில் சுமார் 2,000 வீடியோக்களும் 1,80,000 புகைப்படங்களும் இடம்பெற்றுள்ளன. இந்த ஆவணங்களில், எப்ஸ்டீனுடன் தொடர்புவைத்திருந்ததாக உலகப் பிரபலங்களின் பெயர்களும் காணப்படுகின்றன. அவற்றில் பில் கிளிண்டன், டொனால்ட் ட்ரம்ப், இளவரசர் ஆண்ட்ரூ, மிக் ஜாகர், டயானா ராஸ், கெவின் ஸ்பேசி, கிரிஸ் டக்கர், ரிச்சர்ட் பிரான்சன், எலான் மஸ்க், பில் கேட்ஸ், லாரி சம்மர்ஸ் மற்றும் எஹூத் பராக்



ஹெலிகாப்டர் பயணத்தில் ஜெஃப்ரி எப்ஸ்டீன் -டிலாடேவிஸ்

**கரூர் கூட்ட நெரிசலில் 41 பேர் பலி வழக்கு: திருச்சி நீதிமன்றத்தில் 12ம் தேதி சிபிஐ குற்றப்பத்திரிகை தாக்கல்: விஜய் பெயரும் இடம்பெற வாய்ப்பு**

உள்ளிட்டோர் குறிப்பிடப்பட்டுள்ளனர். மேலும், எப்ஸ்டீனின் தனியார் தீவான லிட்டில் செயிண்ட் ஜேம்ஸ் பல குற்றச்சாட்டுகளின் மையமாக ஆவணங்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எப்ஸ்டீன் வழக்குடன் தொடர்புடைய அரசிடமிருந்த தகவல்களை பொதுமக்களுக்கு வெளியிட வேண்டும் என்ற சட்டத்தின் அடிப்படையில் இதனை வெளியிட்டுள்ளனர்.


கரீபியன் கடலில் அமைந்த தனியார் நிலப்பகுதியான லிட்டில் செயின்ட் ஜேம்ஸ், அமெரிக்க விர்ஜின் தீவுகளின் ஒரு பகுதியாகும். 1998 முதல் 2019 வரை எப்ஸ்டீனின் கட்டுப்பாட்டில் இருந்த இந்தத் தீவில்தான் குறைந்த வயதுடைய சிறுமிகள் பாலியல் சுரண்டலுக்கு ஆளாகியுள்ளனர்.

செயின்ட் தாமஸ் கடற்கரையிலிருந்து சுமார் இரண்டு மைல் தொலைவில் அமைந்துள்ள இந்தத் தீவு, அதிகாரமும் செல்வாக்கும் உள்ளவர்கள் வருகைதந்த தனியார் ஓய்வு மையமாக இருந்தது. இங்கு இளம்பெண்கள் மீதும் பாலியல் துஷ்பிரயோகம் நடந்ததால் ‘பாலியல் தீவு’ என்ற கெட்ட பெயரைச் சம்பாதித்தது. 2019-ல் எப்ஸ்டீன் மரணமடைந்த பிறகு, இந்த இடமும் அருகிலுள்ள கிரேட் செயின்ட் ஜேம்ஸ் தீவும் விற்கப்பட்டது. அதிகாரமும் பணமும் தவறாகப் பயன்படுத்தப்பட்டதால், இந்தத் தீவு உலகளவில் சர்ச்சையின் அடையாளமாகப் பார்க்கப்படுகிறது.



## "என் மகள் வயதுள்ள சிறுமிகள்" -மெலிண்டா வேதனை!

பில்கேட்ஸ் இதற்குப் பதிலளிக்க வேண்டும் என்று கொந்தளித்துள்ள அவருடைய முன்னாள் மனைவி மெலிண்டா, “எப்ஸ்டீன் தொடர்பான கோப்புகளில் வெளியாகியுள்ள புகைப்படங்களும், வீடியோக்களும் என்னை அதிர்ச்சியிலும் ஆழ்ந்த வேதனையிலும் ஆழ்த்தியுள்ளது. இந்த விவகாரத்தில் தொடர்புடைய பில்கேட்ஸ் உள்பட அனைவரும், இதுகுறித்து எழும் ஒவ்வொரு சந்தேகத்திற்கும் பதில் சொல்லவேண்டும். எந்தச் சிறுமியும் அனுபவிக்கக்கூடாத கொடுமைகளை, எப்ஸ்டீனும் அவனுடைய கூட்டாளிகளும் அரங்கேற்றியுள்ளனர். என் மகள் வயதில் உள்ள அச்சிறுமிகளைப் பார்க்கும்போது இதயம் நொறுங்கிப் போனது” என்று ஆதங்கத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்.


இளவரசர் ஆண்ட்ரூ


பில் கிளிண்டன்


எலான் மஸ்க்

## 'அவனுக்குத் தேவை குழந்தைகள்தான்...' -மனிதநேயத்தை உலுக்கும் சாட்சிகள்!

மெலிண்டா குறிப்பிட்டது போலவே பாதிக்கப்பட்ட பெண்களும் தங்களது மன வேதனையைப் பொதுவெளியில் பகிர்ந்துள்ளனர்.

**மெரினா லாசெர்டா:** சமீபத்தில் வெளியான அந்த எப்ஸ்டீன் கோப்புகள் என் முகத்தில் அறைந்தது போலிருக்கிறது. அதிகார வர்க்கத்தைப் பாதுகாத்துவிட்டு எங்களைப் போன்ற பாதிக்கப்பட்டவர்களின் வாழ்க்கையை ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை. என் இருண்ட காலம் எனக்கு 14 வயதாக இருக்கும்போதே தொடங்கிவிட்டது. அதற்கு முன்பே என் 8 வயதில் ஸ்டெப்ஃபாதரால் இழைக்கப்பட்ட பாலியல்

## இரட்டை வாழ்க்கை!

சமூகத்தில், 60-70 வயதுக்குப் பிறகும் பெண் துணை இல்லாமல் பிரம்மச்சரியம் கடைப்பிடிக்கும் மனிதர்களைப் பற்றிய பல கேள்விகள் எழுகிறது. உதாரணமாக, அவர்களின் உடல் இச்சைகள் என்ன? அல்லது சராசரி மனிதனால் உடலும் உணர்ச்சிகளும் கட்டுப்படுத்தப்படுமா? என்பது போன்ற கேள்விகள். பிரம்மச்சரியம் என்பது உடல் இச்சைகள் முற்றிலும் இல்லாமை அல்ல; அது, உடல் ஆசைகளை அடக்கி, அவற்றை கட்டுப்படுத்தி வேறு வழிகளில் செலுத்துவதாகும்.

நீண்ட கால முழு பிரம்மச்சரியம் சராசரி மனிதருக்கு மிகவும் கடினம், மேலும் எல்லா மனிதர்களும் ஒரே மாதிரி பிரம்மச்சரியத்தை கடைப்பிடிக்க முடியாது. சிலர் ஆன்மிக வாழ்க்கை, தியானம், சேவை, ஒழுக்கமான பழக்கவழக்கங்கள் மூலம் தங்களின் எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் கட்டுப்படுத்துகிறார்கள். சிலர் வெளிப்படையாக பிரம்மச்சரிய வாழ்க்கை வாழ்வது போல் தோன்றினாலும், உள்ளுக்குள் கடுமையான மனப்போராட்டத்தை அனுபவிக்கிறார்கள். உணர்ச்சிகளை அடக்குவது, மன அழுத்தம், கோபம், இரட்டை வாழ்க்கை போன்ற பிரச்சனைகளுக்கு வழிவகுக்கும். அடக்கப்பட்ட உணர்ச்சிகள் பின்னர் தவறான நடத்தையாக வெளிப்படும் அபாயம் உள்ளது. திருமணம் செய்யாமலோ, துணை இல்லாமலோ வாழ்வதும் ஒரு வாழ்க்கைத் தேர்வு தான். ஆனால் தன் உணர்ச்சிகளை உண்மையாக எதிர்கொண்டு, பொறுப்புடன் வாழ்வதே உண்மையான ஒழுக்கம் என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

கொடுமைகள் என்னை உள்ளுக்குள் உடைத்துப் போட்டிருந்தன. வறுமையும், குடியேறி என்ற அடையாளமும், சமூகப் பாதுகாப்பு எண் இல்லாத நிலையும் என்னை எப்ஸ்டீனின் அந்த மன்ஹாட்டன் மாளிகைக்குள் தள்ளியது. மசாஜ் அறை என்ற பெயரில் இருள்சூழ்ந்த அந்த அறைக்குள் நான் எதிர்பார்க்காத வன்கொடுமைகள் என் மீது ஏவப்பட்டன. ஏற்கனவே வன்முறையைச் சந்தித்திருந்ததால் என்னால் எதையும் எதிர்க்க முடியவில்லை. அங்கு என்னைப் போன்ற நூற்றுக் கணக்கான சிறுமிகள் வந்து போவதைப் பார்த்திருக்கிறேன், எப்ஸ்டீனைப் பொறுத்தவரை நாங்கள் வெறும் பொருட்கள் மட்டுமே. எனக்கு 17 வயதானபோது 'உனக்கு வயதாகி விட்டது, இனி உன்னால் ஆகப் போவது ஒன்றும் இல்லை' என்று கூறி என்னை வெளியே எறிந்தான். அவனுக்குத் தேவைப்பட்டது குழந்தைகள் மட்டுமே தவிர பெண்கள் அல்ல.

**டிலா டேவிஸ்:** நான் அவனிடம் சிக்கிக்கொண்டபோது எனக்கு வயது 17தான், ஆதரவற்ற நிலையில் தனியாக இருந்த என் பலவீனத்தைப் பயன்படுத்திக்கொண்டு ஜெஃப்ரி எப்ஸ்டீன் என்னை வேட்டையாடினான். அந்தப் புகைப்படத்தில் ஹெலிகாப்டரில் நான் சிரித்துக் கொண்டிருப்பது எனக்கு இன்றும் வலிக்கிறது. ஏனெனில் எனக்காக அவன் தீட்டியிருந்த கொடூரமான திட்டங்கள் அப்போது சிறுமியாக இருந்த எனக்குத் தெரிந்திருக்கவில்லை. நியூயார்க், நியூ மெக்சிகோ, புளோரிடா, வர்ஜின் தீவுகள் என அவன் என்னை எங்கு அழைத்துச் சென்றானோ அங்கெல்லாம் நான் பாலியல் ரீதியாகச் சிதைக்கப்பட்டேன். அவன் என்னைத் தன் பாலியல்


பில்கேட்ஸ்


மெலிண்டா



www.nakkheeran.in

## அதிகாரத்தின் அருவருப்பான முகம்!

பெடோபைல் (Pedophile) என்பது ஒரு மனநிலையைக் குறிக்கும் சொல். சம வயதுள்ள எதிர்பாலினத்துடன் இயல்பான உறவு கொள்ளும் திறமையோ மனநிலையோ இல்லாதவர்கள், உறவுக்காக சிறுமிகளைத் தேர்வுசெய்கிறார்கள். ஆனால் அந்த மனநிலையைச் செயலாக மாற்றினால், அது கடுமையான குற்றம் மற்றும் சட்டப்படி தண்டனைக்குரியது.

பணமும் அதிகாரமும் கையிலிருக்கும் சில மனிதர்கள் சிறுமிகளுக்கு இழைக்கும் பாலியல் குற்றங்கள் எந்த வகையிலும் பொழுதுபோக்கு அல்ல. அது அவர்களுடைய அதிகார வெறி, யாரும் தங்களைத் தடுக்க முடியாது என்ற அகம்பாவம், மற்றவர்களின் வேதனையை உணராத மனநிலை ஆகியவை சேர்ந்து உருவாகும் கொடூரமான அத்துமீறல். பணமும் செல்வாக்கும் இருப்பதால், தங்களைக் காத்துக்கொள்ள முடியும்; குற்றம் செய்தாலும் தப்பித்துவிடலாம் என்ற எண்ணம் இவர்களுக்கு வலுவாக இருக்கும். இதனால் பாதிக்கப்பட்டவர்கள் பயத்தால் மௌனமாக இருக்கவேண்டிய நிலையும் ஏற்படும். ஆகவே இது சாதாரண இன்பத் தேடல் அல்ல -மனிதத்தன்மை குறைந்து, அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தும் ஆபத்தான செயலே. அனைத்துச் செல்வந்தர்களும் இப்படி இருப்பார்கள் என்று சொல்ல முடியாது. அதிக வசதிகளால் வாழ்க்கையைச் சலிப்பாக உணர்பவர்கள், சாதாரண விஷயங்களில் திருப்தி அடையாமல், ஆபத்தான அனுபவங்களைத் தேடு கிறார்கள். எதிர்ப்பு சொல்லமுடியாத சிறுமிகள் மீது ஆதிக்கம் செலுத்தி கட்டுப்படுத்துவது, பாலியல் விருப்பத்தைவிட அதிகார வெறியுடைய செயலாகும்.

ஆசைக்கான ஒரு பொருளாக மட்டுமே பார்த்தான், அந்த அத்துமீறல்கள் என்னை நிலைகுலையச் செய்தன. இப்போது நான் இங்கே நிற்பது என்னைப் போன்ற பாதிக்கப்பட்டவர்கள் பயத்தை வென்று பேசவேண்டும் என்பதற்காகத்தான், மறைக்கப்பட்ட உண்மைகளை வெளிச்சத்திற்குக் கொண்டு வருவதுதான் என் மனதைச் சுத்தப்படுத்தும் மருந்தாக இருக்கிறது.”

எப்ஸ்டீன் ஃபைல்களில் இடம் பெற்றுள்ள பெயர்கள் அனைத்தும் நேரடிச் சாட்சியங்கள் அல்ல, அவை வெறும் விசாரணைக் குறிப்புகளாகக் கூட இருக்கலாம். ஆனால், சிறுமிகளை வேட்டையாடிய ஒரு காமுகனின் தொடர்புகள் பட்டியலில் ஒரு நாட்டின் பிரதமருடைய பெயர் கசிவதே அந்தப் பதவிக்கு நேர்ந்த இழுக்கு.

மிரட்டலான தொனியில் தனது இஷ்டப்படி டிரம்ப், மோடியை ஆட்டுவிப்பதும், அதி முக்கியமான வர்த்தக ஒப்பந்தத்தில் அவசரக் கதியில் கையெழுத்திட்டு அடி பணிவதும், ரஷியா போன்ற நட்பு நாடுகளின் அதிருப்தியைச் சம்பா தித்துக்கொள்வதும், அவர்மீது ஏற்கனவே நிலவி வந்த சந்தேகத்தை மேலும் வலுப்படுத்துகிறது. உலக அரங்கில் இந்திய தேசத் தின் கௌரவம் சிதைக்கப்பட்டு, தேசிய அரசியலை நிலைகுலையச் செய்துள்ள இந்தச் சூழல், நம் தேசத்திற்குத் துடைக்க முடியாத ஒரு கறை!

-ராம்கி




அழகிகளுடன் இளம் வயதில் ட்ரம்ப் மற்றும் ஜெஃப்ரி எப்ஸ்டீன்

# தலைமுறைகள் தாண்டி தலைசிறந்த சிகிச்சை

# சேலம் சிவராஜ் சித்த வைத்திய சாலை

அண்ணா பூங்கா பின்புறம், தமிழ்ச்சங்கம் ரோடு வழியாக, ராஜாராம் நகர், சேலம் – 7.

: 98427 22500, 98427 13500 ☎ : 0427 - 4265300

7 தலைமுறைகள், 213 வருடங்களாக தொடர்ந்து சித்த வைத்தியம் செய்து வரும் ஒரே ஸ்தாபனம். பாரம்பரியமும், கைராசியும் கொண்ட எங்கள் சித்த வைத்திய சாலையில் தலைசிறந்த மருத்துவர்களை கொண்டு ஆரம்ப நிலை மற்றும் நாட்பட்ட நோய்கள், ஆண்களின் ஆரோக்கியமான வாழ்விற்கு ஆலோசனை வழங்கப்படுகிறது.



Dr.சிவராஜ் சிவகுமார்

**தினசரி காலை 7 மணி முதல் மாலை 7 மணி வரை**

## சென்னை கிளை
10/4 வீரபத்திரன் தெரு, வள்ளுவர் கோட்டம் அருகில், VIP கேட்டின் எதிரில், நுங்கம்பாக்கம், சென்னை–34.
M: 97888 27500, 044-28230072

## ஈரோடு கிளை
பெருந்துறை ரோடு, செந்தில் நரம்பியல் எதிரில், கோவை மெடிக்கல் ரோடு வழியாக, 36, காந்தி நகர், வாட்டர் டேங்க் ரோடு, ஈரோடு.
M: 98427 39500, 0424-2259332

## ஒசூர் கிளை
M-13, ஆவலப்பள்ளி ஹட்கோ, ஸ்டேட் பேங்க் பின்புறம் அத்வைத் பள்ளி அருகில், பாகலூர் ரோடு, ஒசூர்.
M : 81108 03500

## திருப்பத்தூர் கிளை
88/3, காந்தி ரோடு, GH எதிரில்
M: 74488 11500



Dr.சிவராஜ் சிபி

## ஒவ்வொரு மாதமும் இதே தேதிகளில் சந்திக்கலாம். (விடுமுறை நாட்களிலும் முகாம் உண்டு)

**திருச்சி**
1ம், 9ம் தேதியும்
காலை 6 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் அபிராமி
சென்ட்ரல் பஸ்நிலையம், பெரியார் சிலை அருகில்.

**திருப்பூர்**
1ம் தேதி காலை 6 முதல் மதியம் 12 வரை
14ம் தேதி, காலை 6 முதல் மாலை 5 வரை
SAP ரெஸிடென்ஸி
111, முனிசிபல் ஆபீஸ் ரோடு.

**தஞ்சை**
2ம் தேதி
காலை 6 முதல் மதியம் 12 வரை
ஹோட்டல் காசி இன்
1493, தெற்கலங்கம், பழைய பேருந்து நிலையம்.

**கும்பகோணம்**
2ம் தேதி
மதியம் 2 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் திருமால்
ஜான்செல்வராஜ் நகர், புதிய பஸ்நிலையம் அருகில்.

**நாகர்கோவில்**
2ம் தேதி,
காலை 6 முதல் மாலை 5 வரை,
ஹோட்டல் கங்கா பேலஸ்
K.P. ரோடு, செட்டிகுளம், ஜங்சன்.

**நெல்லை**
3ம், 23ம் தேதியும்,
காலை 6 முதல் மாலை 5 வரை,
பரணி லாட்ஜ்
பஸ் நிலையம் அருகில், மதுரை ரோடு.

**விழுப்புரம்**
3ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் ஆதித்யா
தேர் விநாயகர் கோவில் & புதிய பஸ்நிலையம் எதிரில், கே.கே.நகர்.

**காஞ்சிபுரம்**
4ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
வசந்த் வில்லா
T.K.நம்பி வீதி, வெங்குடி மருத்துவமனை & பெண்கள் காலேஜ் பஸ் ஸ்டாப் அருகில்.

**மதுரை**
4ம், 22ம் தேதியும்
காலை 6 முதல் மாலை 5 வரை
காலேஜ் ஹவுஸ்
டவுன் ஹால் ரோடு.

**கள்ளக்குறிச்சி**
4ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
AKT லாட்ஜ்
பஸ் நிலையம் அருகில்.

**தேனி**
7ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் தேனி இண்டர்நேசனல்
பழைய பஸ் நிலையம் அருகில், மதுரை ரோடு.

**திண்டுக்கல்**
8ம், 24ம் தேதியும்
காலை 6 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் ஐஸ்வர்யா
ஸ்பென்ஸர் காம்பௌண்ட், பஸ் நிலையம் எதிரில்.

**திருவண்ணாமலை**
9ம், 22ம் தேதியும்
காலை 6 முதல் மாலை 5 வரை
ராதா லாட்ஜ், 94, சின்ன கடை வீதி.

**வேலூர்**
11ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் ரெங்கா லாட்ஜிங் ஹவுஸ்
3, தென்னைமரம் தெரு.

**கடலூர்**
11ம் தேதி
காலை 6 முதல் மதியம் 12 வரை
ஹோட்டல் CAR லாட்ஜ்
62, லாரன்ஸ் ரோடு.

**சிதம்பரம்**
11ம் தேதி
மதியம் 2 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் ஜெயராம்
35, 36, SP கோயில் தெரு.

**மாயவரம்**
12ம் தேதி
காலை 6 முதல் மதியம் 12 வரை
அல்-முஜம்மில் லாட்ஜ்
பழைய பஸ்நிலையம் அருகில்.

**நாகப்பட்டினம்**
12ம் தேதி
மதியம் 2 முதல் மாலை 5 வரை
நியூ குமார் லாட்ஜ்
புதிய பஸ் நிலையம் அருகில்.

**மன்னார்குடி**
13ம் தேதி
காலை 6 முதல் மதியம் 12 வரை
ஹோட்டல் காவேரி லாட்ஜ்
புதிய பஸ் நிலையம் அருகில்.

**புதுக்கோட்டை**
13ம் தேதி, மதியம் 2 முதல் மாலை 5 வரை
26ம் தேதி, காலை 6 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் ராயல் பார்க்
புதிய பஸ்நிலையம் எதிரில்.

**கோவை**
13ம், 26ம் தேதியும்
காலை 6 முதல் மாலை 5 வரை
OYO ROOMS (கோடா ஓட்டல்)
294, ராஜவீதி, ஸ்ரீ லட்சுமி லாட்ஜ் எதிரில்.

**கரூர்**
14ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
ஆர்த்தி ஹோட்டல்
திண்ணப்பா தியேட்டர் & பஸ்நிலையம் அருகில்.

**புதுவை**
16ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் ஸ்ரீ சப்தகிரி
பஸ் நிலையம் எதிரில்.

**தென்காசி**
18ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
கிருஷ்ணா டூரிஸ்ட் ஹோம்
2, பழைய பஸ் நிலையம் ரோடு.

**ராஜபாளையம்**
19ஆம் தேதி, காலை 6 மணி முதல் மாலை 5 மணி வரை
ஹோட்டல் ஆனந்தாஸ்
295A, பழைய பேருந்து நிலையம் அருகில், தென்காசி சாலை, ராஜபாளையம்.

**கிருஷ்ணகிரி**
20ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
ஸ்ரீ வெங்கடேஸ்வரா லாட்ஜ்
239, பெங்களூர் ரோடு.

**ஆரணி**
21ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
ஸ்ரீ சாய் சுவாமி லாட்ஜ்
பஸ் நிலையம் அருகில்.

**ராம்நாடு**
24ம் தேதி
காலை 6 முதல் மாலை 5வரை
ஹராஜா பேலஸ்
துரைராஜ் சத்திரம் வீதி.

**சிவகாசி**
25ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
மணீஸ் லாட்ஜ்
பஸ் நிலையம் பின்புறம்.

**பொள்ளாச்சி**
27ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
சக்தி ஹோட்டல்
144, கோவை ரோடு.

**மேட்டுப்பாளையம்**
28ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் காவேரி
K.G.C.காம்ப்ளக்ஸ், மெயின் ரோடு.

சிவராஜ் சித்த மருந்துகளை ஆன்லைன் மூலம் பெற **www.sivarajsiddha.com** | G Pay Paytm **98427 22500**



7 தலைமுறைகள், 213 வருடங்கள் பாரம்பரியம் கொண்ட நிறுவனம்.

for more details

Advt

# 600 வேட்பாளர்கள்! விஜய் களமிறங்கும் தொகுதி எது? —நெருக்கடியில் புஸ்ஸி!

"தமிழகத்தின் 234 சட்டப்பேரவைத் தொகுதிகளிலும் தமிழக வெற்றிக் கழகம் சார்பில் வேட்பாளராகப் போட்டியிட விரும்பும் கழகத் தோழர்கள், தங்களின் விருப்ப மனுக்களை அளிக்கலாம். இதற்கான விருப்ப மனுக்கள், பிப். 6ஆம் தேதி முதல் 14ஆம் தேதிவரை கட்சி தலைமை அலுவலகத்தில் வழங்கப்படுகின்றன. பிப். 6ஆம் தேதி மதியம் 12 மணி முதல், விருப்ப மனுக்களைப் பெறலாம். இதர நாட்களில் காலை 10 மணி முதல், மாலை 6 மணிவரை விருப்ப மனுக்களைப் பெறலாம். விருப்பம் உள்ளவர்கள் அவற்றைப் பெற்று, அதில் கேட்கப்பட்டுள்ள அனைத்து விவரங்களையும் முழுமையாகப் பூர்த்தி செய்து, உரிய ஆவணங்களுடன் ஒப்படைக்க வேண்டும்" என செவ்வாய்க்கிழமையன்று அவசர அவசரமாக அறிவிப்பை வெளியிட்டுள்ளது த.வெ.க.

முந்தையநாள் தேர்தல் பிரச்சாரத்தின்போது காவல்துறையிடம் அனுமதி பெறுவது மற்றும் சட்டப் போராட்டங்களை முன்னெடுப்பதற்காக, அனுபவம் வாய்ந்த வழக்கறிஞர்களை கொண்டு, சட்டப்பேரவை தேர்தல் பிரச்சார மாநில பாதுகாப்பு குழு நியமனம். அடுத்த நாள் வேட்பாளருக்கான விருப்ப மனு அறிவிப்பு. எதற்காக இந்த அவசர அறிவிப்பு? என கேள்வி எழுப்பினால், "இதோ வரும்... அதோ வரும்... என காங்கிரஸ் கூட்டணிக்காக காத்திருந்தார் விஜய். பாம்புக்கு வாலும் மீனுக்கு தலையும்போல் இங்கும் அங்குமாக போக்கு காட்டிக் கொண்டிருந்தது. ஒருகட்டத்தில் '70 சீட் தருகின்றேன்... கூட்டணிக்கு வாருங்கள்' என கிரீஷ் ஜோடங்கர் மூலம் ராகுலுக்கு தகவல் அனுப்பியும் 'நிலையான' பதிலைத் தரவில்லை காங்கிரஸ். எனினும், 'ஜனநாயகன்' படத்திற்கு ஏன் இந்த பிரச்சனை என ராகுல் பேச, காங்கிரஸ் நம் பக்கம் வந்துவிடும் என காத்திருந்தார் விஜய். அது நடக்கவில்லை, மாறாக காங்கிரஸ் இந்தப் பக்கம் பேசிக்கொண்டே தி.மு.க. கூட்டணியில் இருப்பதற்கு முனைப்பு காட்டுகின்றது. விரைவில் கூட்டணிக்கான அறிவிப்பு வரலாம். வந்தால் நமக்கு அசிங்கம் என்பதால் அவசரம், அவசரமாக 234 தொகுதிகளுக்கும் வேட்பாளராக போட்டியிட விரும்புபவர்கள் விருப்ப மனு அளிக்கலாம் என்ற அறிவிப்பு வெளியானது'' என அறிவிப்பின் பின்னணி குறித்து பேசினார் த.வெ.க. மாநில நிர்வாகி ஒருவர்.



## 600 வேட்பாளர்கள்

''தமிழகம் முழுவதும் பெரும்பான்மை வெற்றிபெற்று தலைவர் விஜய் சி.எம். ஆகிவிடு

வார். நமக்கும் எளிதாக வெற்றி கிடைத்துவிடும். நான் சுகாதார அமைச்சர், நான் கல்வி அமைச்சர் என ஆளாளுக்கு கனவில் மிதந்து வருகின்றார்கள். அந்த 'கனவின்' அடிப்படையில் விருப்ப மனு மட்டுமே ஆயிரக்கணக்கில் வரும். மொத்தமாக பெறப்பட்ட விருப்ப மனுக்களில், போட்டியிடும் மாற்றுக்கட்சியிடம் விலைபோகக்கூடிய நபர்கள், கடைசி நேரத்தில் வேட்பு மனுவை வாபஸ் வாங்குபவர்கள், போட்டியிடுவதாக அறிவித்துவிட்டு மாற்றுக் கட்சியிடம் பணத்தை வாங்கிக்கொண்டு வீட்டிலேயே இருக்கும் நபர்கள் என 'பேக்ரவுண்ட் செக் அப்' செய்து மொத்தமுள்ள 234 தொகுதிகளில், தான் மற்றும் தன்னை சுற்றியிருக்கும் நிர்வாகிகள் போட்டியிடும் தொகுதிகள் தவிர மொத்தமாக 600 வேட்பாளர் விருப்ப மனுக்களை மட்டுமே தேர்வு செய்யவுள்ளார் விஜய். இதற்காக உளவுத்துறையில் நீண்டநாட்களாக பணியாற்றி ஓய்வுபெற்ற போலீஸ் அதிகாரி ஒருவரின் உதவியை நாடியுள்ளது ஜான் ஆரோக்கியசாமியின் டீம்" என்கின்றது த.வெ.க. வட்டாரம்.

## நெருக்கடியில் புஸ்ஸி ஆனந்த்

த.வெ.க. கட்சியின் மூன்றாமாண்டு துவக்க விழாவின்போது விஜய்யின் வாகனம் அலுவலகத்தை நெருங்கி வருகையில், தான் கட்சியின் பொதுச்செயலாளர் என்றும் பாராமல் விஜய்யின் வாகனத்தை பின்தொடர்ந்து மூச்சிரைக்க ஓடிவந்து தன்னுடைய விசுவாசத்தை காண்பித்தார் புஸ்ஸி ஆனந்த். திராவிட கட்சிகள், தேசிய கட்சிகளில் இந்தவொரு காட்சியை கண்டதில்லை எவரும். பொதுச்செயலாளர் என்றும் பாராமல் விஜய் அவரை ஓடவிடுவதன் காரணமென்ன? கட்சியின் முதன்மை நிர்வாகிகள் தங்களுக்குள் கலந்தாலோசிக்க, புஸ்ஸி ஆனந்தின் வசூல் வேட்டை வெளியானது. 'நீதான் இந்த தொகுதிக்கு வேட்பாளர்?, நீதான் மா.செ.?' என தமிழ்நாடு முழுவதும் உள்ள சட்டமன்றத் தொகுதிகளுக்கும், கட்சி பொறுப்புக்களுக்கும் இவ்வளவு? என ரேட் பேசி வாங்கியிருக்கின்றார் புஸ்ஸி ஆனந்த். இது விஜய்க்கு தெரியவந்த நிலையில், "அப்படியெல்லாம் இல்லை தலைவரே! கட்சிக்காக நிதி கேட்டேன். டி.டி.தான் கேட்டேன்'' என சமாளித்திருக்கிறார் அவர். 'எவனாவது வெள்ளைப் பணத்தில் டி.டி. எடுத்து தருவானா? இதுதான் சாக்கு என அந்த பணம் எங்கிருந்து வருதுன்னு மத்திய அரசு குடையும்" என விஜய் கூற, "சரி தலைவரே.! பிளாக்கிலேயே கட்சி நிதியை வாங்குகின்றேன்" என்றாராம் புஸ்ஸி ஆனந்த். இருப்பினும் 'நீதான் வேட்பாளர்.?' என அவர் வாங்கிக் குவித்தது பல கோடிகளை தொடுமாம். போதாத குறைக்கு தென்மாவட்டத்தைச் சேர்ந்த டாக்டர் ஒருவரை துணைக்கு வைத்துக்கொண்டு 'உனக்குத்தான் சீட்டு' என கோடிகளில் வசூல் நடந்திருக்கின்றது. இதில் காரைக்குடியைச் சேர்ந்த பெண்மணிக்கு 'திருமயம் தொகுதி உனக்குத் தான்' எனக் கூறி பெரிய தொகையை சுட்டிருக்கின்றனர். இதுபோல் பல சம்பவங்கள் விஜய்க்கு தெரியவந்த நிலையில்தான்... விருப்ப வேட்புமனுக்கள் அறிவிப்பு. இதனால் நெருக்கடிக்கு ஆளானது புஸ்ஸி ஆனந்தும், டாக்டர் ஒருவருமே!

## விஜய்யின் தொகுதிகள் எவை..?

புதுச்சேரி மாநிலத்திலிருந்த வாக்காளர் முகவரியை தமிழ்நாட்டிலுள்ள சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் மாற்றியுள்ள கட்சியின் பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த், சோழிங்க நல்லூர் அல்லது பல்லாவரம் சட்டமன்றத் தொகுதியில் வேட்பாளராக களமிறங்கலாம். ஆதவ் அர்ஜுனாவோ தனக்கு விருப்பமாக திருப்போரூர், அம்பத்தூர் அல்லது தி.நகர் சட்டமன்றத் தொகுதிகளை தெரிவுசெய்து வைத்து, அங்கு தேர்தல் பணியாற்றி வருகின்றார். அருண்ராஜ் திருச்செங்கோட்டினை குறிவைத்த நிலையில்... நடிகரும், கட்சியின் தலைவருமான விஜய்க்கு பாதுகாப்பான தொகுதியாக வேளச்சேரி, விருகம்பாக்கம் அல்லது திருச்சி மத்தி ஆகிய தொகுதிகளை தேர்ந்தெடுத்துள்ளது தேர்தல் கள வியூக ஜான் ஆரோக்கியசாமி டீம். இதற்கான பூர்வாங்க பணிகளை முன்பே தொடங்கி, தினசரி விஜய்க்கு அப்டேட் செய்கின்றது அந்த டீம் என்பது குறிப்பிடத்தக்கது.

**-நாகேந்திரன்**



# மாவலி பதில்கள்

அ.கதிரேசன், அரக்கோணம்

**தேர்தல் ரிசல்ட்டுகளெல்லாம் நமக்கு முன்கூட்டியே தெரிந்தால்?**

ஜெயிக்கிற கட்சியில் சீட்டு வாங்கி எம்.எல்.ஏ.வாகிவிடலாம். அரசியல் பத்திரிகைகளுடன் டீல் போட்டு, மிகத்துல்லியமான கருத்துக் கணிப்புகளை வெளியிட்டு வாயடைக்க வைக்கலாம். பக்கத்துவீட்டுக்காரர்களுடன் பந்தயம் கட்டி ஜெயிக்கலாம்.

எஸ். அர்ஷத் ஃபயாஸ், குடியாத்தம்.


**குடியாத்தம் வயநாடு நிலச் சரிவு பேரிடரில் வீடு, உடமைகளை இழந்த 555 பேரின் வங்கிக் கடன்களான ரூ. 18.75 கோடியை கேரள மாநில அரசே திரும்பச் செலுத்த உள்ளதாமே..?**

ஏதோ, அம்பானி, அதானி, கார்ப்பரேட் கடனென்றால் அரசு பொறுப்பெற்றுக் கொள்ளலாம். பொதுமக்களின் கடன்களையெல்லாம் ஒன்றிய அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று தலையெழுத்தா? வெறும் 18.75 கோடி ரூபாய் கடன்தானே என பரிதாபப்பட்டால் நாளை பூகம்பம், வெள்ளம் என ஆயிரக்கணக்கான கோடிகளைத் தள்ளுபடி செய்யச் சொல்லி வந்து நின்றுவிடமாட்டார்களா? அதையெல்லாம் தள்ளுபடி செய்தால் நாட்டின் முன்னேற்றம் பாதிக்கப்பட்டுவிடாதா?.

சிவராமசுப்பிரமணியன், கல்லிடைக்குறிச்சி.

**ராகுல் ஓய்வெடுக்கும் தலைவர் என பா.ஜ.க. கூறுவது எப்படி இருக்கிறது?**

இந்திய தரைப்படைத் தளபதியாக இருந்த மனோஜ் முகுந்த் நரவணே எழுதி, இன்னும் வெளிவராத ‘ஃபோர் ஸ்டார்ஸ் ஆப் டெஸ்டினி’ எனும் சுயசரிதையில் 2020-ல், இந்திய எல்லைக்குள் சீன டாங்கிகள் ஊடுருவியபோது, என்ன செய்வது என இந்திய அரசின் தலைமைப் பொறுப்பில் உள்ளவர்களைத் தொடர்புகொண்டு கேட்டதாகவும், பாதுகாப்புத் துறை அமைச்சர் முதல் பிரதமர் மோடி வரை அப்போது எத்தனை சுறுசுறுப்பாகச் செயல்பட்டார்கள் எனவும் அம்பலப்படுத்தியிருக்கிறார் நரவணே. இந்த லட்சணத்தில் இவர்கள் எதிர்க் கட்சித் தலைவரை கிண்டல் செய்து கொண்டிருக்கிறார்கள்.




மனோஜ் முகுந்த் நரவணேவின் சுயசரிதை

என். இளங்கோவன், மயிலாடுதுறை.

**தலைகுனிந்து வெளிநாடுகளில் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலை பாகிஸ்தானுக்கு ஏற்பட்டுள்ளது என்று பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் வேதனை தெரிவித்துள்ளாரே?**

கடன் வாங்குவதற்கு அப்படியெல்லாம் தலை குனிய வேண்டியதில்லை. அமெரிக்கா, இந்தியா உள்பட உலகின் பெரும்பாலான நாடுகள் கடன்வாங்கித்தான் காலம் தள்ளுகின்றன. வாங்கின கடனுக்கு வட்டி கட்டமுடியாத நிலை வரும்போது, கடன் தரவே சர்வதேச நிதியமைப்புகள் யோசிக்கும். இன்றைக்குப் பணம் கேட்டால் இழுத்தடித்து, நிபந்தனை விதித்து மெதுவாக ஆறு மாதம் கழித்துத் தரும். அந்த நிலை வரும்போது தலைகுனிய வேண்டியதுதான். இதுவரைக்கும் வாங்கிய கடன்களை நாட்டின் முன்னேற்றத்துக்குப் பயன்படுத்தாமல் ராணுவ அதிகாரிகளும், பாகிஸ்தான் அரசியல்வாதிகளும் தங்கள் சுயநலத்துக்குப் பயன்படுத்தியதால் தான் இந்த நிலை. இவர்களைத் தேர்வுசெய்ததற்கு பாகிஸ்தான் மக்கள்தான் தலைகுனியவேண்டும்.

வண்ணை கணேசன், கொளத்தூர்

**'எப்படியிருந்த செங்கோட்டையன் இப்படி ஆகிட்டாரே' என்று நயினார் நாகேந்திரன் வருத்தப்பட்டிருக்கிறாரே?**

செங்கோட்டையனுக்கு அப்படி என்ன ஆகிவிட்டது? நயினார் நாகேந்திரன் சில வருடங்களுக்கு முன் அ.தி.மு.க.விலிருந்து பா.ஜ.க.வுக்கு தாவினார். இப்போது அ.தி.மு.க.விலிருந்து த.வெ.க.வுக்குத் தாவியிருக்கிறார் செங்கோட்டையன். மாறிய கட்சியைத் தவிர, கட்சி தாவியதில் இரண்டு பேரும் ஒன்றுதானே!

ஜெ.மணிகண்டன், பேரணாம்பட்டு

**எல்லா துறைகளிலும் சாதனை படைக்கும் பெண்கள், ஏன் ஜல்லிக்கட்டு காளைகளை அடக்க முன்வருவதில்லை?**

அதுதான் ஜல்லிக்கட்டு காளையை அடக்கும் காளையர்களையே பார்வையால் அடக்கி ஒடுக்கி வீழ்த்திவிடுகிறார்களே. பன்னிரண்டடி தாவுபவர்களை, ஆறடி தாவ அழைப்பதில் என்ன சுவாரசியம் இருக்கிறது!

பு.முரளிதரன், சென்னை-87

**துஷ்டனைக் கண்டால் ஏன் தூர விலகிப் போகவேண்டும்?**

துஷ்டனோடு சேர்ந்தால் நமக்கும் துஷ்ட குணம் தொற்றும் என்பதனால்தான். மகாபாரத கர்ணனுக்கு நாயகனுக்கான எல்லா குணங்களும் இருந்தன. ஆனால், துரியோதன சகவாசம் அவனது அழிவுக்கான தொடக்கமாக அமைந்தது.

எஸ். கதிரேசன், பேரணாம்பட்டு

**இந்திய -ஐரோப்பிய யூனியன் இடையே வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தானதற்காக பிரதமர் பெருமிதப்படுகிறாரே?**

ஒப்பந்தத்தால் பயனில்லை. ஆனால் அதன்மூலம் ஐரோப்பாவுக்கான இந்தியாவின் ஏற்றுமதி அதிகரித்தால்தான் பயன். மாறாக, ஐரோப்பிய நாடுகளின் ஏற்றுமதி அதிகரித்து இந்திய உற்பத்தியாளர்களைப் பாதித்தால் சிக்கல்தான்.

●



# வார் ரூம்

## அரசியல் வியூகம்... தந்திரம்... விளைவு!

வசந்த் பாலகிருஷ்ணன்

### (3)
### வரலாறு ரொம்ப முக்கியம்!

**1991**ஆம் ஆண்டு நவம்பர் மாதம்... தமிழ்நாடு கர்நாடகா செய்தித்தாள்களில் முக்கிய செய்தி ஒன்று மக்களை அதிரவைத்தது. 'சரணடைகிறேன் வாருங்கள் என்று அழைக்கப்பட்டு கர்நாடக வனத்துறை உயரதிகாரி ஸ்ரீநிவாஸ், வீரப்பனால் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டார். அவரது தலை வீரப்பனால் எடுத்துச்செல்லப்பட்டது. ஸ்ரீநிவாஸ் அந்தப் பகுதி மக்களின் வாழ்க்கையை சீர்திருத்த பெரும்பாடுபட்டவர். வீரப்பனுக்காக வேலை செய்தவர்கள் மீது வழக்குப் பதியாமல் அவர்கள் திருந்த வாய்ப்பளித்தவர்' -இது போலீஸ் மற்றும் அரசின் 'நேரேட்டிவ்'. 1993-ல் நக்கீரன் டீம் முதன்முதலில் வீரப்பனை பேட்டி எடுத்து, போலீசிடமே இல்லாத வீரப்பனின் புகைப் படத்துடன் வெளியிட்டது.


அதில், 'ஸ்ரீநிவாஸ் என்ற அதிகாரி, அவளது ஊரில் வாழ்ந்துகொண்டிருந்த என் தங்கச்சி மாரியம்மாளை கணவனிடமிருந்து பிரித்து அழைத்து வந்து வாழவிடாமல் செய்தார். என் தங்கச்சி தற்கொலை செய்துகொள்ள அவர்தான் காரணம்; ஊர்க்காரர்கள் பலரை கைது செய்து, வழக்கும் போடாமல், வெளியேயும் விடாமல் அவர்கள் வாழ்க்கையை கெடுத்தார். என் தம்பி அர்ஜுனன் மூலமாக என்னை வர வழைத்து கொல்லலாம் என்று திட்டமிட்டார். அதனால்தான் அவர் சொன்னபடியே சரணடைவதாகச் சொல்லி வரவழைத்துக் கொன்றேன்' என்றார் வீரப்பன். இது வீரப்பன் கோணத்தின் 'நேரேட்டிவ்'.

ஒரு சம்பவம், கதை அல்லது வரலாறு, எந்தப் பார்வையில் அல்லது யாருடைய பார்வையில் சொல்லப்படுகிறது என்பதுதான் 'நேரேட்டிவ்'. 'சிங்கம் எழுதக் கற்றுக்கொள்ளும் வரை வரலாறு வேடனின் புகழ் பாடும்' என்பது ஆப்பிரிக்க பழமொழி. அப்படித்தான் உலகின் பல வரலாறுகளும் வேடன்களாலேயே எழுதப்பட்டு வந்தன. இந்த 'நேரேட்டிவ்'வை யார் கட்டுப் படுத்துகிறார்களோ அவர்கள் எதிர்காலத்தை கட்டுப்படுத்தலாம், மக்களை கட்டுப்படுத்தலாம் என்பது 'வார் ரூம்' அரசியல் அடிப்படை விதிகளில் ஒன்று. அந்தக் காலத்தில் இருந்தே வரலாறு வலியவர்களின் பார்வையில் எழுதப்பட்டு நேரேட்டிவ்கள் உருவாக்கப்பட்டிருந்தாலும், நவீன காலத்தில் ஒருங்கிணைக்கப்பட்ட முறையில் படிப்படியாக நேரேட்டிவ்கள் உருவாக்கப்பட்டதும், அவற்றை ஆழமாக, அகலமாகப் பரப்ப இணையம், ஊடகம் என அனைத்தும் பயன்படுத்தப்பட்டதும் 2010க்குப் பிறகுதான்.

2014 தேர்தலை முன்னிட்டு முதலில் 'பா.ஜ.க. என்றால் வளர்ச்சி அரசியல், காங்கிரஸ் என்றால் வம்ச அரசியல்' என்ற எளிய நேரேட்டிவ்வைத்தான் உருவாக்கியது மோடி -பா.ஜ.க. டீம். அதற்கு முன்பே வைக்கப்பட்ட ஒரு முழக்கம், குற்றச்சாட்டுதான் இது. அதை மெல்ல நாடு முழுவதும் பேசவைத்து, பின்னர் அதற்கு அடுத்தபடிக்குச் சென்றது அந்த டீம். இந்தியாவின்

**கட்ட துணியும், உண்ண உணவுமின்றித் திரிந்த கிழவனின் காரியத்தில் குவிகிறது பட்டுத்துணியும் படையல் விருந்தும்!**

முதல் பிரதமர் நேருவால்தான் இந்தியா அடைய வேண்டிய வளர்ச்சியை அடையாமல்போனது என்று கருத்துரு வாக்கம் செய்ய ஆரம்பித்தது. பிக் பாஸ் நிகழ்ச்சியின் பழைய சீசன் ஒன்றில் ‘எல்லாம் இந்த பரணி பயலாலதாங்கய்யா’ என்று கஞ்சாகருப்பு சொல்லிக்கொண்டேயிருப்பது போல எல்லாவற்றுக்கும் நேருவை இழுத்தார்கள். இன்னொரு கருத்துருவாக்கமும் நடந்தது. காங்கிரஸ் ஆட்சியில் இந்தியா தனது பாரம்பரிய பெருமையை இழந்திருந்தது. அது பா.ஜ.க. ஆட்சியில்தான் மீட்கப்படுகிறது என்பது தான் அது. இப்படிப் பட்ட கருத்துருவாக்கங் களுக்கு ஒரு செயல்முறை இருக்கிறது. யாராவது ஒருவரால் ஒரு பேட்டி யிலோ, செய்தியாளர் சந்திப்பிலோ சொல்லப் படும். அது சமூக ஊடகங்களில் ஏற் கனவே இவர்களுக் காகவே உருவாக்கப் பட்டுள்ள பல அரசியல் பக்கங்களில் விவாதிக்கப் படும். ஆயிரக்கணக்கான போலி அல்லது ஆதரவு கணக்குகள் அந்தக் கருத்து களுக்கு லைக் போடும், ஷேர் செய்யும். அறிவாளிகள், சிந்தனையாளர்கள் என்ற அடையாளம் பெற்றவர்கள், இதற்கு சார்பாக தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் விவா திப்பார்கள். இப்படி தொடர்ந்து பார்க்கும், கேட்கும் ஒருவரை ‘இதுதான் உண்மையோ’ என்றே யோசிக்க வைத்துவிடும்.



‘நேரேட்டிவ்’ கொஞ்சம் வேலை செய்துவிட்டால் அடுத்தகட்டத்துக்குச் செல்வார்கள். அதில் ஒரு செயல்பாடு பெயர்களை மாற்றுதல். அலகாபாத், ப்ரயாக்ராஜாக மாறும்.

உண்மையில் இந்தப் பெயர் அரசியல், பெரிய அரசியல். இங்கு மட்டுமல்ல உலகம் முழுவதும் உள்ள அரசியல். 2003ல் ஜார்ஜ் புஷ் அதிபராக இருந்தபோது ஈராக்கில் அமெரிக்க நடத்திய ராணுவ நடவடிக்கைகளை பிரான்ஸ் எதிர்த்தது. அதை கண்டிக் கும் வகையில் அமெரிக்கா என்ன செய்தது தெரியுமா? ஜார்ஜ் புஷ் அங்கம் வகித்த குடியரசுக் கட்சி மக்கள் பிரதிநிதிகள் பெயர் அரசியலை கையிலெடுத்தனர். அதன் காரணமாக, பல உணவகங்களில் 'ஃபிரென்ச் ஃப்ரைஸ்' எனப்படும் உருளைக்கிழங்கு உணவின் பெயரில் 'ஃபிரென்ச்' நீக்கப்பட்டு 'ஃப்ரீடம் ஃப்ரைஸ்' என்றானது. பயங்கரமான எதிர்ப்பு தானே? இப்போது ட்ரம்ப்பும் பெயர் மாற்றும் படலத்தில் இருக்கிறார். பல பெயர்கள் மாறியிருக்கின்றன. பொதுவாகவே, உண்மையான முக்கியத்துவத்துடன் கவனிக்கப்பட வேண்டிய பல பிரச்சினைகள் இருக்கும்போது மக்களின் உணர்வை தூண்டிவிடுவதில்தான் இவர்கள் ஈடுபடுவார்கள். ஆனால் இந்த 'நேரேட்டிவ்'களின் ஸ்பெஷலே ஓரளவேனும் உண்மையும், மக்களின் உணர்வும் இருந்தால்தான் அவை நிலைக்கும் என்பதுதான்.



சரி, தமிழ்நாட்டுக் கட்சிகள் நேரேட்டிவ் செட் செய்தது இல்லையா?

ஏன் இல்லை? 'அம்மா இட்லி சாப்பிட்டார்' என்பதே நாம் கண்ட அரியதொரு நேரேட்டிவ்தான். 'ஜெயலலிதாவுக்கு எதுவும் தெரியாது, சசிகலாதான் அவரை தவறாக வழி நடத்தினார். ஜெ. ஆட்சியில் நடந்த ஊழல்கள், முறைகேடு களுக்கு சசிகலாதான் காரணம்' என்பதும் ஒரு தரப்பு உரு வாக்கிய நேரேட்டிவ்தான். 'நாடகக் காதல்' என்ற கருத்துரு வாக்கம் பா.ம.க.வின் ஒரு நேரேட்டிவ்தான். நாம் தமிழர் கட்சி உருவாக்க முயலும் நேரேட்டிவ் பெரியாருக்கு எதிரானது.

இந்தியா விடுதலை பெற்ற சில ஆண்டுகளிலிருந்தே ஒன்றிய அரசால் மாநில உரிமைகள் பறிக்கப்படும் என்ற கருத்தும் அரசியலும் இருக்கிறது. அதன் வெற்றிதான் மாநிலக் கட்சிகளின் எழுச்சி. இன்றுவரை வரி வருவாய் பங்கீடு, ஒதுக்கப்பட்ட நிதி நிறுத்தி வைக்கப்படுவது, நாடாளுமன்றத் தொகுதி எண்ணிக்கை மறுசீரமைப்பு என பல உரிமைகள் பறிக்கப்படும் வாய்ப்பு இருந்துகொண்டேயிருக்கின்றது.

நவீன காலத்தில் முறையாக, அரசியலுக்காக, எதிர் காலத்துக்கும் பயன்படும் வகையில் தி.மு.க. உருவாக்கியுள்ள வலிமையான நேரேட்டிவ் 'திராவிட மாடல்' என்பது. 'ஒன்றிய அரசு' என்ற சொல்லாடலில் இருந்து 'இந்தி தெரியாது போடா' என்ற முழக்கம்வரை எல்லாம் இதன் அங்கம். மேலே சொன்னபடி உண்மையும், மக்களின் உணர்வும் இருந்தால் அந்த நேரேட்டிவ் நிலைக்கும். நீங்களே தெரிந்துகொள்ளலாம்.

கடந்த பகுதியில், செய்தி ஊடக உலகில் 'நேரேட்டிவ்' என்பது கெட்டவார்த்தையாக இருக்கவேண்டுமென்று கூறியிருந்தேன். ஏனெனில் நடந்த சம்பவத்தில் உண்மை ஒன்றுதான் இருக்க வேண்டும். அதை நேர்மையாகப் பதிவுசெய்ய வேண்டும். யூ-டியூப் உலகில் பலரும் பல கட்சிகள் சார்பாக ஒரு ஒப்பந்தத்தின் அடிப்படையில் தொடர்ந்து பேசும் பேச்சாளர்கள் ஆகிவிட்டார்கள். பலர் ஒன்றுகூடி பேட்டிகள் மூலமும், சமூக ஊடக பதிவுகள் மூலமும் குறிப்பிட்ட ஒருவருக்கு சாதகமாக நேரேட்டிவ்வை உருவாக்குவார்கள். நீங்கள் உற்றுக் கவனித்தால் சில உண்மைகள் புலப்படும்.

முந்தைய மாநாட்டில், 'மாநாட்டில் தண்ணீர் கூட ஏற்பாடு செய்யவில்லை, தொண்டர்கள் மயக்கம் போட்டனர்! -பெரும் அநீதி, அலட்சியம்!' என்று வந்த செய்தி, அடுத்த மாநாட்டில் 'மாநாட்டு வெயிலில் வெள்ளமென திரண்ட தொண்டர்களில் சிலர் வெயில் தாளாமல் மயங்கினர். அவர்களை பார்க்க பதறிக்கொண்டு மருத்துவமனை சென்றார் செயலாளர். 'என்ன மனசுப்பா' என்று மாறுகிறதென்றால் நேரேட்டிவ் மாறுகிறதென்று பொருள், வார் ரூம் வேலை செய்கிறதென்று பொருள்.

**(தொடரும்)**


www.nakkheeran.in


# நக்கீரன்


## பேரறிஞர் அண்ணாவின் படைப்புகள்

## நக்கீரன் குழுமத்தின் வெளியீடுகள்!























105, ஜானி ஜான்கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை-14 **போன் : 044 2688 1800**

நூல்களை ஆன்லைன் மூலம் பெற **books.nakkheeran.in**

Advt




# புதுக்கட்சிகளின் தேசம்!

## –குழிபறிக்கும் புதுச்சேரி அரசியல்!

புதுச்சேரி சட்டமன்றத்திற்கு பாண்டிச்சேரி மாவட்டத்தில் 23, காரைக்கால் மாவட்டத்தில் 5, மாஹி, ஏனாம் தலா 1 என 30 சட்டமன்ற உறுப்பினர்கள் மக்களால் தேர்வு செய்யப்படுகிறார்கள். இந்த 30 தொகுதிகளுக்கு தேசியக் கட்சிகளான காங்கிரஸ், பா.ஜ.க., மாநில கட்சிகளான என்.ஆர்.காங்கிரஸ், தி.மு.க., அ.தி.மு.க. ஆகியவை தீவிரமாக அரசியல் செய்துவருகின்றன. கம்யூனிஸ்ட்கள், பா.ம.க., வி.சி.க., த.வெ.க. போன்றவை தங்கள் இருப்பை காட்டிவருகின்றன. இக்குட்டி பிரதேசத்தில் இத்தனை கட்சிகள் அரசியல் செய்துவரும் நிலையில், 2026 தேர்தலை முன்னிட்டு மாதம் ஒரு கட்சி எனப் புதிது புதிதாக கட்சிகள் தொடங்கப்பட்டுவருகின்றன.

சில மாதங்களுக்கு முன்பு களமிறங்கிய லாட்டரி அதிபர் மார்ட்டின் மகன் சார்லஸ், லட்சிய ஜனநாயக கட்சியைத் தொடங்கி, புதுவையில் ஆட்சியை பிடிக்கப்போவதாக வலம் வருகிறார். இந்திய வனத்துறை அதிகாரியாக இருந்த சத்யமூர்த்தி, அரசு பணியை ராஜினாமா செய்துவிட்டு அரசியல் களத்திற்கு வந்தவர், பா.ஜ.க. மாநிலத்தலைவர் பதவிக்காக காய்நகர்த்தினார். கவர்னர் கைலாசநாதன் அவருக்கு சப்போர்ட் செய்தார். அவருக்கு பதவி கிடைக்காத நிலையில், எம்.எல்.ஏ. சீட் வாங்கி போட்டியிடுவதற்காக கவர்னர் வழியாக முயற்சி செய்தார். இந்நிலையில் போலிமருந்து விவகாரத்தில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். பின்னர், தனக்கு மஞ்சள் காமாலை எனக் கூறி ஜாமீன் பெற்றவர், பிப்ரவரி 1ஆம் தேதி, 'செங்கோல் நீதி மக்கள் முன்னேற்றக் கழகம்' எனப் புதிதாக கட்சி தொடங்கியுள்ளார்.

உருளையான்பேட்டை தொகுதியில் சுயேட்சையாக நின்று வெற்றிபெற்று எம்.எல்.ஏ.வாக இருப்பவர் நேரு என்கிற குப்புசாமி. இவர் 'மனிதநேய மக்கள் இயக்கம்' என்கிற அமைப்பை நடத்திவந்தார். அதனை இரண்டு மாதத்துக்கு முன்பு 'நமது மக்கள் கழகம்' என அறிவித்துள்ளார். புதுவையில் தலித் போராளியாக தன்னை வெளிப்படுத்திவரும் சுவாமிநாதன், 'புதுச்சேரி மாணவர் கூட்டியக்கம்' என்கிற அமைப்பை நடத்திவந்தார். அவரும் கடந்த மாதம் 'தேசிய மக்கள் முன்னணி' என்கிற கட்சியை தொடங்கியுள்ளார். புதுச்சேரி முன்னாள் எம்.பி. ராமதாஸ் நடத்திவரும் 'புதுச்சேரி மாநில மக்கள் முன்னேற்ற கழக'த்தின் நிர்வாகியாக இருந்த வெங்கட்ராமன், கடந்த மாதம் 'ஆர்.எல்.வி. மக்கள் முன்னேற்றக் கழகம்' என்ற கட்சியை தொடங்கியுள்ளார். இன்னும் பல கட்சிகள் உருவாகுமென்கிறார்கள் புதுவை அரசியல்நோக்கர்கள்.

காங்கிரஸ் கட்சியின் முன்னாள் அமைச்சர் மல்லாடி கிருஷ்ணாராவ், ஆளுங்கட்சியான என்.ஆர்.காங்கிரஸ் -பா.ஜ.க.வுடன் இணக்கமாகிவிட்டார். அவருக்கு புதுச்சேரி அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி பதவி தரப்பட்டுள்ளது. புதுவை மாநில தலைவர் வைத்தியலிங்கம் எதிர்ப்பு தெரிவித்தார். இதையடுத்து, 'புதுச்சேரி மல்லாடி மக்கள் கட்சி' என்ற புதுக்கட்சியைத் தொடங்கத்





மல்லாடி கிருஷ்ணாராவ்


சத்யமூர்த்தி


விக்னேஷ் கண்ணன்

திட்டமிட்டுள்ளார். புதுச்சேரியின் காங்கிரஸ் முகமாக இருந்து பா.ஜ.க.வாக மாறி, 2023-ல் மறைந்த கண்ணனின் மகன் விக்னேஷ், பா.ஜ.க.விலிருந்து விலகி காங்கிரஸ் கட்சியில் இணைந்தும் இணையாமல் உள்ளார். ராஜ்பவன் தொகுதியை குறிவைத்து பணிகள் செய்துவருகிறார். அவரை நாராயணசாமி -வைத்தியலிங்கம் கோஷ்டிகள் இணைந்து எதிர்ப்பதால், தனிக்கட்சி தொடங்க ஆலோசித்துவருகிறார்.

இதுபற்றி புதுவை அரசியல் பிரமுகர் ஒருவரிடம் பேசியபோது, “தனிக்கட்சி தொடங்கிய ஒவ்வொருத் தருக்கும் ஒவ்வொரு நோக்கம் இருக்கு. கடந்த வாரம் பா.ஜ.க. தேர்தல் பொறுப்பாளர் ஒன்றிய அமைச்சர் மன்சுக் மாண்டவியா, முதலமைச்சர் ரங்கசாமியை சந்தித்துப் பேசும்போது, சிட்டிங் பொதுப்பணித்துறை அமைச்சர் லட்சுமிநாராயணன் தொகுதி மற்றும் காரைக்கால் மாவட்டத்தில் முன்னாள் அமைச்சர் சந்திர ப்ரியங்காவின் தொகுதியை கேட்டுள்ளார். அதனை மறுத்தவர், கடந்த தேர்தலில் போட்டியிட்ட தொகுதிகளிலேயே இம்முறையும் எல்லாரும் போட்டியிட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார் என்.ஆர். இதனை புதுவை பா.ஜ.க. விரும்பவில்லை. இதுபோன்ற சிக்கல்களை சமாளிக்கத்தான் இரு கட்சிகளும் மாறி, மாறி புதுக்கட்சிகளை தொடங்கச் செய்கின்றன.

முதலமைச்சர் ரங்கசாமியை மிரட்ட சார்லஸ் மார்ட்டினை புதுவையில் இறக்கியது பா.ஜ.க. அதேபோல் புதுச்சேரியில் பா.ஜ.க.வை ஆட்சியில் அமர்த்த கே.கே. ப்ளான் போட்ட கவர்னர் கைலாசநாதனால் தேர்ந்தெடுக்கப் பட்டவர் சத்யமூர்த்தி. இவர் புதுக்கட்சி தொடங்கியதற்கு பா.ஜ.க. காரணமென்று நினைக்கிறது என்.ஆர்.காங்கிரஸ். அதேபோல் பா.ஜ.க.வை மிரட்ட சுயேட்சை எம்.எல்.ஏ. நேருவை பயன்படுத்திக் கொள்ளும் முதலமைச்சர் ரங்கசாமி, இப்போது அவரை கட்சி தொடங் கச் செய்துள்ளார். என்.ஆர்.சி.யும், பா.ஜ.க.வும் இணைந்து காங்கிரஸ் நிற்கும் தொகுதிகளில் அதனை வீக் செய்யவே மல்லாடியை தனிக்கட்சி தொடங்கச் சொல்கிறார்கள். தனிக் கட்சி துவங்கியுள்ள சுவாமிநாத னுக்கு தலித் வாக்குகளை பிரிக்கவும், அவரை ஒரு தொகுதியில் நிற்கச் சொல்லியும் அசைன்மெண்ட் தந்துள்ளார் பா.ஜ.க. அமைச்சர் நமச்சிவாயம். தனது அப்பா கண்ணனை அரசியலில் ஏமாற்றிய அமைச்சர் லட்சுமிநாராயணனை அரசியல்ரீதியாகத் தோற்கடிப்பதற் காகவே தேர்தலில் நிற்க நினைக் கிறார் விக்னேஷ். இப்படி புதியதாக அரசியல் கட்சிகள் தொடங்கியதன் பின்னால் சிலரின் சுயநலமும், கூட்டணிக் கட்சிகளை மிரட்டும் அரசியலும் இருக்கிறது” விவரித் தார்.

புதுவையின் சட்டமன்றத் தொகுதிகளை விட அரசியல் கட்சிகளின் எண்ணிக்கை அதிகமாகி விடும்போல... மக்கள்தான் பாவம்!

**-து.ராஜா**

www.nakkheeran.in





கீர்த்தனா



பன்னீர்செல்வம்

# உயிருடன் குற்றவாளி! இறந்ததாக போலீஸ் நாடகம்!

## –குன்றத்தூர் பகீர்!

"என் மகளை கொலை செய்த என் மருமகன், தற்கொலை செய்து கொண்டதாகக் கூறிய நிலையில், அவன் உயிருடன் இருப்பது தெரியவந்துள்ளது'' என்றார் குன்றத்தூரை சேர்ந்த பூபதி.

அவர் நம்மிடம், ''நான் எல்.ஐ.சி. ஏஜெண்டாக இருக்கிறேன். எனது மனைவி சாந்தகுமாரி. எங்களுக்கு இரண்டு மகள்கள். எங்கள் முதல் மகள் கீர்த்தனாவுக்கு, பூந்தமல்லியை அடுத்த திருமழிசை பகுதியை சேர்ந்த ஜெகதீஸ்வரன் என்பவரின் மகன் பன்னீர்செல்வத்திற்கு, கடந்த 2017 செப்டம்பர் 9ஆம் தேதி திருமணம் செய்துவைத்தோம். எனது மாப்பிள்ளை, அவருடைய தம்பி மணிகண்டனுடன் சேர்ந்து பில்டிங் காண்ட்ராக்ட் வேலை செய்துவந்தார்கள். என் மகளுக்கு குழந்தை பாக்கியம் இல்லாததால், மாப்பிள்ளை வீட்டாரின் கொடுமைக்கு ஆளானார்.

இந்நிலையில், எனது மாப்பிள்ளையின் தம்பி மணிகண்டனுக்கு திருமணமாகி குழந்தைகள் அடுத்தடுத்து பிறக்க... அதையும் சொல்லிக்காட்டி, எங்கள் மகளை ரொம்பவே கீழ்த்தரமாக நடத்தினார்கள். அதற்கு மேல் மனது பொறுக்காமல், மறுநாளே மாப்பிள்ளை வீட்டுக்கு சென்று, மாப்பிள்ளையின் உறவினர் மனோகர் என்பவரை வைத்து பேசி, எங்கள் மகளை எங்கள் வீட்டிற்கே அழைத்து வந்துவிட்டோம்.

பிப்ரவரி 15ஆம் தேதி, கீர்த்தனாவை பூந்தமல்லியிலுள்ள தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றிருந்தேன். அந்த நேரத்தில் எனது மாப்பிள்ளை பன்னீர்செல்வம் எங்கள் வீட்டிற்கு வந்து என் மனைவியிடம் சண்டை போட்டதால், உடனடியாக திரும்பிவந்து, மாப்பிள்ளையை சமாதானம் செய்து, எங்கள் மகளுக்கு மருத்துவச் சிகிச்சை அளித்த பின்பு, சில நாட்களில் அனுப்புவதாகக் கூறினோம். இந்த நிலையில், அன்று மாலை 5 மணியளவில், என் வீட்டின் முதல் தளத்திலுள்ள அறையில்

கீர்த்தனாவும், மாப்பிள்ளையும் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தனர். திடீரென கீர்த்தனாவின் அலறல் சத்தம் கேட்டு, ஓடிச்சென்று பார்த்தால், வீட்டினுள் தாழ்ப்பாள் போடப்பட்டிருந்தது. அந்த பன்னீர்ச்செல்வம் சட்டை முழுக்க ரத்தக்கறையுடன் பால்கனி வழியாக தப்பி ஓடினார். உடனே எதிர் வீட்டிலுள்ள இளைஞர்களை பால்கனி வழியாக வீட்டினுள் சென்று கதவை திறக்கச்சொன்னோம். அங்கே எங்கள் மகள் கீர்த்தனா கழுத்து அறுக்கப்பட்டு உயிருக்குப் போராடிக்கொண்டிருந்தார்.

மகளைக் காப்பாற்றுவதற்காக குரோம் பேட்டை அரசு மருத்துவமனைக்கும், பின்னர் பார்வதி மருத்துவமனைக்கும் கொண்டுசென்று தீவிர சிகிச்சையளித்தோம். இந்நிலையில், தப்பிச்சென்ற மாப்பிள்ளை பன்னீர்செல்வத்தின் தம்பி மணிகண்டன், ஒரு காரில் மாற்றுத் துணியுடன் குன்றத்தூர் பைபாஸ் அருகே வந்ததாகவும், அங்கு சட்டையை மாற்றிக் கொண்டு, பன்னீர்செல்வம் தப்பிச் சென்றதாக வும் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

அதையடுத்து, குன்றத்தூர் காவல்நிலையத் தில் இன்ஸ்பெக்டர் கண்ணனிடம் புகாரளித் தேன். எஸ்.ஐ. பரத், ஹாஸ்பிடலுக்கு வந்து விசாரித்துச் சென்றார். அடுத்து என் மகளின் உடல்நிலை கோமாவுக்கு சென்றதால் மேல்சிகிச்சைக்காக சென்னை ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, பிப்ரவரி 21ஆம் தேதி மகளின் உயிர் பிரிந்தது. என் மகளை கொலை செய்த பன்னீர்செல் வத்தை போலீசார் கைது செய்யாமல் காலம் கடத்திவந்தனர். இதையடுத்து, முதல்வர் தனிப்பிரிவு, ஹியூமன் ரைட்ஸ் கமிஷன், மத்திய, மாநில மகளிர் அமைப்பிற்கும் புகாரனுப்பியும் எந்த பலனும் இல்லை.


பூபதி

இந்த நிலையில் கடந்த 2021, மார்ச் 31ஆம் தேதி, பன்னீர்செல்வம் அடையாளம் தெரியாத பிணமாக மதுரையை அடுத்த கே.புதூர் அருகேயுள்ள கால்வாயில் பிணமாக மீட்கப்பட்டதாக தகவல் கிடைத்தது. அப்போது அவரின் ரத்த மாதிரிகளை டி.என்.ஏ. டெஸ்டுக்கு அனுப்பியதாகவும், பிணத்தை பன்னீர்செல்வத்தின் தம்பி மணிகண்டன் அடையாளம் காட்டியதாகவும், பின்னர் தகனம் செய்ததாகவும் கூறப்பட்டது. இதையடுத்து வழக்கு கிடப்பில் போடப்பட்டது. இந் நிலையில், குன்றத்தூர் இன்ஸ்பெக்டர் கண்ணன் மாற்றப்பட்டு சந்துரு என்பவர் வந்தார். அவரிடம் முறையிட்டும் பலனில்லை. இந்நிலையில், டி.என்.ஏ. டெஸ்ட்டுக்கு சென்ற பன்னீர்செல்வத்தின் ரத்த மாதிரி முடிவை எங்களுக்கு தராததால், அதனை பெறுவதற்கு கோர்ட் வழியாக தகவலறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் முயன்றதில், காவல்துறை அளித்த பதிலில், பன்னீர்செல்வத்தின் ரத்த டி.என்.ஏ., அவரது பெற்றோரின் டி.என்.ஏ.வுடன் ஒத்துப்போகாதது தெரியவந்தது. எனவே என் மகளை கொன்ற பன்னீர்செல்வம் எங்கோ மறைந்து வாழ்வது ஊர்ஜிதமாகிறது. அதற்கு உடந்தையாக காவல்துறையும் இருப்பது வேதனையளிக்கிறது.

அப்படியானால் கால்வாயில் இறந்து கிடந்தவர் யார்? யார் அதைப் பார்த்து தகவல் தெரிவித்தது? மணிகண்டன் ஏன் தவறாக வாக்குமூலம் அளித்தார்? போலீசார் லஞ்சம் வாங்கிக்கொண்டு குற்றவாளியை மறைக்கப் பார்க்கிறார்களா? என பல கேள்விகள் எழுகின்றன. எங்கள் மகளின் கொலைக்கு நீதி வேண்டும்” என்றார் கீர்த்தனாவின் தந்தை பூபதி.

குன்றத்தூர் காவல்நிலையத்தில் விசாரித்த போது, ‘இவ்வழக்கை விசாரித்த ஆய்வாளர்கள் கண்ணன், சந்துரு இடமாற்றம் செய்யப்பட் டுள்ளதாகவும், பன்னீர்செல்வம் தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், தற்போதைய காவல்துறை ஆய்வாளர் தெரிவித்தார்.

குற்றவாளியை கைது செய்யாமல், இறந்துவிட்டதாக நாடகமாடுவதன் பின்னணியில் யாரெல்லாம் இருக் கிறார்கள் என்பது தெரியவேண் டும், குற்றவாளி கைது செய்யப் பட வேண்டும். அதுவே நீதி!

-அரவிந்த்

# குவாரிகளால் குவிந்த மலைகள்!

## – நிலநடுக்க அச்சத்தில் விருதுநகர் மாவட்டம்!

விருதுநகர் மாவட்டத்தில் செயல்படும் கல் குவாரிகள் குறித்து புதிய சர்ச்சை எழுந்துள்ளது. ஆளும் கட்சியுடன் கூட்டணியிலுள்ள ஒரு அரசியல் கட்சி, மாவட்ட ஆட்சியரிடம் புகார் மனு அளித்து பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளது. ‘மாவட்டத்தின் பல இடங்களில் குவாரிகள் அத்துமீறி செயல்படுகின்றன என்றும், அதனால் பொதுமக்கள் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றனர்’ என்றும் அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

மேலும் அதில், குவாரி பணிகள் நிறுத்தப்பட்ட பிறகும் தோண்டப்பட்ட ஆழமான பள்ளங்கள் பாதுகாப்பின்றி திறந்தவண்ணம் விடப்பட்டுள்ளன. சிவகாசி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் பல லட்சம் சதுர அடிகள் பரப்பளவில் நிலம் வெட்டியெடுக்கப் பட்டுள்ளது. இதனால் நிலத்தின் இயற்கை சமநிலை பாதிக்கப்பட்டுள்ளது. உலகின் பல பகுதிகளில் நிலநடுக்கங்கள் ஏற்படுகின்றன; அதுபோல இங்கும் மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட வாய்ப்புள்ளது. பொதுமக்களின் உயிர் மற்றும் சொத்து பாதுகாப்பை உறுதிசெய்ய உடனடி ஆய்வு நடத்தி, விதிமுறைகளை மீறும் குவாரி நிர்வாகிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும். தோண்டப்பட்ட பள்ளங்களை அவசரமாக மூட வேண்டும்” என்று கோரப்பட்டுள்ளது.

இதுகுறித்து சமூக ஆர்வலர் விஜயகுமார் நம்மிடம், “ஒரு குவாரிக்கு உரிமம் வழங்கும்போது வேலை முடிந்தபின் அந்த இடத்தை பாதுகாப்பானதாக மாற்றவேண்டும் என்பது அடிப்படை நிபந்தனையாகும். தோண்டப்பட்ட பள்ளங்களை நிரப்புதல், நிலத்தை சமப்படுத்துதல், மீண்டும் பயன்படக்கூடிய வகையில் மாற்றுதல் போன்றவை உரிமையாளர்களின் பொறுப்பாகும். இது வெறும் நடைமுறை விதி அல்ல, மக்களின் உயிர் பாதுகாப்பை உறுதி செய்யும் கடமையாகும்.

சுரங்கத் துறையை ஒழுங்குபடுத்தும்



குவாரிகள்

**ஓடும் நதி எப்படி திரும்பிப் பார்ப்பதில்லையோ... அதேபோல கடந்தகால கவலைகளைத் திரும்பிப் பார்க்காமல் நிகழ்காலத்தில் வாழுங்கள், மனம் தெளிவாகும்!**



சட்டங்களும், மாநில விதிகளும், குவாரி பணிகள் முடிந்த பின் நிலத்தை அப்படியே கைவிடக் கூடாது எனத் தெளிவாகக் கூறுகின்றன. உரிய அனுமதியின்றி அந்த இடத்தை விட்டு வெளியேறுவது விதிமுறை மீறலாகும். பள்ளங்கள் மூடப்படாமல் இருந்தால் மழைநீர் தேங்கி நிலத்தடி நீர் பாதிப்பு, விவசாய நிலங்கள் சேதம், நிலச்சரிவு அபாயம் போன்ற பிரச்சினைகள் உருவாகலாம். இதனால் சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டங்களின் கீழும் நடவடிக்கை எடுக்க முடியும்" என்றார்.

ஆனால், இதற்கு மாறான விளக்கத்தை சுரங்கத் துறை தரப்பு முன்வைக்கிறது. விருதுநகர் புவியியல் மற்றும் சுரங்கத் துறை உதவி இயக்குநர் முனைவர் சகதா ரஹிமா நம்மிடம், "இந்த நிலநடுக்கம் மனிதர்களால் உருவானது அல்ல. இது இயற்கையாக பூமிக்குள் உள்ள பழமையான பாறைப்பிளவுகள் காரணமாக ஏற்பட்ட அதிர்வு. விருதுநகர் -ஸ்ரீவில்லிபுத்தூர் -வைப்பாறு பகுதிகளையொட்டிய நிலப்பரப்பில், பல லட்சம் ஆண்டுகளாக இருந்துவரும் பாறைப்பிளவு மண்டலம் (Fault Zone) உள்ளது. பூமிக்குள் ஆழத்திலிருக்கும் இந்த பாறை அடுக்குகள் மிக வும் சிறிய அளவில் நகரும்போதுதான் இத்தகைய லேசான நிலஅதிர்வுகள் உருவாகின்றன.

குவாரிகள் தோண்டப்படுவது அதிகபட்சம் 40 முதல் 50 மீட்டர் ஆழம்வரை மட்டுமே. ஆனால் நிலநடுக்கம் ஏற்படக் காரணமான பாறை நகர்வுகள் 10 முதல் 100 கி.மீ. ஆழத்தில் நடக்கின்றன. அதனால், குவாரி தோண்டுதல் மற்றும் நிலநடுக்கம் இரண்டுக்கும் எந்த நேரடி தொடர்பும் இல்லை.

எல்லா வகை சுரங்கங்களுக்கும் ஒரே விதிமுறை கிடையாது. நிலக்கரி அல்லது சுண்ணாம்புக் கல் சுரங்கங்களில் தோண்டிய பின் மண்ணால் நிரப்பி மூடும் நடைமுறை உள்ளது. ஆனால் கிரானைட் மற்றும் ரஃப்ஸ்டோன் (கட்டிடக் கல்) குவாரிகளுக்கு அப்படி பூர்த்தி செய்து பழைய நில அமைப்பாக மாற்றவேண்டும் என்ற கட்டாய விதி இல்லை. காரணம், இங்கு பெரும்பாலும் கல் மட்டுமே எடுக்கப்படுகிறது. கல் எடுத்த இடத்தை மீண்டும் மண்ணால் நிரப்பினாலும், அது இயல்பான நிலமாக மாறாது.

குவாரி பகுதிகளுக்கு வெளியே மலை போல் குவிந்திருக்கும் கற்கள் வேஸ்ட் என்று பலர் நினைத்தாலும், அவை முழுமையாகப் பயனற்றவை அல்ல. அவை கிரானைட் வேஸ்ட் எனப்படும் துணைக்கற்கள். இவற்றை அரைத்து எம்-சாண்ட் (M-Sand) தயாரிக்க அரசு அனுமதி வழங்கியிருக்கிறது.

செயல்படாத குவாரிகளைச் சுற்றி பாதுகாப்பு வேலி அமைக்க வேண்டும் என்ற நடைமுறைகள் உள்ளன. சில இடங்களில் அவை நடைமுறையில் இருக்கும்; சில இடங்களில் அனுமதி, வழக்கு போன்ற காரணங்களால் தாமதப்படலாம். இருப்பினும், பெரும்பாலான குவாரிகள் மனிதர்கள் அடிக்கடி செல்லும் இடங்களில் அல்ல; இயற்கையாகவே உயர்ந்த பாறைப் பகுதிகளில் அமைந்தவை என்பதால் ஆபத்து மிகவும் குறைவு.

சமீபத்தில் இங்கு பதிவான அதிர்வு ரிக்டர் அளவையில் சுமார் 3 மட்டுமே. இது மனிதர்கள் லேசாக உணரக்கூடிய அளவு தான்; பெரிய சேதத்தை ஏற்படுத்தக்கூடிய அளவு அல்ல. இமயமலைப் பகுதிகளைப் போல அடிக்கடி பெரிய நிலநடுக்கங்கள் ஏற்படும் மண்டலமாக இந்தப் பகுதி கருதப்படவில்லை. இங்கு நிலத்தட்டு ஒப்பீட்டள வில் உறுதியாக உள்ளது. அதனால் மக்கள் தேவை யற்ற அச்சத்தில் இருக்க வேண்டிய அவசியமில்லை.

சமீபத்திய நிலநடுக்கம் இயற்கையான பாறை இயக்கத்தால் ஏற்பட்டது; கிரானைட் குவாரிகள் காரணமில்லை. பழைய குவாரிகள் மூடப்படாமல் இருப்பதற்கும் தனித்தனி சட்ட, தொழில்நுட்பக் காரணங்கள் உள்ளன. வெளியே குவிந்திருக்கும் கற்களும் எதிர்காலத்தில் பயன்படும் வளமாகவே பார்க்கப்படுகின்றன. பொதுமக்கள் வதந்திகளை நம்பாமல் அதிகாரப்பூர்வ தகவல்களை மட்டுமே நம்ப வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

இதனால், ஒரு பக்கம் மக்கள் மற்றும் சமூக அமைப்புகள் பாதுகாப்பு அச்சமெழுப்ப, மறுபக்கம் அதிகாரிகள், இயற்கையே காரணம் என விளக்க மளிக்கின்றனர்.

மூடப்படாத குவாரிகள் குறித்து எழுந்துள்ள கேள்வி களுக்கு அரசுத் தரப்பி லிருந்து பதில் வருமா என்பதே பொதுமக்க ளின் எதிர்பார்ப்பாக உள்ளது.



விஜயகுமார்

**-ராம்கி**

எதுவும் தாமதமாகிவிடவில்லை, இந்த இடத்தில் ஆரம்பித்தால் சு
எவ்வளவோ உயரங்களுக்கு செல்ல முடியும்!

## இரண்டாவதும் கான்!

'ஜவான்' படம் மூலம் பாலிவுட்டில் காலடி வைத்த நயன்தாரா, அதன் பிறகு எந்த படத்திலும் அங்கு கமிட்டாக வில்லை. ஷாருக்கானுடன் நடித்தும் பெரிதாக வாய்ப்பு வரவில்லையே என்ற கவலை அவருக்கு இருந்தது. அது தற்போது தீர்ந்துள்ளது. அவருக்கு மீண்டும் ஒரு கான் நடிகருடன் நடிக்கும் வாய்ப்பு வந்துள்ளது. அந்த கான் சல்மான்கான் என்கிறது பாலிவுட் வட்டாரம். அவர் நடிக்கும் புது படத்தில் நாயகியாக நடிக்க நயன்தாரா சம்மதம் தெரிவித்துள்ளார். இதில் வில்லனாக அரவிந்த்சாமி நடிக்க, தில்ராஜு தயாரிக்கவுள்ளார். இயக்குநராக 'வாரிசு' பட இயக்குநர் வம்சி பைடிப் பள்ளி இயக்குகிறார். இந்த புது கூட்டணி ரசிகர்கள் மத்தியில் எதிர்பார்ப் பை உருவாக்கியுள்ளது. பாலிவுட்டில் தனது இரண்டாவது படமும் கான் நடிகருடன் அமைந்ததால் பெரும் மகிழ்ச்சியில் நயன்தாரா இருக்கிறார்.



நயன்தாரா

## மீண்டும் நாயகி!

ஒருகாலத்தில் நாயகியாக வலம்வந்த பிரியாமணி, தற்போது பல படங்களில் முக்கிய கதாபாத்தி ரத்திலும், சில படங்களில் லீட் ரோலிலும் நடிக்கிறார். இந்தச் சூழலில் நாயகியாக ஒரு படத்தில் கமிட்டாகியுள்ளார். தெலுங்கில் சிரஞ்சீவி நடிப்பில் பாபிகொல்லி இயக்கத்தில் உருவாகும் புது படத்தில் நாயகியாக நடிக்கவுள்ளார். இப் படத்தில் ஏற்கனவே கிரித்தி ஷெட்டி சிரஞ் சீவி மகள் கதாபாத்தி ரத்தில் கமிட்டாக இருந் தார். இசை ஏ.ஆர் ரஹ்மான். இப்படத்திற்கு பிறகு பெரிய நடிகர்களின் படங்களில் தனக்கு ஹீரோ யின் வாய்ப்பு கிடைக்கும் என நம்புகிறாராம் பிரியா மணி.

## புது இயக்குநர்!

'பார்க்கிங்', 'லப்பர் பந்து', 'டீசல்' என ஒவ்வொரு படத்திற்கும் வித்தியாசமான
தேர்ந்தெடுத்து தனக்கென ஒரு
வாக்கியுள்ளார் ஹரிஷ் கல்யாண்.
இப்போது 'தாஷமக்கான்' எனு
பாடகர் வேடத்தில் நடிக்கிறாரா
திரைக்கதை எழுத்தாளர் தமிழ்பிர
ஒரு படத்தில் நடிக்கவுள்ளார்.
வித்தியாசமான கதைக்களத்தி
இப்படம் மூலம் தமிழ் பிரபா
அறிமுகமாகிறார். இவர் பா.ரஞ்
பணியாற்றிய ஒரு பத்திரிகையாள
பிடத்தக்கது. 'சார்பட்டா பரம்பரை
'தங்கலான்' உள்ளிட்ட படங்களி
எழுத்தாளராக பணியாற்றியிருக்
'காந்தா', 'சொர்க்கவாசல்' உள்ளி
பணியாற்றியிருக்கிறார்.

## பிஸி நாயக

சிவகார்த்திகேயன் லைன
மாற்றங்கள் நடந்து வருகிறது. 'ப
தொடர்ந்து சிபி சக்கரவர்த்தி
நடிக்கவிருந்தார். ஆனால் அவர்
இயக்க சென்றுவிட்டார். இதனா
இயக்கத்தில் நடிக்கவுள்ளார். இத
காயத்ரி, 'குட் நைட்' இயக்குநர்
சேகரன், 'பார்க்கிங்' இயக்குநர்
கிருஷ்ணன் என இன்னும் சில
பேச்சுவார்த்தை அடிப்படையில் ஒ
ஒப்புக் கொண்டிருக்கிறார். அ
தற்போது இன்னொரு தமிழ் இய
தில் பேச்சுவார்த்தை அடிப்படையில்
ஒப்புக்கொண்டுள்ளார். அப்படத்தி
'தாய் கிழவி' படத்தின் இயக்குநர்
முருகேசன். இவரிடம் அண்மையில்
கேட்ட சிவகார்த்திகேயன், உட
நடிக்க ஒப்புக்கொண்டுள்ளார். கி
பின்னணியில் குறுகிய தயாரி
இப்படத்தை தயாரிக்க திட்ட
டுள்ளார்களாம். தற்போது வெங்க
பிரபு இயக்கத்தில் நடித்துவரும்
சிவகார்த்திகேயன், ஒரே
சமயத்தில் இந்தப் படத்திலும்
நடிக்கவுள்ளாராம்.

கூட இன்னும்

கதைக்களத்தை
இமேஜை உரு
அந்த வகையில்
ம் படத்தில் ராப்
ம். இதையடுத்து
ரபா இயக்கத்தில்
இப்படமும் ஒரு
ல் உருவாகிறது.
இயக்குநராக
சித் பட்டறையில்
ர் என்பது குறிப்
', 'ப்ளூ ஸ்டார்',
ல் திரைக்கதை
க்கிறார். மேலும்
ட்ட படங்களிலும்

ன்!

னப்பில் அடிக்கடி
ராசக்தி' படத்தை
தி இயக்கத்தில்
ரஜினி படத்தை
ல் வெங்கட்பிரபு
னிடையே புஷ்கர்
விநாயக் சந்திர
ராம்குமார் பால
இயக்குநர்களிடம்
ஒரு படம் நடிக்க
அந்த வகையில்
யக்குநர் இயக்கத்
ஒரு படம் நடிக்க
பின் இயக்குநர்
சிவக்குமார்
ஒரு கதை
டனடியாக
ராமத்து
ப்பில்
மிட்
ட்

## ஆண்ட்ரியா வருத்தம்!

ஆண்ட்ரியா நடிப்பில் நீண்டகாலமாக ரிலீஸுக்கு தயாராகியும் வெளியாகாமல் இருக்கும் படம் 'கா.' இதில் லீட் ரோலில் ஆண்ட்ரியா நடித்துள்ளார். சமீபகாலமாக அவர் சரிவை சந்தித்து வருவதால் அவர் நடிப்பில் வெளியான 'மாஸ்க்' படத்தை பெரிதும் நம்பியிருந்தார். அதில் புதிதாக தயாரிப்பாளர் அவதாரமும் எடுத்திருந்தார். ஆனால் அப்படம் எதிர்பார்த்த வெற்றியை பெறவில்லை. இதனால் வருத்தத்திலிருக்கும் அவர், தற்போது 'கா' படத்தை பெரிதும் நம்பியிருக்கிறார். தனக்கு ஒரு வெற்றி தேவைப்படுவதால் இப்படம் அதை பூர்த்தி செய்யும் என நம்புகிறாராம் ஆண்ட்ரியா.

-கவிதாசன் ஜெ.



ஆண்ட்ரியா

www.nakkheeran.in

# யாருக்கு சீட்?

## –கிருஷ்ணகிரி மாவட்ட நிலவரம்!



கே.பி.முனுசாமி

ஒருபுறம் கூட்டணிகள் உறுதியாகிவரும் நிலையில், மறுபுறம் எந்தத் தொகுதியில் யாரை நிறுத்துவது என வேட்பாளர் தேர்விலும் கட்சிகள் மும்முரம் காட்டுகின்றன. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஒவ்வொரு கட்சியும் யாரை வேட்பாளர்களாகப் பரிசீலித்து வருகிறதெனப் பார்ப்போம்.

கிருஷ்ணகிரி மாவட்டம் 6 சட்டமன்றத் தொகுதிகளை உள்ளடக்கியது. இந்த ஆறு தொகுதிகளிலும் அ.தி.மு.க., தி.மு.க. இரு கட்சிகளுக்கும் இடையிலேதான் போட்டியாக இருந்துள்ளது.



ஓய்.பிரகாஷ்



அசோக் குமார்

கடந்த சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. ஆட்சியைப் பிடித்திருந்தாலும் கிருஷ்ணகிரியில் பர்கூர், ஓசூர் இரு சட்டமன்றத் தொகுதி களையே வெற்றிபெற்றிருந்தது. மற்ற 3 தொகுதி களில் 2-ல் அ.தி.மு.க.வும், ஒரு தொகுதியில் கம்யூனிஸ்ட் கட்சியும் வெற்றி பெற்றிருந்தன. இந்த சூழ்நிலையில்தான் கிருஷ்ணகிரி மாவட்டத்தை தி.மு.க. கோட்டையாக மாற்ற அப்போது பர்கூர் சட்டமன்றத் தொகுதியில் வெற்றிபெற்ற மதியழகனை மாவட்ட செயலாளராக நியமித்து கட்சியை இம் மாவட்டத்தில் அடுத்தகட்டத்துக்கு கொண்டு செல்லத் திட்டமிட்டது தலைமை.



ராமச்சந்திரன்




சம்பங்கி

அதன்படி தற்போது தி.மு.க. மா.செ.வான மதியழகன் கிருஷ்ணகிரி ஒட்டுமொத்த நிர்வாகிகளையும் ஒருங்கிணைத்து கட்சியைப் பலப்படுத்தி, வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் ஆறு தொகுதிகளிலும் வெற்றி பெறும் அளவுக்கு தி.மு.க.வையும் கூட்டணிக் கட்சிகளையும் ஒருங்கிணைத்து வருகிறார். கிருஷ்ண கிரியின் ஆறு சட்டமன்றத் தொகுதிகளுக்கும் மையமாக இருப்பது கிருஷ்ணகிரி. இத்தொகுதியில் சென்றமுறை முன்னாள் மா.செ.வான செங்குட்டுவன் நின்று தோற்றுப்போனார், அ.தி.மு.க. வெற்றிபெற்றது.



**யதார்த்தமான நல்ல மனிதர்கள் வாழ்க்கையில் எளிதில் காயமடைகிறார்கள்; ஏனெனில் அவர்கள் தவறான மனிதர்களை நம்புகிறார்கள்!**

இந்த முறை மா.செ.வான மதியழகனுக்கே சீட் என பேசப்பட்டாலும், தி.மு.க. தலைமையோ சிட்டிங் எம்.எல்.ஏ.க்களை மீண்டும் அங்கே நிறுத்துவதாக இருக்கும் பட்சத்தில், அ.தி.மு.க. கோட்டையான பர்கூரில் மதியழகனே நின்றால்தான் வெல்லமுடியும் என்பதாலும் பர்கூரில் அவருக்கே வாய்ப்பு கிட்டும். ஆகையால் கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதியை ஏற்கனவே நின்று தோற்றுப்போன முன்னாள் மா.செ. செங்குட்டுவன் கேட்டுவருகிறார். அதேவேளையில் கிருஷ்ணகிரி மண்ணின் மைந்தனும் ஆசிரியருமான, பி.டி.அன்பரசுவும் ரேஸில் உள்ளார்.


மாதேஷ்


மதியழகன்


செங்குட்டுவன்

அ.தி.மு.க.வில் சிட்டிங் எம்.எல்.ஏ.வும், மா.செ.வுமான அசோக்குமாருக்கு மீண்டும் சீட் என்பது உறுதிசெய்யப்பட்ட ஒன்றாக உள்ளது. இவர் கே.பி.யின் நம்பிக்கைக்குரியவராகவும் விசுவாசியாகவும் வலம்வருகிறார். தி.மு.க.வுக்கு டஃப் கொடுக்க, இவரை விட வேறு யாரும் இருக்கமுடியாது எனுமளவுக்கு களப்பணி இருக்கும். நாம் தமிழர் கட்சியில் கிருஷ்ணகிரியில் எம்.பி. தேர்தலில் போட்டியிட்ட வீரப்பன் மகள் வித்யா நிற்பதாக இருந்த நிலையில், தலைமையோ மேட்டூர் சட்டமன்றத் தொகுதியை முன்கூட்டியே அறிவித்த காரணத்தால், விண்வெளி ஆராய்ச்சியாளரும் மாவட்டப் பொறுப்பாளருமான தம்பிதுரைக்கு வாய்ப்பு என்கிறார்கள். த.வெ.க. கட்சியில் மாவட்டப் பொறுப்பாளர்களில் ஒருசிலருக்கே சீட் என்பதாகவும், பொறுப்பு இல்லாதவர்களுக்கு வாய்ப்பு வழங்குவதாக திட்டமிட்டுள்ளது. ஈரோடு முதல் கிருஷ்ணகிரிவரை செங்கோட்டையன் தேர்வுசெய்து தலைமைக்கு வேட்பாளர் பட்டியல் அனுப்பும்நிலையில், அ.தி.மு.க.விலிருந்து விலகி, த.வெ.க. வந்த எக்ஸ் சேர்மன் மதுவுக்கு வாய்ப்புள்ளதாம். மத்திய மாவட்ட பொறுப்பாளரான சுரேஷுக்கும் வாய்ப்புள்ளதாகச் சொல்லப்படுகிறது.

ஓசூர் சட்டமன்றத் தொகுதிக்கு தி.மு.க. சார்பில் சிட்டிங் எம்.எல்.ஏ.வான ஒய். பிரகாஷுக்கு மீண்டும் சீட்டு உறுதியாகியுள்ளது. அதுமட்டுமில்லாமல் அப்பகுதி மக்களிடம் நற்பெயரையும் இளைஞர்களின் அன்பையும் சம்பாதித்து அப்பகுதியை தன் கட்டுப்பாட்டில் வைத்துள்ளார். அடுத்தபடியாக ஓசூர் மாநகராட்சி மேயராக இருந்துவரும் சத்யாவுக்கு வாய்ப்புள்ளதாகச் சொல்லப்படுகிறது. அதேபோல் தற்போது கவுன்சிலராக இருக்கும் மாதேஷும் சீட் எதிர்பார்க்கிறார். இவர் தொகுதி மக்களிடத்தில் நன்கு அறிமுகமானவர். மேலும் கவுன்சிலர் பதவியில் நலத்திட்ட பணிகளில் சிறப்பாக பணியாற்றி, நல்லபெயர் எடுத்துள்ளார். அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் பாலகிருஷ்ண ரெட்டிக்கு சீட் உறுதி. இருந்தாலும், கூட்டணிக் கட்சியான பா.ஜ.க.வும் இந்தத் தொகுதி தனக்கு வேண்டும் என முட்டி மோதிவருகிறது. அந்த வகையில் மாநிலப் பொறுப் பாளரான நாகராஜ் சீட் கேட்டுள்ளாராம். த.வெ.க. தொழிலதிபரான மஞ்சுநாத்துக்கு வாய்ப்பு என்கிறார்கள். மேலும் அ.தி.மு.க.விலிருந்து வந்த சம்பங்கிக்கும், மதுவுக்கும், வேப்பன ஹள்ளி கிருஷ்ணகிரி தொகுதிகளில் வாய்புள்ளதால் நிச்சயம் மஞ்சுநாத்துக்கு ஓசூரில் வாய்ப்புண்டு என்கிறார்கள். நாம் தமிழர் கட்சியில் சென்றமுறை நின்று தோற்றுப்போன கீதா லட்சுமிக்கே வாய்ப்பு என பேசப்படுகிறது.

வேப்பனஹள்ளி சட்டமன்றத் தொகுதியில் அ.தி.மு.க. சார்பில் சிட்டிங் எம்.எல்.ஏ.வான கே.பி.முனுசாமிக்கு வாய்ப்பு கிட்டும். அ.தி.மு.க. மற்றும் பா.ம.க. கூட்டணி இருக்கும் சூழ்நிலையில் வன்னியர் சமூக வாக்கு அதிகமாக உள்ள பகுதி என்பதாலும், பா.ம.க.வுக்கு தர்மபுரியில் சீட்டு கொடுப்பதால் இங்கு

www.nakkheeran.in

**நேற்று என்பது பழைய பேப்பர், இன்று என்பது நியூஸ் பேப்பர், நாளை என்பது கொஸ்டின் பேப்பர், வாழ்க்கை என்பது ஆன்சர் பேப்பர் -கவனமாக எழுதுங்கள்... வெற்றி உங்களுக்கே!**

அ.தி.மு.க.வுக்கே வாய்ப்பு என்பதாலும் கே.பி. மீண்டும் அங்கே நிற்கவே ஆசைப்படுகிறார். தலைமையும் அதற்கு செவிசாய்த்துள்ளதாம். தி.மு.க. சார்பில் இத்தொகுதியில் கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதியின் தற்போதைய மா.செ. மதியழகனுக்கு ஒதுக்கப்படும் நிலையில் முன்னாள் மா.செ. தனக்கு வேப்பனஹள்ளி கிடைத்தால் ஓ.கே. என சொல்லியுள்ளாராம். மேலும் ஏற்கனவே அதே தொகுதியில் நின்று தோற்றுப்போன முருகன் வன்னியர் சமூகம் என்பதால், மீண்டும் அவருக்கு வாய்ப்பு கிடைக்குமா என காத்துக் கிடக்கிறார். இந்த சூழ்நிலையில் இளைஞர்களுக்கு வாய்ப்பு என்ற துணை முதல்வரின் கருத்தின் அடிப்படையில், மாநில இளைஞரணி துணைச்செயலாளர் சீனிவாசன் இத்தொகுதி வேண்டும் எனக் கேட்டுவருகிறார். உதயநிதியுடனே பயணிக்கும் அவருக்கும் சீட் கிடைக்க சாத்தியமிருக்கிறது. இச்சூழ்நிலையில் யாருக்கு சீட்டு என்பதில் அவரவர் திறமைக்கேற்ப தலைமையிடம் முட்டிமோதுகிறார்கள். அ.தி.மு.க.விலிருந்து விலகி த.வெ.கவில் இணைந்த சம்பங்கிக்கு வாய்ப்பு கிடைக்கலாம் என்கிறார்கள். சசிகலா பெங்களூரு சிறையிலிருந்து தமிழகம் திரும்பும்போது அவர் வந்த கார் பல சிக்கல்களுக்கு உள்ளாகியது. அந்த கார் இந்த சம்பங்கியுடையதுதான். நாம் தமிழர் கட்சியில் சென்றாண்டு வாய்ப்பு கொடுக்கப்பட்ட சக்திவேலுக்கே இம்முறையும் வாய்ப்பு,


மாலதி


லாவண்யா


பரிதா நவாப்

**ப**ர்கூரில், தி.மு.க. சார்பில் சிட்டிங் எம்.எல்.ஏ.வான மதியழகனுக்கு கிருஷ்ணகிரியை ஒதுக்கவுள்ளதால், தலைமையின் அடுத்தகட்ட பார்வை மாவட்ட சேர்மன் தட்ரள்ளி நாகராஜ் மீதுள்ளது. மாவட்ட சேர்மன் பதவி வகித்தவர், தற்போது அடுத்தகட்டமாக இந்த சீட்டிற்கு காய்நகர்த்தியுள்ளார். ஆனாலும் பலருக்கு இவரது நகர்வு பிடிக்கவில்லை. ஆகையால் ஊத்தங்கரை சேர்மனான குமரேசனுக்கு வாய்ப்புள்ளது. அ.தி.மு.க. எம்.பி. தம்பிதுரையின் மகள் லாஸ்யாவுக்கு பர்கூரில் வாய்ப்புள்ளதாகச் சொல்லப்படுகிறது. தி.மு.க.விலிருந்து விலகி அ.தி.மு.க. வந்த பரிதா நவாப்புக்கும் பர்கூர் மீது ஒரு கண்ணிருக்கிறது. மக்கள் செல்வாக்கு இருப்பதாலும் இவருக்கு வாய்ப்பு கிட்டும். த.வெ.க.வில் முரளிதரனுக்கு வாய்ப்புள்ளதாம். மா.செ. என்பதே இவரது பலம்.

தளி, தி.மு.க. கூட்டணிக் கட்சியான கம்யூனிஸ்ட் கட்சிக்கே என்பது எழுதப்படாத நியதியாக இருந்துவருகிறது. இந்தமுறையும் தளி ராமச்சந்திரனுக்கே இங்கு சீட். அ.தி.மு.க. கூட்டணியில் பா.ஜ.க.வுக்கு வழங்கவும் வாய்ப்பு. இதனால் பா.ஜ.க. நாகராஜுக்கு இங்கு சீட் கிட்டும். இல்லையெனில் பா.ம.க.வுக்கு வழங்கப்படலாம். அ.தி.மு.க.விலிருந்து விலகி அ.ம.மு.க. சென்று தற்போது த.வெ.க. சென்றுள்ள அன்வர் பாஷாவுக்கு சீட் எனச் சொல்லப்படுகிறது.

**ஊ**த்தங்கரை தனித்தொகுதி சென்ற முறை தி.மு.க.வில் கூட்டணிக் கட்சியான காங்கிரஸுக்கு கொடுக்கப்பட்டது.

அதேபோல கொடுத்தால் இந்த முறையும் ஆறுமுகத்திற்கே வாய்ப்பு. வி.சி.க.வுக்கு கொடுக்கப்படுமாயின் மா.செ.வான குபேந்திரனுக்கும், மண்டலப் பொறுப்பாளரான அசோகனுக்கும் வாய்ப்புள்ளதாகச் சொல்லப்படுகிறது. இந்த முறை தி.மு.க. வாய்ப்பு கொடுத்தே ஆகணும் என ஒற்றைக்காலில் நிற்கும் உடன்பிறப்புகளால் மாவட்ட துணைச் செயலாளரான ஆசிரியர் சந்திரனுக்கு சீட் கிடைக்கலாம். மருத்துவர் கந்தசாமி, மருத்துவர் மாலதி, லயோலா சேகர் இன்னும் சிலர் முட்டிமோதுகின்றனர். அ.தி.மு.க. சார்பில் சிட்டிங் எம்.எல்.ஏ.வான தமிழ்ச்செல்வனுக்கும், மருத்துவர் இளையராஜாவுக்கும் வாய்ப்புள்ளதாகச் சொல்லப்படுகிறது.

-சே



Dia BOOSTER
a Food Supplement
IMPROVES ENERGY, STRENGTH, STAMINA
டயா பூஸ்டர்™
சர்க்கரை நோயாளிகளின் அக்கறையான உணவு
கேப்சூல் வடிவில்
MONEY BACK 100% GUARANTEED
டயா பூஸ்டர் ஒரு சர்க்கரை நோய்கான உத்தரவாதம்
சர்க்கரை நோய்க்கு
Bye Bye சொல்லுங்கள்,
டயா பூஸ்டருடன்.
72 மணி நேரத்தில் இரத்தத்தில் உள்ள
சர்க்கரையின் அளவை கட்டுக்குள்
கொண்டு வருகிறது..
மேலும் தொடர்புக்கு
78 23 99 7001 | 78 23 99 7004
ஜிங்கா கோல்டு
Jinga Gold
IT ONLY TAKES ONE
4 CAPSULES
GMP
ISO
4 கேப்சூல்ஸ்
ரூ.600/
மட்டுமே
தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில்
Apollo PHARMACY VISHWAM
MedPlus
ஒன்னு போதும்
நின்னு பேசும்!
அப்பலோ, மெட்ப்ளஸ்
உட்பட அனைத்து மருந்து
கடைகளிலும் கிடைக்கும்
Super stockist Sruti's
ஜிங்கா கோல்டு
ஹெல்ப் லைன்
9962 66 4444
மாவட்ட வாரியான உதவிக்கு
9003640742
For Personal Delivery
9962 8080 90

Advt

சௌகார் ஜானகி லைஃப் ரிலே! 33

## நான் பட்டு மாமி பேசுறேன்...!

# தாய்மையை உணர்த்திய காவல் தெய்வம்!

ஒரு கதாபாத்திரத்தில் சிறப்பாக நடித்து, அது மிகப்பெரிய அளவில் வரவேற்பு பெற்றுவிட்டால், தொடர்ந்து அதேபோன்ற வேடங்கள் நம்மைத் தேடி வருவதுண்டு. 'படிக்காத மேதை', 'பார்த்தால் பசி தீரும்', 'அன்னை', 'பார் மகளே பார்', 'பெற்றால்தான் பிள்ளையா', 'மோட்டார் சுந்தரம்பிள்ளை' போன்ற படங்களில் நான் ஏற்று நடித்த குடும்பத் தலைவி, நல்ல மனைவி, நல்ல அம்மா, நல்ல சகோதரி போன்ற குடும்பப்பாங்கான வேடங்கள் உயிர்ப்புடன் இருந்தன. படத்திற்கு பலம் சேர்த்தன என்று பத்திரிகைகள் பாராட்டும் வகையில் அமைந்ததால், அதுபோன்ற வேடங்களுக்காக இயக்குநர்கள் என்னைத் தேடிவந்தார்கள்.

நிஜ வாழ்க்கையில் நான் குறைவில்லாத ஒரு நல்ல அம்மாவாக எனது கடமையைச் செய்து வந்ததால், அம்மா வேடங்களை உள்வாங்கி நடித்தேன். தாய்மையின் உணர்வை வெளிப்படுத்தும் வேடம் 'காவல் தெய்வம்' படத்தில் அமைந்தது. எழுத்தாளர் ஜெயகாந்தன் எழுதிய 'கைவிலங்கு' என்ற நாவலை திரைக்கதையாக வடிவமைத்து கே.விஜயன் இயக்கினார். பிரபல குணச்சித்திர நடிகர் எஸ்.வி.சுப்பையா இந்தப் படத்தின் மூலம் தயாரிப்பாளர் அவதாரம் எடுத்தார். படத்தில் மிக முக்கியமான சாமுண்டி என்ற பனை மரமேறும் தொழிலாளி பாத்திரத்தை நடிகர் திலகம் சிவாஜி செய்தால் சிறப்பாகயிருக்கும் என்று கருதினார். இதற்காக சிவாஜியை அணுகினார் சுப்பையா.

அப்போது 'உயர்ந்த மனிதன்' உட்பட பல படங்களில் சிவாஜி பிசியாக நடித்துக் கொண்டிருந்தார். எனவே சிவாஜியால் கால்ஷீட் ஒதுக்கித்தர முடியவில்லை. நடிகர் எஸ்.வி.சுப்பையாவின்



—எழுத்தாக்கம்
கலைமாமணி
சபீதா ஜோசப்



www.nakkheeran.in

நல்ல நண்பர் ஏவி.எம்.சரவணன். எனவே அவரை அணுகி சிவாஜியின் கால்ஷீட் பெற்றுத் தருமாறு கேட்டுக்கொண்டார்.

ஏவி.எம். சரவணன் சிவாஜியை சந்தித்து பேசினார். எப்படி கால்ஷீட் ஒதுக்கித் தருவது, முடியவில்லையே என்று சிவாஜி தன் நிலையை விளக்கினார். ' 'உயர்ந்த மனிதன்' படத்திற்கான ஐந்து நாட்களை உங்களுக்கு ஒதுக்கித்தருகிறேன். அதை 'காவல் தெய்வம்' படத்திற்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள். பிறகு அந்த ஐந்து நாட்களை எங்களுக்கு நடித்து தந்துவிடுங்கள்' என்று சரவணன் ஒரு யோசனை கொடுத்தார், சிவாஜியும் சம்மதித்தார். அந்த ஐந்து நாட்களில் அந்த ரோலை மிக அற்புதமாக செய்துகொடுத்தார். பனை மரமேறும் தொழிலாளியாக படம் முழுக்க வரும் ரோல் அது. கொடுத்த ஐந்து நாட்களில் தனது போர்ஷன் முழுவதையும் கச்சிதமாக முடித்துக் கொடுத்துவிட்டார் நடிகர் திலகம். அது மட்டுமல்ல, அந்தப் படத்திற்கு சம்பளமாக எஸ்.வி.சுப்பையா கொடுத்த 15 ஆயிரம் ரூபாயை வாங்காமல் சிவாஜி கணேசன் நடித்துக் கொடுத்தார் என்று ஏவி.எம். சரவணன் சொல்ல கேள்விப்பட்டேன். படத்தில் சிவாஜியைப் போலவே பண்பட்ட நடிகர்கள் சிவக்குமார், லட்சுமி, நம்பியார், அசோகன், நாகேஷ், பாலையா, ஜி.சகுந்தலா, வி.கோபாலகிருஷ்ணன், சண்முகசுந்தரி என அனைவரும் நிறைவாக நடித்துத் தந்தனர்.



'காவல் தெய்வம்' படத்தில் எஸ்.வி. சுப்பையாவுடன் -நான்

**'கா**வல் தெய்வம்' படத்தில் எனக்கு அலமேலு என்ற கதாபாத்திரம். அது எப்படிப்பட்டது என்பதை நான் சொல்வதைவிட அப்போது 'பேசும் படம்' மாத இதழ் எழுதி இருந்ததை அப்படியே தருகிறேன்...

“ஆயிரம் இருந்தென்ன அம்மா என்றழைக்க ஒரு குழந்தை தனக்கு பிறக்கவில்லையே என்ற குறை, மணமான ஒவ்வொரு பெண்ணுக்கும் சாகும்வரை இருக்கும். அதை வெளிப்படுத்தும் வகையில்தான் மாறுதலிருக்கும். இதோ, அந்த சிறை அதிகாரியின் மனைவி அவள் ஒரு மலடி! சிறைக்கைதிகளை தன் மக்களாக நினைத்து, தன் மலட்டுத்தன்மையை மறைக்கப் போராடுகிறாள். அவள் வீட்டிலே 'குவா குவா' சப்தம் போடாத குழந்தைகள், புகைப்படங்கள் ரூபத்தில் சுவர்களில் நிறைந்திருக்கிறார்கள். அதனால் அவள் உள்ளம் நிறைந்துவிடவில்லை, இதோ எனக்கு நிறைய பிள்ளைகள் இருக்கிறார்கள், ஆனால் அவர்கள் அம்மா என்று கூப்பிடமாட்டார்கள். இரண்டு வாக்கியங்கள்தான். முதல் வாக்கியத்தில் கண்கள் மகிழ்ச்சியை பிரதிபலிக்கின்றன, இரண்டாவது வாக்கியத்தில் தாங்கமுடியாத சோகத்தை பிரதிபலிக்கும் அவள் கண்களில் நீர் நிறைகிறது. நமது அடிவயிற்றை என்னவோ செய்கிறது அவளது நிலை.

அவள் அடி வயிற்றிலிருந்து பிறந்து, வாய் வழியே அம்மா என்று ஒலிபரப்பும் குரல் நம் கண்களில் நீர் நிறையச் செய்கிறது. ஒரு காட்சிதான்... அது ஒப்பற்ற நடிப்பைச் சொல்லும் காட்சி. குறி பார்த்து நிச்சயம் செய்து இலக்கில் அடிப்பவனைப்போல் கிடைத்த வாய்ப்பை அக்காட்சியில் பயன்படுத்தி அருமையாக நடித்தவர் சௌகார்ஜானகி. படம் 'காவல் தெய்வம்'. உள்ளத்தில் நிறைவில்லாத, வாழ்வில் குறை கொண்ட ஒரு மனைவியின் பாத்திரத்தில் சிறப்பாக நடித்து... நம் உள்ளங்களை நிறைவடைய செய்துவிட்டார் சௌகார் ஜானகி” -இப்படிப் பேசும் படம் என் நடிப்புக்கு சான்றிதழ் அளித்தது. “கள்ளமில்லாத உள்ளம்கொண்ட கட்டுப்பெட்டி அவள். நாகரிக வாசனையும், படிப்பு

‘காவல் தெய்வம்’ படத்தில் சிவாஜிகணேசன்



Vol.38
Issue No:85 நக்கீரன்

நக்கீரன் பப்ளிகேஷன்ஸுக்காக,
நக்கீரன் பிரிண்டர்ஸ் & பைண்டர்ஸ்,
105, ஜானி ஜான்கான்
சாலை, இராயப்பேட்டை, சென்னை-14ல்
அச்சிட்டு வெளியிடுபவர் மற்றும் ஆசிரியர்:

**நக்கீரன் கோபால்**
தொலைபேசி: 044-26881700, 26881800
மின்அஞ்சல் :
**nakkheeran2003@gmail.com**
இணையம்: **www.nakkheeran.in**

**முதன்மை பொறுப்பாசிரியர்: மாவலி**
**முதன்மை துணை ஆசிரியர்கள்:**
ஆரூர் தமிழ்நாடன், ராம்கி

**முதன்மை சிறப்பு நிருபர்கள்:**
இரா.இளையசெல்வன்,
தாமோதரன் பிரகாஷ்
**துணை ஆசிரியர்கள் :** க.சுப்பிரமணியன், சிவலிங்கம்,
கவுதமன், எம்.செந்தில்குமார், தா.மகாராஜன்,
சி.பிரான்சிஸ், பி.என்.ஆனந்த்

**ஸ்பெஷல் நியூஸ் Correspondent :** நாகேந்திரன்

**முதன்மை நிருபர்கள் :**
ஜீவா தங்கவேல், பி.சிவன், சுப்பு
**தலைமை நிருபர்கள்:** எஸ்.பி.எஸ்., ராஜா, பகத்சிங்,
செல்வகுமார், துரை.மகேஷ்,
**சீனியர் நிருபர்கள்:** அண்ணல், அரவிந்த்,
அருண்பாண்டியன்
**நிருபர்கள்:** மணிகண்டன், இளையராஜா

**முதன்மை வடிவமைப்பு :** குரு
**தலைமை வடிவமைப்பாளர்கள்:**
துரை.கணேசன், ஆர்.சி.மதிராஜ், த.சரவணப்பெருமாள்
**துணை வடிவமைப்பாளர்:** ச.ராஜேந்திரன்

**தலைமை புகைப்படக் கலைஞர்கள்:**
எஸ்.பி.சுந்தர், ஸ்டாலின்
**துணைத் தலைமை புகைப்படக் கலைஞர்:**
ப.ராம்குமார்

**பிழை திருத்துவோர் :** து.கண்ணன், பார்த்திபன்

**மேலாண்மை நிர்வாகி : ஆர்.குருசாமி**
**பொது மேலாளர் :** எஸ்.சுரேஷ்குமார்
**நிர்வாக மேலாளர் :** பிரின்ஸ்
**கணக்கு & சந்தா மேலாளர் :** சி.மோகன்
**முதன்மை காசாளர் :** நித்தியானந்தன்
**தயாரிப்பு மேலாளர்கள் :**
பி.மோகன், ஆர்.கௌரிநாதன்
**விநியோக மேலாளர் :** கே.மலைக்கண்ணன்
**விநியோக உதவி மேலாளர் :** என்.சத்தியசீலன்
**விநியோகம் :** லாரன்ஸ், அரவிந்த்
**தயாரிப்பு உதவி :** எச்.கண்ணன், பி.கணேசன்,
சந்திரோதயம், பி.வெங்கடேஷ்
**விளம்பர மேலாளர் :**
சி.சுரேஷ்குமார்
**பிரதிநிதி:** கே.சிவகுமார்
**கணக்கு ஒருங்கிணைப்பு :**
ஷபீர்அகமது, வெங்கடேஷ்
**தலைமை கள மேலாளர் :** ஆர்.சீனிவாசன்
**கள மேலாளர்கள் :** கந்தசாமி, பரமசிவன், திருமலை
**பதிப்பக மேலாளர் :** தனுஷ்
**துணை பதிப்பக மேலாளர் :** கிறிஸ்டோபர்
**பதிப்பக உதவி :** ராமலிங்கம்,
யூனூஸ், பாண்டியன்

Legal Manager : **பாரிஸ்டர். ஆர்.வி.சாருமதி**

சிறப்புக்கட்டுரைகள் மற்றும் பேட்டிகளின் கருத்துக்கள் அதைத் தெரிவித்தவர்களின் சொந்தக் கருத்துக்களே. இதழில் வெளியாகும் விளம்பரங்களின் நம்பகத் தன்மைக்கு நக்கீரன் நிர்வாகம் பொறுப்பல்ல.

*வாசனையும் இல்லாத கிராமத்துப் பெண். தன்னுடன் பிறந்த தங்கைக்கு அவள் அன்னையும் அப்பனுமாய் ஆசானாய் திகழ்பவர். தங்கை படித்து பட்டம் பெற்று, ஊரும் உலகமும் புகழ பெருவாழ்வு வாழவேண்டும் என்ற ஒன்றேதான் அந்த அக்காவின் குறிக்கோள். சொத்து சுகங்களை மகிழ்வோடு இழந்தபோதும் அமைதியோடு வாழ அவளால் முடிகிறது. அவளது நல்லமனம் அவளை ஒரு நல்ல மனிதனின் மனைவியாக்குகிறது. அவள் நீதிபதியின் மனைவியாகிறாள். உடன்பிறந்த தங்கை, தன் கணவனையே கொலைகாரனாக குற்றம்சாட்டி, அவனைக் கூண்டில் ஏற்ற முடிவு செய்தபோதும், உத்தமியான அவள் தாலி பலத்திலும், தர்மத்திலும் நம்பிக்கை வைத்து தங்கைக்கும் வெற்றிகிடைக்க ஆசி கூறுகிறாள். தன் கணவன் நிரபராதி என்பதை அவள் நிச்சயமாக நம்புகிறாள். ஆகவே உண்மை வெளியாகும்... அதற்கு தன் தங்கை காரணமாவாள் என்றும் சர்வ நிச்சயமாக நம்புகிறாள்.*

*தங்கையைக் குழந்தையாக கொண்ட அவள் கணவனை, தெய்வமாகக் கண்ட அவள் சத்தியத்தை உயிர் மூச்சாகக் கொள்கிறாள். ஒரு நடமாடும் தெய்வமாக விளங்கிய அந்த பாத்திரம் உலாவிய படம் ‘அக்கா தங்கை’, பாத்திரதாரி சௌகார் ஜானகி.”* -‘அக்கா தங்கை’ படத்தில் என் கதாபாத்திரம் பற்றி ‘பேசும் படம்’ சொன்னது இது.

**நா**ன் தெய்வ நம்பிக்கை கொண்டவள்தான்... ஆனால் நாத்திகவாதி போல நடித்தது ஏன்?

**(பேசுறேன்...)**

படம் உதவி: ஞானம்

www.nakkheeran.in

# ராஜ்ஜியம் ஆண்ட ஓ.பி.எஸ்.! பூஜ்ஜியம் ஆன சோகம்!

## -காவிக்கு மாறும் மகன்!



பழனிச்சாமியை அண்ணன் என்று அழைத்தும் கூட ஓ.பி.எஸ்.ஸை அ.தி.மு.க.வில் இணைக்க ஒப்புக்கொள்ளாத நிலையில், அவரது மகன் ரவீந்திரநாத்தும் தனி ஆவர்த்தனம் செய்ய முடிவெடுத்துள்ளதாகக் கசியும் தகவல்கள், ஓ.பி.எஸ்.ஸை அதிர்ச்சியில் ஆழ்த்தியிருப்பதாகக் கூறுகின்றனர் அவரது ஆதரவாளர்கள்.

தேனி மாவட்டம், பெரியகுளத்தில் தேனீர் கடை உரிமையாளராக இருந்து, தமிழகத்தின் முதல்வர் பதவி வரை உயர்ந்த ஓ.பன்னீர் செல்வம், 1969ஆம் ஆண்டு முதலே தி.மு.க. தொண்டராக தனது அரசியல் வாழ்வைத் தொடங்கினார். 1973-ல் தி.மு.க.விலிருந்து பிரிந்த எம்.ஜி.ஆர்., அ.தி.மு.க.வை தொடங்கியபோது அக்கட்சியில் இணைந்தார் ஓ.பி.எஸ். உள்ளாட்சித் தேர்தல்களில் போட்டியிட்டு வெற்றிபெற்று, 1996 முதல் 2001ஆம் ஆண்டு வரை பெரியகுளம் நகராட்சித் தலைவராக பணியாற்றினார்.

அந்த காலகட்டத்தில், ஜெயலலிதா போடிநாயக்கனூர் தொகுதியில் போட்டியிட்டபோது ஜெயலலிதாவின் வெற்றிக்காக பாடுபட்டதால் டி.டி.வி. தினகரனோடும், ஜெயலலிதாவோடும் நெருக்கமான அவருக்கு, 2011-ல் நடந்த சட்டமன்றத் தேர்தலின்போது அதே போடி தொகுதியில் போட்டியிட வாய்ப்பு வழங்கினார் ஜெயலலிதா. அந்த தேர்தலில் அமோக வெற்றியடைந்த ஓ.பி.எஸ்.ஸின் அரசியல் வாழ்க்கை, ஜெயலலிதா மரணிக்கும் வரையும், அதன் பின்னரும் கூட உச்சத்திலேயே இருந்தது.

தொடர்ந்து 3 முறை போடி நாயக்கனூர், 2 முறை பெரியகுளம் என ஐந்து முறை போட்டியிட்டு வெற்றி பெற்றவர், முதல்வர் ஜெயலலிதாவின் நம்பிக்கைக்குரிய தளபதியாகத் திகழ்ந்ததால், தனது முதல்வர் பதவிக்கு சட்டச் சிக்கல்கள் எழுந்தபோது

ஓ.பி.எஸ்.ஸை 2 முறை முதல்வர் பதவியில் அமரவைத்தார் ஜெயலலிதா. அவரது அமைச்சரவையிலும் முக்கிய இலாகாக்களையும் வழங்கியதால், தமிழ்நாட்டின் முடிசூடா மன்னனாகவே வலம்வந்தார்.

2016-ல் ஜெயலலிதாவின் மறைவுக்குப் பிறகு 3வது முறையாக மீண்டும் முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 2017 வரை முதல்வர் பொறுப்பில் இருந்தார். அதன்பிறகு அ.தி.மு.க. இரண்டாகப் பிரிந்து, கூவத்தூர் கூத்துகளுக்குப் பிறகு எடப்பாடி பழனிச்சாமி முதல்வரானதும், முதலாவது தர்மயுத்தம் நடத்தி பா.ஜ.க.வின் ஆசியோடு 2017 முதல் 2021 வரை துணை முதல்வராகவும், அ.தி.மு.க.வின் ஒருங்கிணைப்பாளராகவும் பொறுப்பு வகித்தார். அப்போது, சசிகலா சிறையிலிருக்க, ஓ.பி.எஸ். தந்த அழுத்தத்தால் சசிகலாவோடு சேர்த்து டி.டி.வி.தினகரனும் அ.தி.மு.க.விலிருந்து நீக்கப்பட்டனர். அதனைத் தொடர்ந்து, அ.ம.மு.க.வை தொடங்கி தனி டிராக்கில் சென்றுவிட்டார் தினகரன்.

கடந்த 2021-ல் தி.மு.க. ஆட்சி அமைந்தபோது அ.தி.மு.க.வின் இணை ஒருங்கிணைப்பாளராக இருந்த எடப்பாடி பழனிச்சாமிக்கும், ஒருங்கிணைப்பாளராக இருந்த ஓ.பன்னீர்செல்வத்துக்கும் இடையே ஒற்றைத்தலைமை குறித்த அதிகார மோதல் ஏற்பட்டது. 2022, ஜூலை 11ஆம் தேதி பொதுக்குழுவைக் கூட்டி அ.தி.மு.க.வின் அடிப்படை உறுப்பினர் பதவியிலிருந்தே ஓ.பி.எஸ்.ஸை நீக்கிய எடப்பாடி, கட்சியின் பொதுச்செயலாளராகவும் முடிசூட்டிக்கொண்டார். அப்போது, ஓ.பி.எஸ்ஸின் ஆதரவாளர்களாக இருந்த அ.தி.மு.க.வின் முன்னாள் அமைச்சர்களும், முக்கிய பொறுப்பிலிருந்தவர்களும் கட்சியிலிருந்து நீக்கப்பட்டனர்.

இதனால், இரண்டாவது முறையாக தர்மயுத்தத்தை துவக்கியதோடு, தனது ஆதரவாளர்களோடு சேர்ந்து அ.தி.மு.க. தொண்டர்கள் உரிமை மீட்புக்குழு ஒன்றையும் உருவாக்கி, 'துரோகி பழனிச்சாமி' எனக்கூறி, அவருக்கு எதிராக இரட்டை இலை சின்னம் மற்றும் அ.தி.மு.க.வை மீட்டெடுப்பதற்கான சட்டப்பூர்வ நடவடிக்கைகளை துவக்கினார் ஓ.பி.எஸ். 2024, பாராளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க. கூட்டணியில் இணைந்து ராமநாதபுரம் தொகுதியில் பலாப்பழம் சின்னத்தில் போட்டியிட்ட ஓ.பி.எஸ். தோல்வியை தழுவவே, அதுவரை ஆதரவு தந்துகொண்டிருந்த பா.ஜ.க.வின் டெல்லி தலைமையும் ஓ.பி.எஸ்.ஸை கை கழுவத் துவங்கியது.

அ.தி.மு.க.வை மீட்டெடுக்க ஓ.பி.எஸ். துவங்கிய சட்டப்போராட்டங்கள் தொடர்ந்து பின்னடைவை சந்தித்துவந்த நேரத்தில், 2026 சட்டமன்றத் தேர்தலும் நெருங்கி வரவே, பா.ஜ.க.வோடு என்.டி.ஏ. கூட்டணியில் இணைந்த எடப்பாடியாரோ, 'ஓ.பி.எஸ்.ஸை மீண்டும் அ.தி.மு.க.வில் சேர்க்கும் பேச்சுக்கே இடமில்லை' என்பதில் உறுதியாக இருந்தார். அவர் பெரிதும் நம்பியிருந்த பா.ஜ.க.வும் கூட்டணிக்கு அழைக்கவில்லை. இதனால், 'இனிமேலும் ஓ.பி.எஸ்.ஸோடு தொடர்ந்தால் அரசியல் வாழ்க்கையே கேள்விக்குறிதான்' என்பதால் அவரது தீவிர ஆதரவாளர்களான வைத்திலிங்கம், மனோஜ் பாண்டியன் உட்பட சிலர், 'தாய்க்கழகத்தில் இணைகிறோம்' எனக்கூறி தி.மு.க.வில் ஐக்கியமாகினர். ஜே.சி.டி.பிரபாகர், கு.ப. கிருஷ்ணன் போன்றவர்கள் விஜய்யின் த.வெ.க.வில் சேர்ந்தனர்.

பியூஷ் கோயல்





ரவீந்திரநாத்

அதுவரை, ஓ.பி.எஸ்.ஸின் அ.தி.மு.க. ஒருங்கிணைப்பு முயற்சிக்கு ஆதரவு தெரிவித்துவந்த டி.டி.வி.தினகரனும் கடந்த மாதம் பா.ஜ.க. தேர்தல் பொறுப்பாளர் பியூஷ் கோயல் முன்னிலையில் என்.டி.ஏ. கூட்டணியில் இணைந்து, எடப்பாடியாரோடு இருந்த பங்காளி சண்டைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டார். ஆக மொத்தத்தில், தனித்துவிடப்பட்டார் ஓ.பி.எஸ். இந்நிலையில்தான்,



எடப்பாடி



டி.டி.வி. தினகரன்

கடந்த மாதம் 23ஆம் தேதி பெரியகுளத்திலுள்ள பண்ணை வீட்டில் தனது ஆதரவாளர்களிடம் கூட்டணி குறித்து கருத்துக்கேட்புக் கூட்டத்தை நடத்தினார் ஓ.பி.எஸ். அதிலும், கூட்டணி குறித்த அவரது நிலைப்பாடு காரணமாக சலசலப்பிலேயே முடிந்தது அந்தக் கூட்டம். அதன் பின்னர்தான், அந்தர் பல்டி அடித்தார் ஓ.பி.எஸ்.

அதாவது, ''அ.தி.மு.க. ஒன்றிணைய வேண்டும் என்பதே என் நோக்கம். நான் தனியாக வெற்றிபெற வேண்டும், கட்சி ஆரம்பிக்க வேண்டும் என்பது நோக்கமில்லை. தேசிய ஜனநாயகக் கூட்டணி வெற்றிபெற்று அ.தி.மு.க. ஆட்சி அமைய வேண்டும். அ.தி.மு.க.வில் அனைவரும் ஒன்றிணைய நான் தயார். டி.டி.வி.தினகரன் மற்றும் என்னுடைய அருமை அண்ணன் எடப்பாடி பழனிச்சாமி தயாரா?" எனச் செய்தியாளர்களை சந்தித்து அ.தி.மு.க. தலைமைக்கு கோரிக்கை வைக்க, அடுத்த சில மணி நேரத்திலேயே, "பொதுக்குழு கூடி நீக்கப்பட்ட அவரை மீண்டும் கட்சியில் சேர்ப்பதற்கு எந்த வாய்ப்பும் இல்லை" என உறுதிபடத் தெரிவித்தார் எடப்பாடியார்.

இப்படி, தனது முக்கிய ஆதரவாளர்களும் விலகிப்போய், அ.தி.மு.க.வில் இணைவதற்கான கதவுகளும் முழுமையாக அடைபட்ட நிலையில்தான், ஓ.பி.எஸ்.ஸின் சொந்த மகனே அவரை விட்டு விலகத் தயாராகிவிட்டார் என அதிர்ச்சியளிக்கின்றனர் ஓ.பி.எஸ்.ஸுக்கு மிக நெருக்கமான ரத்தத்தின் ரத்தங்கள்.

இதுகுறித்து, ஒரு காலத்தில் ராஜ்ஜியம் ஆண்ட ஓ.பி.எஸ்., இன்று அரசியலில் பூஜ்ஜியமாகி நிற்கிறாரோ என்ற கவலை அனைவருக்குமே இருக்கிறது என்ற பீடிகையோடு நம்மிடம் பேசியவர்கள், "எடப்பாடியாரை அண்ணன் எனச்சொல்லி என்னதான் சரண்டரானாலும், ஓ.பி.எஸ்.ஸின் வரவு கட்சிக்கு சாதகமாக இருக்கிறதோ, இல்லையோ, தங்களுக்கு பாதகமாகிவிடும் எனக்கருதும் ஆர்.பி.உதயகுமார் போன்ற அவரது சொந்த ஜாதி சனத்தைச் சேர்ந்த முக்கியமான சிலரே ஓ.பி.எஸ்.ஸை கட்சிக்குள் சேர்ப்பதற்கு கடும் எதிர்ப்பு தெரிவிப்பதாகக் கூறப்படுகிறது.

அதேபோல, 'இவர்கள் கூறித்தான் இரண்டாம் தர்மயுத்தத்தை துவக்கினேன்' எனத் தன்னை நம்பிவந்த வைத்திலிங்கம், மனோஜ்பாண்டியன் ஆகியோரை காட்டிக்கொடுத்ததிலிருந்தே அவரை நம்புவதற்கு யாரும் தயாராக இல்லை. காலம் கடந்துவிட்டதால் கட்சியே இல்லாதவரை கூட்டணிக்குள் இணைக்க பா.ஜ.க.வும், த.வெ.க.வும் தயாராக இல்லை. இந்த சூழ்நிலையில்தான், உரிமை மீட்புக்குழுவை கலைத்துவிட்டு பா.ஜ.க.வில் இணைந்துவிடுமாறு ஓ.பி.எஸ்.ஸுக்கு அழுத்தம் கொடுத்துவந்தார் அவரது மகனான ஓ.பி. ரவீந்திரநாத். அதற்கு ஓ.பி.எஸ். ஒத்துக்கொள்ளாததால் கடந்த ஒரு மாதமாகவே அவர்கள் இருவருக்கும் முட்டல், மோதல்கள் தொடர்கின்றன. இதனால் இந்த வருடப் பொங்கல் திருவிழா வைக்கூட ஓ.பி.எஸ்.ஸுடன் சேர்ந்து கொண்டாடவில்லை. இந்நிலையில்தான், தன்னுடைய அரசியல் எதிர்காலத்திற்காக பா.ஜ.க.வில் சேர முடிவெடுத்துவிட்டார் ரவீந்திரநாத்.

ஏற்கெனவே, தேனி தொகுதியில் ரவீந்திரநாத் எம்.பி.யாக வெற்றி பெற்றது செல்லாது என்ற சென்னை உயர் நீதிமன்ற தீர்ப்புக்கு எதிரான மேல்முறையீடு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பதாலும், பாஷ்யம் நிறுவனத்தில் தங்களுடைய மிகப்பெரிய தொகை சிக்கியிருப்பதாலும் கூட்டிக் கழித்துப் பார்த்த ரவீந்திரநாத், மத்தியில் பவராக இருக்கும் பா.ஜ.க.வில் சேர்ந்தால் மட்டுமே தனக்கு நல்லது என நம்புகிறார். இது தொடர்பாக தமிழக பா.ஜ.க.வின் சில முக்கிய புள்ளிகளுடன் ரகசியப் பேச்சுவார்த்தையையும் முடித்துவிட்டார் ரவீந்திரநாத். அதன் பின்னரே கடந்த முறை சென்னை வந்திருந்த பியூஷ்கோயலை சந்திக்க அவர் தங்கியிருந்த ஹோட்டலுக்குச் சென்றார் ரவீந்திரநாத். 2 மணி நேரமாகக் காத்திருந்த அவரிடம், 'நெக்ஸ்ட் டைம் சந்திக்கலாம்' எனச் சொல்லப்பட்டதால் திரும்பிவிட்டார். விரைவில் காவி வேட்டி, துண்டுடன் அவரை பார்க்கலாம்" என்றனர் அவர்கள்.

விதைப்பதுதானே முளைக்கும்!

**-துரை மகேஷ்**

www.nakkheeran.in

நெல்லை பேட்டை அன்னதான விநாயகர் கோவில் தெருவைச் சேர்ந்த பட்சிராஜன் மகள் சிவமதி. கல்லூரியில் பி.எஸ்.சி. இயற்பியல் இரண்டாம் ஆண்டு படித்துவரும் சிவமதி, கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று மயக்கமடைந்த நிலையில் மூச்சுப்பேச்சின்றிக் காணப்பட, அவரது குடும்பத்தினர் கண்டியப்பேரி அரசு மருத்துவமனைக்குக் கொண்டுசென்றனர். அங்கு பரிசோதித்த மருத்துவர்கள், அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாகத் தெரிவித்தனர். இந்நிலையில் சிவமதியின் கழுத்தில் காயங்கள் இருந்தன என்கின்ற தகவலோடு, இறந்த மாணவி சிவமதி முன்னேறிய சமூகத்தைச் சேர்ந்தவர் என்றும், வேறு சமூகத்தைச் சேர்ந்த இளைஞரை காதலித்ததாகவும், இதற்கு குடும்பத்தில் எதிர்ப்பிருந்த நிலையில் இவர் மரணமடைந்துள்ளார். இது சாதி ஆணவக்கொலையாக இருக்க வாய்ப்பு என மாவட்டம் முழுமையும் பரவியது.

சிவமதியின் காதலனான ஆனந்தகிருஷ்ணன் "நான் பட்டியலின சமுதாயத்தைச் சார்ந்தவன். பேட்டை அன்னதான விநாயகர் கோவில் தெருவைச் சேர்ந்த மாற்று சமுதாயத்தைச் சேர்ந்தவர் சிவமதி. நாங்கள் ஒருவருக்கொருவர் விரும்பிக் காதலித்து வந்தோம். நான் பட்டியலின வகுப்பைச் சார்ந்தவன் என்பதால் சிவமதியின் பெற்றோர் காதலுக்கு எதிர்ப்பு தெரிவித்துவந்தனர். அவரது பெற்றோர், தாய்மாமாவான பழனி ஆகியோர் சிவமதியை தொடர்ந்து அடித்துத் துன்புறுத்திவந்துள்ளனர். இந்த நிலையில் திருமணம் செய்துகொள்ள நினைத்த நாங்கள், செங்கோட்டை (புளியரை) அருள்மிகு சிவகாமி அம்மாள் சமேத அருள்மிகு சதாசிவமூர்த்தி திருக்கோவிலில் வைத்து 06/02/2026 வெள்ளிக்கிழமை திருமணம்செய்ய முடிவெடுத்து, அதற்கான பத்திரிகை அச்சடித்தும், திருமணத்திற்கு பதிவுசெய்வதற்கு இணையத்தில் வருவாய்த்துறை அதிகாரிக்கு திருமணம் ஆகவில்லை என்ற சான்று பெறவேண்டியும் விண்ணப்பித்தோம். இதனையறிந்த சிவமதியின் பெற்றோர் 01/02/2026 (ஞாயிற்றுக்கிழமை) அவளுடைய செல்போனைப் பறித்து வைத்துக் கொண்டனர். அவளை, தொடர்ந்து துன்புறுத்தி அடித்து சித்திரவதை செய்துள்ளனர். அவர் பாட்டியின் மொபைல் எண்ணிலிருந்து (94435 XXXXX) எனது மொபைல் எண்ணிற்கு காலை 11:20க்கும், பின்பு மதியம் 12:15-க்கும் போன் செய்தார். வேறு சமூக ஆணோடு திருமணம் செய்ய நினைத்தால் உன்னைக் கொன்றுவிடுவோம் என மிரட்டியதாகத் தெரிவித்தார். அவள் அழுதபடி பேசியதால் எனக்கு என்ன செய்வதென்று தெரியாமல் இருந்தது. மாலை சுமார் 6:00 மணியளவில் சிவமதி இறந்துவிட்டது தெரிய வந்தது. நல்ல ஆரோக்கியத்துடன், நல்ல மனநிலையிலிருந்த சிவமதி இறப்பு


திருமண அழைப்பிதழ்

06.02.2026

M.ஆனந்த கிருஷ்ணன் B.A.

P.சிவமதி B.Sc.,

S. பட்சிராஜன்

P.சிவசங்கரி - S.வீரமணி

B. முருகன்

M. ராமலெட்சுமி

செல் : 70928 32082

திருமணப் பத்திரிகை



சிவமதி -ஆனந்தகிருஷ்ணன்

பல்வேறு சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. பெற்றோரும், தாய்மாமாவும் சேர்ந்து அவளைக் கொலை செய்துள்ளார்கள். அவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்'' என நெல்லை மாநகர காவல் ஆணையரிடம் புகாரளித்தார்.

விடுதலை சிறுத்தைகள் கட்சியோ, "முதலில் சிவமதிக்கு உடல்நிலை சரியில்லை எனக் கூறி பழையபேட்டை கண்டியப்பேரி அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். அப்போது அவள் கழுத்தில் காயத்துடன் காணப்பட்டிருக்கிறாள். அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர் அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாகத் தெரிவித்தார். இதையடுத்து பிரேதப் பரிசோதனைக்காக நெல்லை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அவரது உடலை அனுப்பிவைத்துள்ளனர். போலீசார் சந்தேக மரணம் என வழக்குப் பதிவுசெய்து விசாரணை நடத்திவருகின்றனர். ஆனந்தகிருஷ்ணன், அவரது குடும்பத்தினர் மற்றும் ஜனநாயக சக்திகள் இணைந்து திருநெல்வேலி மாநகர காவல் துறை ஆணையாளரைச் சந்தித்து வன்கொடுமை மற்றும் ஆணவக் கொலை வழக்காக பதிவு செய்ய வேண்டும். சிவமதியின் உடலை ஆனந்தகிருஷ்ணனிடம் ஒப்படைக்கவேண்டும், ஆனந்தகிருஷ்ணனுக்கு காவல்துறை பாதுகாப்பு வழங்கவேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தியிருக்கிறோம்" என்றது.

இதையடுத்து சிவமதி, (01.02.2026) மாலையில் இறந்தது சம்பந்தமாக மேற்படி இறந்துபோன சிவமதியின் தாயார் ரேவதியின் புகாரின் அடிப்படையில் 01.02.2026 பேட்டை காவல் நிலையத்தில் 194 BNSS (சந்தேக மரணம்) பிரிவின்கீழ் வழக்குப் பதிவுசெய்து பேட்டை காவல் நிலைய ஆய்வாளர் புலன்விசாரணை செய்துவந்தார். இவ்வழக்கின் தன்மை மற்றும் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டும், சுதந்திரமான, நியாயமான மற்றும் பாரபட்சமற்ற விசாரணையை உறுதிசெய்வதற்காக, 02.02.2026 திருநெல்வேலி மாநகர காவல் ஆணையர், இவ்வழக்கின் புலன் விசாரணையினை காவல் உதவி ஆணையர் (டவுண் சரகம்) அவர்களுக்கு மாற்றம்செய்து உத்தரவிட்டுள்ளார் என அறிக்கை வெளியிட்ட கையோடு, சிவமதி வீட்டின் அருகிலுள்ள அனைவரையும் அழைத்து விசாரித்தது. இதில் சிவமதியின் தாயாரை விசாரித்தபோது, சிவமதி தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்ட துப்பட்டாவைக் காண்பித்தார்.

சிவமதியின் உறவினர்களோ, ''சிவமதி வீட்டில் மின்விசிறியில் துப்பட்டாவால் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டார். தனது மகள் தற்கொலை செய்துகொண்டார் என்பது வெளியே தெரியவந்தால் தனது குடும்பமானம் போய் விடும் எனக்கருதிய அவரது தாயார், மகள் தற்கொலைக்குப் பயன்படுத்திய துப்பட்டாவை மறைத்து வைத்திருந்தார். அதனை இவர்கள் ஊதிப் பெரிதாக்கிவிட்டனர்'' என்றனர். இதே வேளையில் பிரேதப் பரிசோதனை முடிவும் தற்கொலை என்றே வந்தது.

"இந்த இளைஞன் மீதுதான் ஏதோ தவறு உள்ளது. இவனால் அந்தப் பெண் மனதளவில் பாதிக்கப்பட்டு உளவியல்ரீதியாக தற்கொலை செய்திருக்கலாம்" என்றொரு விவாதம் சமூக வலைத்தளத்தில் பகிரப்பட்டு வருவது விவகாரத்தை வேறு திசைக்குத் திருப்பியுள்ளது.

—வேகா

# சாதி ஆணவப் படுகொலையா?

## —நெல்லை பரபரப்பு!



புகார் மனுவுடன் ஆனந்தகிருஷ்ணன் மற்றும் நண்பர்கள்



# புன்னகை உ...

ஜெயலலிதா பரப்பன அக்ரஹாரா சிறையில் கைதியாக (எண் 7402) VVIP செல் எண் 23ல் அடைக்கப்பட்டிருந்த 21 நாட்களிலும் பெரும்பாலும் அறைக்குள்ளேயே நேரத்தைக் கழித்தார், புத்தகங்களை வாசித்ததுடன் எழுதுதலிலும் ஈடுபட்டார் என்று பொதுவாகப் பேசப்பட்டாலும், சசிகலா, சுதாகரன், இளவரசி மற்றும் வழக்கறிஞர்களுடன் வழக்கின் தன்மைகள் குறித்து ஆலோசித்து மேல்முறையீட்டு மனுக்களைத் தயாரிப்பதிலேயே தனது நேரத்தைச் செலவிட்டார்.

2014 செப்டம்பர் 29 முதல், ஜெயலலிதா கைகாட்டிய ஓ.பன்னீர் செல்வம் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தார். ஆட்சி அவர்களிடம் இருந்ததால், வேலூர் மத்திய சிறையின் கண்காணிப் பாளராக இருந்த கருப்பணன், ஜெயலலிதா மீது அதிக விசுவாசம் காட்டினார். அந்த 21 நாட்களிலும், பெங்களூருவிலுள்ள பரப்பன அக்ரஹாரா சிறைக்கு அருகிலேயே முகாமிட்டிருந்தார். அங்கு அப்படி என்ன வேலை பார்த்தார் கருப் பணன்? சிறையிலிருந்து தகவல் களைப் பெற்று வழங்குவதன் மூலம் அ.தி.மு.க. கட்சிக்கும் ஜெயலலிதா வுக்கும் இணைப்புப் பாலமாகச் செயல்பட்டார். அந்தக் காலகட்டத் தில் வேலூர் மத்திய சிறையில் விடுப்பு எதுவும் எடுக்காமல் கடமைப்பணியில் (On Duty) இருந்து கொண்டே ஜெய லலிதாவுக்கு ஆற்ற வேண்டிய அரும் பெரும் பணிகளில்



# றைந்த புகைப்படம்; உருகிய அதிகாரம்!

மூழ்கித் திளைத்தார். அவரது வருகைப்பதிவில் முறைகேடு நடந்ததையும், இந்த அதிகார துஷ்பிரயோகத்தையும் சிறைத்துறையில் எந்த மேலதிகாரியும் பொருட்படுத்தவில்லை. இச் சேவைக்கான பலன் கிடைக்காமலா போகும்? 2015ஆம் ஆண்டு சென்னையில் கனமழையால் பேரழிவை ஏற்படுத்திய வெள்ளப்பெருக்கினால் அரசு அலுவலகங்களே செயலிழந்திருந்த நிலையிலும், இவருக்கு டி.ஐ.ஜி. பதவி உயர்வு வழங்கப்பட்டது என்பது இன்றுவரையும் வியப்பாகவே பார்க்கப்படுகிறது.

அந்தப் புகைப்படத்தில் ஜெயலலிதாவும் சசிகலாவும் ஒரே செம்மஞ்சள் நிற பட்டுப் புடவைகளை அணிந்து தகதகத்து நிற்கின்றனர். கழுத்து நிறைய தங்க நகைகள், இடுப்பில் ஒட்டியாணம், கைநிறைய வைரங்கள் பதிக்கப்பட்ட தங்க வளையல்கள் பளிச்சிட, ஜெயலலிதாவின் வலதுகை விரல்கள் சசிகலாவின் வலதுகையை மெதுவாகத் தொட்டபடி, உதடுகளில் புன்முறுவலுடன் ஒய்யாரமாக நின்ற அந்தப் புகைப்படம், வளர்ப்பு மகன் சுதாகரனின் திருமண விழாவின்போது எடுக்கப்பட்டது.

ஜெயலலிதாவும் அவரது உடன்பிறவா சகோதரி என்று சொல்லப்படும் சசிகலாவும் ஒரே சிறையில் வெவ்வேறு அறைகளில் இருந்தபோது, இந்தப் புகைப்படம் சிறை அதிகாரிகள் மட்டத்தில் இருந்து பணியாளர்கள் வரை அவர்களது கைபேசிகளில் ஒரு சுற்று வந்ததும் 'எப்படி இருந்தவங்க இப்படி ஜெயிலுக்குள் மாட்டிக்கிட்டாங்களே..?' என்று வருத்தப்பட்டதும், கேலி பேசி சிரித்துக்கொண்டதும் நடந்துள்ளது.

இதுபோன்ற சூழ்நிலைகளிலும் அமைதியைத் தக்கவைத்துக் கொள்வார் அந்த சிறைத்துறை அதிகாரி. ரமணா திரைப்படத்தில் வரும் யூகி சேது கதாபாத்திரம்போல் புத்திக் கூர்மையுள்ளவர். அவருடன் வேலூர் APCA பயிற்சி மையத்தில் பழகிய தமிழக சிறைத்துறை அதிகாரி ஒருவர், அவரைப் பற்றி நம்மிடம் பகிர்ந்து கொண்டார்.

"பல ஆண்டுகள் சிறையில் பணியாற்றிய அனுபவம் அவருக்கு இருந்தது. கைதிகளை கவனமாகப் பார்ப்பார். அவர்களுடைய முகத்தில் தெரியும் பயம், பதட்டம், குழப்பம் போன்ற உணர்ச்சிகளைக் கவனிப்பார். ஆனால் அவற்றை வைத்து உடனே முடிவு எடுப்பதில்லை. அந்த கவனிப்பு அவரது கடமையை மீறாது.

மேஜிஸ்ட்ரேட் முன்னிலையில் அடையாள அணிவகுப்பில், இவரைப் பணியமர்த்தும் போது, ஓரமாக நின்று, பாதுகாப்பு சரியாக இருக்கிறதா என்பதை மட்டுமே பார்த்துக்கொள்வார். யாரையும் குற்றவாளி என்று தனிப்பட்ட முறையில் தீர்மானிக்க மாட்டார். அது தனது பொறுப்பு அல்ல என்பதை அவர் தெளிவாகப் புரிந்திருந்தார்.

வரிசையில் நின்றிருப்பவர்களின் முகங்களை அவர் இயல்பாகவே கவனிப்பார். சிலரிடம் பதட்டம் தெரிந்தாலும், அதை மனிதர்களுக்கு இயல்பாக வரும் உணர்ச்சியாகவே எடுத்துக் கொள்வார். அதற்கும் மேலாக தனிப்பட்ட கருத்து உருவாக்குவதில்லை.

அணிவகுப்பின்போது உண்மைக் குற்றவாளி யார் என்பது அவரது மனத்திரையில் ஓடியபோதிலும், அவர் அமைதியாகவே இருப்பார். தன் மனத்திரையில் ஓடியவரையே சாட்சி குற்றவாளி என கைகாட்டும் தருணத்திலும், அனுபவம் இன்னும் என்னைவிட்டுப் போகவில்லை என்ற எண்ணம் மனதில் தோன்றினாலும், அதை அவர் தன்னிடமே வைத்துக் கொள்வார். சட்ட நடைமுறையில், தனிப்பட்ட எண்ணங்களுக்கு இடமளிக்காமல் செயல்படுவார்'' என அந்த அதிகாரி வேலை செய்யும் விதத்தைப் பெருமையுடன் கூறியவர், அவருடன் கான்பரன்ஸ் கால் மூலம் பேசுவதற்கு தொடர்பு ஏற்படுத்தித் தந்தார்.

ஜெயலலிதா -சசிகலா புகைப்படத்தைப் பார்த்த அந்த நேரத்தில் தன் மனதில் தோன்றிய எண்ணங்களை, தற்போது நினைவுபடுத்திக் கூறினார்.

"இந்தப் படம் எடுக்கப்பட்ட காலம் அவர்கள் அதிகாரத்தின் உச்சத்தில் இருந்த நேரம். வெளியில் பார்த்தால் இது ஒரு சாதாரண புகைப்படம் மாதிரி தோன்றலாம். ஆனால் நீண்ட காலம் அதிகாரத்தில் இருப்பவர்களின் மனநிலையில் சில மாற்றங்கள் வருவது இயல்புதான். அந்தக் கோணத்தில் பார்த்தால், இந்தப் படம் ஒரு மனநிலையையும்

www.nakkheeran.in

காட்டுகிறது போல எனக்குத் தோன்றியது.

அதிகாரம் நீண்டகாலம் ஒருவரிடம் இருந்தால், எல்லாம் நம்ம கட்டுப்பாட்டில்தான் இருக்கு என்ற நம்பிக்கை மனதில் வலுப்படும். அந்த உணர்வு அவர்கள் எப்படி உடை அணிவது, எப்படி தங்களை வெளியில் காட்டிக்கொள்வது போன்ற விஷயங்களிலும் தெரியும். அது அழகுக்காக மட்டுமில்லை; நாம் ஓர் உயர்ந்த இடத்தில் இருக்கிறோம் என்ற உள்ளுணர்வின் வெளிப்பாடாகவும் இருக்கலாம்.


அவ்வளவு நகைகள் போட்டிருந்தது ஏதோ ஒரு மனநிலையைக் காட்டுகிறது போல எனக்குத் தோன்றியது. ஆனாலும், அந்த நேரத்தில் அவர்களுக்கு இருந்த தன்னம்பிக்கை, பாதுகாப்பு உணர்வு போன்றவை இப்படி வெளிப்பட்டிருக்கலாம். அந்த நொடியில் அவர்கள் மனதில் சரியாக என்ன இருந்தது என்று நாமெல்லாம் ஊகித்துதான் சொல்ல முடியும். ஆனால் நீண்ட காலம் அதிகாரத்தில் இருப்பவர்களுக்கு இன்னும் வலிமையாகத் தெரியவேண்டும் என்ற மனநிலை வருவது புதிதல்ல. அந்தச் சாயல் இந்தப் படத்திலும் தெரிகிறது.

அதிகாரம் பழக்கமாகிவிட்டால், சில நேரங்களில் ஆபத்துகள் தூரத்தில் இருக்கிறது போலத் தோன்றும். அப்போது கேமரா முன் நிற்பதும் ஒரு சாதாரண விஷயம் இல்லை; நாம் இன்னும் வலுவாக இருக்கிறோம் என்று சொல்லாமல் சொல்லும் தருணமாக மாறிவிடும்.

ஆனால் இன்னொரு பக்கம் என்னவென்றால், வெளியில் தைரியம் தெரிந்தாலும், உள்ளுக்குள் ஒரு சிறிய கவலையோ அச்சமோ இருக்கலாம். அது முகத்தில் தெரியாது. புன்னகையிலேயே மறைந்திருக்கும். அதிகாரத்தின் உச்சத்தில் இருந்தாலும், மனம் முழுக்க அமைதியாக இருக்கவேண்டும் என்பதில்லை. அந்த இருவித உணர்ச்சிகளும் கலந்த நிலையை இந்தப் படம் எனக்கு நினைவூட்டியது" என்று அவர் கூறிய விளக்கம், அந்தப் புகைப்படத்தைப் பற்றிய பார்வையை மாற்றியது.

ஆட்சி அதிகாரத்தை அணுஅணுவாக ரசித்த ஜெயலலிதா போன்றவரும், ஒரு கட்டத்தில் சிறையின் இரும்புக் கதவுகளுக்குள் அடைக்கப்பட்டதே வரலாறு.


இளவரசி


சுதாகரன்

சிறை என்பது சுவர்கள் மட்டும் அல்ல; அதிகாரத்தைப் பழகிய மனதுக்கு அது கடினமான தனிமை. ஜெயலலிதா அதிகாரத்தில் இருந்தவர் அல்ல -அதிகாரமாகவே வாழ்ந்தவர். அதனால் அந்த சிறைத்தண்டனை, சட்ட தண்டனைக்கு மேல், அவருடைய உள்ளத்தையே உலுக்கியிருக்கும்.

எப்போது எழவேண்டும், எப்போது சாப்பிடவேண்டும், எப்போது உறங்கவேண்டும் என்பதைக்கூட வேறு யாரோ தீர்மானிக்கும் வாழ்க்கை -இது யாருக்கும் எளிதல்ல. ஒரு காலத்தில் முழு அரசியல் இயந்திரமே தன் சைகைக்குக் காத்திருந்த ஒருவருக்கு, இந்த மாற்றம் எவ்வளவு கடினமாக இருந்திருக்கும் என்று நினைத்தாலே புரியும்.

இரவு நேரங்கள் அமைதியாக இருந்திருக்காது. பயத்தால் அல்ல; பழைய உயரத்தின் நினைவால். அந்த இரவுகளில் அவருக்குள் இரண்டு உணர்ச்சிகள் மோதியிருக்கலாம் -நான் இன்னும் வலுவானவள் என்ற நம்பிக்கை. இது எப்படி நடந்தது? என்ற கேள்வி. இந்த இரண்டிற்கும் நடுவே, அதிகாரத்தை வாழ்வாகக் கொண்ட மனம் மெதுவாக சோர்ந்திருக்கலாம்.

அவர் வெளியில் அழுதிருக்க வாய்ப்பில்லை. ஆனால் உள்ளுக்குள் ஒரு உடைப்பு இருந்திருக்கலாம். அவரைச் சுற்றிய மௌனம், நீ இல்லாமலும் உலகம் போகிறதே என்ற உண்மையை தினமும் நினைவூட்டியிருக்கும். அந்த உண்மைதான், எந்தத் தீர்ப்பையும்விடக் கடினமானது. ஜெயலலிதா போன்றவர்கள் தண்டனை பெற்று வீழ்ந்தாலும், வாழ்நாள் முழுவதும் மடங்கிப் போகமாட்டார்கள். காலம், அதையே தமிழக மக்களுக்கு நன்றாகக் காட்டியது.

விடுதலைக்காகப் போராடி, இந்தியாவில் மிக நீண்டகால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு, சிறையில் உடலும் மனமும் கடுமையாகச் சிதைந்த ஒரே மனிதர் யார்?

**(ஊழல் தொடர்ந்து கசியும்)**

**-ராம்கி**

www.nakkheeran.in





சுப்ரீம் கோர்ட்டில் மம்தா

தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளா, மேற்கு வங்காளம் ஆகிய நான்கு மாநிலங்களுக்கு விரைவில் தேர்தல் நடக்கவுள்ளதால், தற்போது தேர்தல் கமிஷன் செய்துவரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தப் பணிக்கு தமிழ்நாடு, மேற்கு வங்கம், கேரளா உள்ளிட்ட மாநிலங்கள் எதிர்ப்பு தெரிவித்திருந்தன. திரிணாமுல் காங்கிரஸ் தலைவரும் மேற்கு வங்க முதல்வருமான மம்தா பானர்ஜி, இதனை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்தார். இந்த வழக்கு தலைமை நீதிபதி சூரியகாந்த், நீதிபதிகள் ஜோய் மால்யா பக்சி, விபுல்பான் சோலி அடங்கிய அமர்வில் கடந்த பிப்ரவரி 4ஆம் தேதி, செவ்வாய்கிழமை விசாரணைக்கு வந்தது. இந்த வழக்கில் மம்தா பானர்ஜியே வழக்கறிஞராக வாதாடியது பரபரப்பை ஏற்படுத்தியது.

தலைமை நீதிபதி சூரியகாந்த் உள்ளிட்ட ஐந்து நீதிபதிகள் அமர்வின் முன் வாதாட மம்தா கேட்டது ஐந்து நிமிடம், நீதிபதிகள் 15 நிமிடங்கள் வழங்கினார்கள்.

'ஜனநாயகத்தை காப்பாற்றுங்கள்! தேர்தல் கமிஷன் ஆட்சியாளர்களின் அடியாட்களாக மாறியுள்ளார்கள். நம் வழக்கறிஞர்கள் நீதிக்காக மன்றாடிக் கொண்டிருக்கிறார்கள். அது கிடைக்கவில்லையென்றால், நீதி பின்புறமாக அழுதுகொண்டிருக்கும்'' என்று கர்ஜனையுடன் வாதத்தை துவங்கினார். ''கடந்த மூன்று மாதங்களாக, ஆறுமுறை கடிதம் அனுப்பியுள்ளேன். அதில் எஸ்.ஐ.ஆரின் சிக்கல்களை பற்றி விரிவாக பதிவு செய்துள்ளேன். நான் ஒரு முதல்வராக இருந்தபோதும் ஒரு கடிதத்திற்கு கூட பதிலளிக்கவில்லை.

அமலாக்கத்துறையை அனுப்பி எங்கள் தேர்தல் அலுவலகத்திலிருந்து கோப்புகள் திருடப்படுகிறது, தேர்தல் கேண்டிடேட்களின் பட்டியல்களை தூக்கிச் செல்கிறார்கள், அவர்களுடன் நான் போராடவேண்டியுள்ளது. தேர்தல் ஆணையம் என்ற பெயரில் அங்குள்ள பி.எல்.ஓ.க்களை வைத்து, எங்களுக்கு காலங்காலமாக ஓட்டு போட்டவர்களை வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்குகின்றார்கள். ஆதார் அடையாள அட்டையை ஏற்க மறுப்பதன் மூலம் நீதிமன்றத்தின் உத்தரவை தேர்தல் ஆணையம் மீறுகிறது. மேற்கு வங்கம் மட்டும் குறிவைக்கப்படுகிறது, நசுக்கப்படுகிறது" என வாதிட்டார்.

அதோடு, "மேற்கு வங்கத்தில் 57 லட்சம் வாக்காளர்களை நீக்கியுள்ளது. எல்.கே. அத்வானி பாகிஸ்தானில் பிறந்தவர்தானே? அவருடைய குடும்பத்திற்கு எப்படி வாக்குரிமை இருக்கிறது? பிரதமர் மோடிக்கு சான்றிதழ்கள் அனைத்தும் சரியாக இருக்கிறதா? அசாமில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தம் இல்லை. ஆனால், மேற்கு வங்கத்தில் மட்டும் நடைமுறைப்படுத்துவது ஏன்?'' என்று பல்வேறு கிடுக்கிப்பிடி கேள்விகளைக் கேட்டு அசரடித்தார்.

மம்தா பானர்ஜி அரசியலுக்கு வரும் முன் கொல்கத்தாவில் உள்ள யோகேஷ் சந்திரா சவுத்ரி சட்டக் கல்லூரியில் சட்டத்தை பயின்றவர். அங்கு வழக்கறிஞராக பணியாற்றிய அனுபவத்தை வைத்து, ஒரு முதல்வரே நேரடியாக ஆஜராகி வாதாடியிருப்பது இந்திய ஜனநாயகத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.


**-அரவிந்த்**

www.nakkheeran.in

ஒடிசாவில் சென்னை எக்ஸ்பிரஸ் ரயிலின் 3 பெட்டிகள் தடம்புரண்டன

# தி.மு.க.வில் இணையும்

# புதிய கூட்டணிக் கட்சிகள்!



தி.மு.க. தனது தேர்தல் வியூகங்களை மற்ற கட்சிகளைப்போல அல்லாமல் தெளிவாக வகுத்துவருகிறது. தொழில்முறை ரீதியான அணுகுமுறையுடன் கூடிய தேர்தல் வியூக அமைப்பு, தி.மு.க.வைப் பார்த்து மற்ற கட்சிகளைப் பொறாமைப்பட வைத்துள்ளது. தி.மு.க. இன்றுவரை தனியாக கல்லூரி மாணவர்கள் துணையுடன் கருத்துக்கணிப்பு டீம்களை அமைத்து செயல்பட்டு வருகிறது. எந்தப் பகுதியில் தி.மு.க. பலமாக உள்ளது, யார் அந்தக் கட்சிக்கு பலம் சேர்க்கிறார்கள் என ஆராய்ந்து வைத்துள்ளது.

அதே நேரத்தில், தி.மு.க. கூட்டணியின் பலவீனம் என்ன? என்பதையும் தெரிந்து வைத்துள்ளது. தொகுதி, ஒன்றியம், பகுதி, வட்டம், கிராமம் அடிப்படையில் இந்த பலம் மற்றும் பலவீனங்கள் ஆராயப்படுகிறது. தமிழகத்திலுள்ள பெரிய சாதிகள் மற்றுமுள்ள நாட்டுக்கவுண்டர் போன்ற புதிய சாதிகள் கூட எந்தப் பகுதிகளில் வலுவாக இருக்கிறது என ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்படுகின்றன.

இடைநிலை சாதிகளுக்கு உரிய முக்கியத்துவம் கொடுத்தால் தி.மு.க.வின் பலம் அதிகரிக்குமா என ஆராய்ந்து வியூகங்கள் அமைக்கப்படுகின்றது. இந்த ஆபரேஷனின் ஒரு பகுதியாகத்தான் வேலு நாச்சியாருக்கு சிலை, ஜி.டி.நாயுடுவுக்கு பாலம், பெரும்பிடுகு முத்தரையர் தபால் தலை என தி.மு.க. முன்முயற்சி எடுத்தது. இந்த இடைநிலை சாதிகளின் வாக்குகள் ஒவ்வொரு பூத்திலும் ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் என்ன விளைவை ஏற்படுத்தும் என நுணுக்கமாக ஆராய்ந்து, அந்த ஆராய்ச்சியின் விளைவாக அந்தந்த சாதி அமைப்புகளைச் சார்ந்த எட்டு அரசியல் கட்சிகளை சேர்ந்த தலைவர்களை கூட்டணியில் சேர்த்து அவர்களை உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட வைக்க தி.மு.க. முடிவு செய்துள்ளது. ஆக, தி.மு.க. கூட்டணியில் எட்டு சிறிய கட்சிகள் இணைகிறது என்கிறார்கள் தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள்.

இந்த தொழில்முறை ரீதியான வியூகத்தில் இதுவரை தமிழகம் முழுவதையும் அலசி ஆராய்ந்து நான்கு கருத்துக்கணிப்புகள் எடுக்கப்பட்டுள்ளது. ஸ்ரீதில் முக்கியமாக ஆராய்ச்சி செய்யப்

www.nakkheeran.in


**மதுரவாயலில் மனைவி வசிக்கும் வீட்டின் மீது நாட்டு வெடிகுண்டுகளை வீசிய கணவர்**

பட்டது த.வெ.க.வின் பலம் என்ன என்பதுதான். த.வெ.க. 12% வாக்குகளைப் பெறும் என தி.மு.க. கணித்துள்ளது. தி.மு.க., அ.தி.மு.க. இரண்டையும் விரும்பாத வாக்காளர்கள் 10% பேர் தமிழகத்தில் இருப்பார்கள். பல்வேறு காலகட்டங்களில் பல கட்சிகளின் வாக்காளர்களாக ம.தி.மு.க., சீமான், சிறு சதவிகிதம் பா.ஜ.க. என அவர்கள் தங்கள் வாக்குகளை செலுத்துவார்கள். பா.ஜ.க. இந்த முறை அ.தி.மு.க. வசமிருப்பதால் இந்த வாக்குகளைப் பெறமுடியாது. இந்த வாக்குகள் முழுவதையும் இந்தமுறை த.வெ.க. அறுவடை செய்கிறது என்பதுதான் தி.மு.க.வின் கணிப்பு. ‘சி வோட்டர்’, ‘இந்தியா டுடே’ நடத்திய கருத்துக் கணிப்பில் தி.மு.க.வுக்கும், அ.தி.மு.க.வுக்கும் உள்ள வித்தியாசம் 12%. அது மிகச்சரி எனச் சொல்லும் தி.மு.க. வட்டாரங்கள் த.வெ.க. 40% என்ற த.வெ.க. பிரச்சாரத்தை பொய் எனச் சொல்கிறார்கள். அதே நேரத்தில் தி.மு.க. மற்றும் காங்கிரஸ் கூட்டணிகளின் முக்கிய பலவீனமாக தற்போது இருக்கும் எம்.எல்.ஏ.க்களை குறிப்பிடுகிறார்கள். அவர்களில் 30% பேருக்கு சீட் இல்லையென தி.மு.க. மேலிடம் முடிவு செய்துள்ளது. அவர்களுக்குப் பதில் இளைஞர் அணியைச் சேர்ந்தவர்களை தேர்ந்தெடுக்கும் பொறுப்பு உதயநிதிக்கு தரப்பட்டுள்ளது என்கிறது தி.மு.க. வட்டாரங்கள். தே.மு.தி.க.வை கூட்டணிக்கு கொண்டுவரும் முயற்சியை கடந்த ஒரு வருடமாக தி.மு.க. அமைச்சர் தங்கம் தென்னரசு செய்து கொண்டிருக்கிறார். அதனால் தே.மு.தி.க., தி.மு.க. அணிக்கு வருமென நம்பிக்கையுடன் காத்திருக்கிறார்கள்.

அ.தி.மு.க. கூட்டணியில் டி.டி.வி. தினகரனுக்கும், எடப்பாடிக்கும் உள்ள முரண்பாடு, நயினார் நாகேந்திரனுக்கும், அ..மலைக்கும் உள்ள முரண்பாடு அ.தி.மு.க. கூட்டணியை 50 தொகுதிகளில் தோற்கடிக்க வியூகம் அமைத்து செயல்படும் சசிகலா, த.வெ.க. கூட்டணிக்கு வராததால் சோர்ந்து போயிருக்கும் அ.தி.மு.க.வினர் என அ.தி.மு.க.வின் ஒவ்வொரு பலவீனத்தையும் தெளிவாக கணக்குப் போடும் தி.மு.க.விற்கு உள்ள பெரிய பலவீனம் காங்கிரஸ் கட்சிதான். காங்கிரஸ் போட்டியிடும் தொகுதிகளில் மிக அதிக கவனத்தைச் செலுத்தி அவர்களை வெற்றிபெற வைக்க தி.மு.க. முடிவு செய்துள்ளது. காங்கிரஸ் மட்டுமல்ல, ஒவ்வொரு கூட்டணிக் கட்சி போட்டியிடும் தொகுதியிலும் அவர்கள் வெற்றிபெறும் வாய்ப்பை அதிகரிக்க என்னென்ன செய்யலாம் என தொகுதி வாரியாக தி.மு.க. வியூகம் அமைத்துள்ளது. இப்படி தி.மு.க.வின் வியூக அமைப்புக்கள் பற்றிய தகவல் கூட்டணிகளுக்கும் பகிர்ந்து அளிக்கப் படுகிறது.

‘வரும் தேர்தலில் எந்தெந்த தொகுதியில் தி.மு.க. சார்பிலும், கூட்டணிக் கட்சிகள் சார்பிலும் யார், யார் போட்டியிடுகிறார்கள் என உத்தேசமாக ஒரு பட்டியலைத் தயார் செய்து, அதற்கேற்ற வியூகங்களை தி.மு.க. முன்னெடுத்து வருகிறது’ என்கிறார்கள் தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள்.

**-தாமோதரன் பிரகாஷ்**



கோர்ட்டுக்கு வந்த வைகோ

## இறுதிச் சுற்று!

## விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக வாதிட்ட வைகோ!

இந்தியாவில், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் மீதான தடை 2012-ஆம் ஆண்டு முதல் நீடித்துவருகிறது. இந்த உத்தரவை சட்டவிரோத நடவடிக்கைகள் தடைச் சட்ட தீர்ப்பாயமும் உறுதி செய்தது. இதை எதிர்த்து 2013-ஆம் ஆண்டு ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருந்தார். இந்த வழக்கு பிப்ரவரி 5-ஆம் தேதி விசாரணைக்கு வந்தது. இந்த விசாரணையில் வைகோ ஆஜராகி விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கக் கோரி வாதிட்டார்.

**-கீரன்**

www.nakkheeran.in

ராங்-கால்!

# பல்கலைக்கழக வேந்தராகும் முதல்வர்! உச்ச நீதிமன்றம் பச்சைக்கொடி!

"ஹலோ தலைவரே, ஒவ்வொருவரின் கனவையும் நிறைவேற்ற முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்துள்ள 'என் கனவு என் எதிர் காலம்' திட்டம் பரபரப்பா பேசப்படுறது உங்களுக்கே தெரிஞ்சிருக்கும்."

"ஆமாம்பா அரசு சேவைகள் மக்களுக்கு தடையின்றியும் விரைவாகவும் கிடைக்கவேண்டும்ங்கிறதுக்காக 'உங்களுடன் ஸ்டாலின்' எனும் திட்டத்தை தி.மு.க. அரசு கொண்டுவந்தது. அதோட அம்சம்தான் இது. அதுக்கென்ன இப்ப?"

"இல்லை தலைவரே, அதனை முடக்க முயற்சி செஞ்சாங்க. அதை முறியடித்து திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருது தி.மு.க. அரசு. இதனடிப்படையில், தனது தலைமையிலான நிர்வாகம் எளிமையாகவும், வெளிப்படைத்தன்மையாகவும் இருக்க வேண்டும் எனும் நோக்கத்தில், 'என் கனவு என் எதிர்காலம்' எனும் திட்டத்திற்கான இணைய தளத்தை ஸ்டாலின் தொடங்கி வச்சிருக்கார். இது, இளைஞர்களிடம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திக்கிட்டிருக்கு. இந்த இணைய தளத்தை பயன்படுத்துவதன் மூலம், அரசின் சேவைகள் அனைத்தும் சாமானியர்களின் கைகளுக்கு எளிமையாக கிடைக்கும்னு அதிகாரிகள் சொல்றாங்க."



"கவர்னர் ரவிக்கு சாதகமாக இருந்த தடையை உச்சநீதிமன்றம் உடைச்சி எறிஞ்சிருக்கே?"

"பல்கலைக்கழகங்களுக்கு துணைவேந்தர்களை நியமிக்கும் அதிகாரத்தை கவர்னர் வெச்சிருந்தாரு. அவரோட நியமனங்கள் தமிழகத்துக்கு எதிரா இருந்ததால் சர்ச்சைகள் வெடிச்சது. இதுக்கு ஒரு முடிவுகட்டணும்னு நினைச்ச முதல்வர் ஸ்டாலின், கவர்னரிடம் இருந்த அதிகாரத்தை மாநில முதலமைச்சருக்கு மாத்தியமைக்கும் சட்ட மசோதாவை சட்டப் பேரவையில் நிறைவேத்தினாரு. ஆனா, இந்த மசோதாவுக்கு கவர்னர் ஒப்புதல் தராததால், அதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில், தனக்கேயுரிய சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்த மசோதாவுக்கு உச்சநீதிமன்றம் ஒப்புதல் தந்துச்சு. இதனை கெஜட்டிலும் பதிவுசெய்தது தி.மு.க. அரசு. அதேசமயம், கவர்னருக்குரிய அதிகாரத்தை முதல்வருக்கு மாத்திய சட்ட மசோதாவுக்கு எதிரா சென்னை உயர்நீதிமன்றத்தில் ஒருவர் வழக்குப்போட, மசோதாவுக்கு தடைபோட்டது உயர்நீதிமன்றம். இதனால் கவர்னர் மாளிகை சந்தோசப்பட்டது. இந்த நிலையில, இந்த தடையை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு மேல்முறையீடு செய்ய, வழக்கு பல மாதங்களாக கிடப்பில் கிடந்தது. இந்த நிலையிலதான், இந்த மேல்முறையீட்டு வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதி அடங்கிய முதன்மை

## சபரிமலை தங்கத் திருட்டு வழக்கில் முக்கிய குற்றவாளியாக கருதப்படும் உன்னிகிருஷ்ணன் பொட்டிக்கு ஜாமின்

அமர்வு, சென்னை உயர்நீதிமன்றத்தின் தடைக்கு, தடை விதித்ததுடன், வழக்கை விசாரித்து 6 வாரத்தில் தீர்ப்பு வழங்கணும்னு உத்தரவிட்டிருக்கு. இதனால் தமிழக கவர்னர் மாளிகைக்கு அதிர்ச்சி ஏற்பட்டிருக்கு."

"இதேபோல், அண்ணாமலை பல்கலைக் கழக பட்டமளிப்பு விழாவில் ஆளுநருக்கு ஒரு மாணவர் அதிர்ச்சியளித்தாராமே?"

"ஆமாங்க தலைவரே, சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 87வது பட்டமளிப்பு விழாவில், ஆளுநர் ஆர்.என்.ரவி கலந்துகொண்டு பட்டங்களை கொடுத்தபோது, வரலாற்று துறை ஆராய்ச்சி மாணவர் புஷ்பராஜ், தன்னோட பாக்கெட்டில் மறைத்து வைத்திருந்த தமிழக முதல்வரின் படத்தை அவரது பட்டத்தின் மீது வைத்து, ஆளுநரின் கையால் வாங்கியிருக்கிறார். அதைப் பார்த்த ஆளுநருக்கு அதிர்ச்சியாகியிருக்கு. உடனே, இதேபோல் வேறு யாரேனும் வச்சிருக்காங்களான்னு எல்லா மாணவர்களையும் சோதித்ததால அங்க பரபரப்பு ஏற்பட்டிருக்கு. இது குறித்து மாணவர் புஷ்பராஜிடம் விசாரித்தபோது, அவர், விக்கிரவாண்டி அருகிலுள்ள ஆவுடையார்பட்டு கிராமத்தை சேர்ந்தவராம். தமிழ்நாடு அரசோட கல்வி உதவித்தொகையை பெற்றும், தமிழக முதல்வர் கல்விக்காக அறிவித்துள்ள திட்டங்களை பயன்படுத்தியும் படிச்சு முன்னேறினாராம். துணைவேந்தரா தமிழக முதல்வரை நியமிக்கணும்கற சட்டமன்ற தீர்மானத்தை கவர்னர் புறக்கணிச்சதால முதல்வர் கையால பட்டத்தை வாங்க முடியாத வருத்தத்தால தான் இந்த மாதிரி பண்ணினாராம். அந்த நிகழ்ச்சியில் முதலிலும் முடிவிலும் தேசிய கீதம் இசைக்கப்பட்டு, அதுக்கப்புறமா தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்பட்டதாகவும் சர்ச்சை எழுந்திருக்கு."


முதல்வர் படத்துடன் கவர்னரிடம் பட்டம் வாங்கும் மாணவர்

"தமிழக காங்கிரஸ் சொத்தை கட்சியின் அகில இந்திய தலைமை கபளீகரம் செய்திருப்பதாக காங்கிரஸ் சீனியர்கள் எல்லாம் கொந்தளிக்கிறாங்களேப்பா?"

"என் காதுக்கும் இந்த நியூஸ் வந்துச்சுங்க தலைவரே... தமிழக காங்கிரஸ் அறக்கட்டளைக்கு சொந்தமா தமிழகம் முழுக்க நிறைய சொத்துக்கள் இருக்கு. அதுல ஒண்ணுதான் சென்னை தேனாம்பேட்டையில் காமராஜர் அரங்கத்துக்கு அருகேயிருக்கும் காங்கிரஸ் திடல். இன்னைய தேதியில சுமார் 2,000 கோடி ரூபாய் சொத்து இது. காங்கிரஸ் கட்சிக்கு வருவாய் ஈட்டுவதற்காக, இந்த மைதானத்தில் வர்த்தகக் கட்டடங்கள் கட்டி வாடகைக்கு விடுறதுக்காக மார்வாடி ஒருத்தர் கிட்டே பல வருடங்களுக்கு முன்பு அக்ரிமெண்ட் போட்டுக்கிட்டாங்க, அறக்கட்டளை உறுப்பினர்களாக இருந்த கதர்ச்சட்டை தலைவர்கள். இதற்காக சில கோடிகள் கைமாறியிருந்தது. ஆனா, இடத்தை மார்வாடி எடுத்துக்க முயற்சித்தபோது பலரும் பிரச்சனை பண்ணதினால மார்வாடி அமைதியாக இருந்தாரு. இப்படியே பல வருடங்கள் கடந்த நிலையில, மார்வாடி கிட்டே இருந்து திடலை மீட்கும் எந்த முயற்சியையும் காங்கிரஸ் எடுக்கலை. அறக்கட்டளைமீது தமிழக காங்கிரஸுக்கு இருந்த அதிகாரத்தையும் உரிமையையும் அகில இந்திய தலைமைக்கு இருக்கிற மாதிரி கடந்த வருசம் மாத்திக்கிச்சு டெல்லியிலிருக்கும் காங்கிரஸ் மேலிடம். இதுக்கு பின்னணியில சோனியாவும், ராகுலும் இருந்தாங்க. சில மாதங்களுக்கு முன்பு, மார்வாடியிடமிருந்து திடலை மீட்கிறேங்கிற பேருல சட்டத்திற்குப் புறம்பா ஆக்சன் எடுத்தாரு செல்வப்பெருந்தகை. உடனே, காங்கிரஸுக்கு எதிராக கோர்ட்டுக்குப் போனாரு அந்த மார்வாடி. இதனால் அதிர்ச்சியடைந்த செல்வப்பெருந்தகையும், கட்சியின் பொருளாளர் ரூபி மனோகரனும், மார்வாடியிடமிருந்து நாம கைப்பற்றி பெரிய மால் ஒன்றைக் கட்டலாம்னு திட்டமிட்டு மார்வாடியிடம் பேச்சுவார்த்தை நடத்தியிருக்காங்க. அந்த மார்வாடியோ, இன்னைய தேதிக்கு 2000 கோடி சொத்து இது. 500 கோடி கொடுத்திடுங்க. நான் திருப்பித்தந்துடுறேன்னு சொல்லி

www.nakkheeran.in




யிருக்காரு. இது ரொம்ப அதிகம்னு செல்வப்பெருந்தகை எதிர்வாதம் செஞ்சிருக்காரு.”

“எனக்குப் புரியுது. மேல சொல்லு”

“இந்த விவகாரம் மேலிடத்துக்கு தெரிஞ்சு, சொத்து முழுவதும் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வருவதற்காக, அகில இந்திய காங்கிரஸ் சொத்து பாதுகாப்புக்குழு பொருளாளர் விஜய் இந்தர் சிங்லாவையும், கிரீஷ் ஷோடங்கரையும் களத்துல இறக்கிச்சு. சீக்ரெட்டாக நடந்த பேச்சுவார்த்தையில, 60 கோடி தந்திடுவதாக உடன்பாடு ஏற்பட்டிருக்கு. இதனையடுத்து, ரெண்டு நாளைக்கு முன்பு விஜய் இந்தர்சிங்லே, கிரீஷ் ஷோடங்கர், செல்வப்பெருந்தகை, ரூபி மனோகரன், சுதர்சன நாச்சியப்பன் (அறக்கட்டளை பழைய உறுப்பினர் இவர் மட்டும்தான்) எல்லோரும் கூடி ஆலோசிச்சாங்க. காங்கிரஸ் அறக்கட்டளைக்கு அகில இந்திய காங்கிரஸ் தலைமை 30 கோடி வெள்ளையாகவும், 30 கோடி கறுப்பாகவும் தருவதாக முடிவு காணப்பட்டது. இதனையடுத்து, 60 கோடி மார்வாடிக்கு கைமாறியதாகவும், இதற்கான பணத்தை கர்நாடக துணைமுதல்வர் டி.கே.சிவக்குமார் ஏற்பாடுசெய்ததாகவும் சொல்றாங்க. தமிழக காங்கிரஸுக்கு உரிமையான சொத்தை சோனியா குடும்பம் கபளீகரம் செய்திருக்கு. விரைவில் இந்த திடலில் டி.கே.சிவக்குமார் ஆளுமை செலுத்துவாருன்னும், ரியல் எஸ்டேட்டிலுள்ள பிரைவேட் நிறுவனத்துடன் அக்ரிமெண்ட் போடுவாங்கன்னும், இதன் பின்னணியில் செல்வப்பெருந்தகையும், ரூபி மனோகரனும் இருக்காங்கன்னும் சொல்லி, சீனியர் கதர்ச்சட்டைகள் கொந்தளிக்கிறாங்க. இந்த விவகாரத்தை அமலாக்கத்துறையும் கவனிக்க ஆரம்பிச்சிருக்கு.”

“சாத்தான்குளம் தந்தை -மகன் படுகொலை வழக்கில் பாதிக்கப்பட்டோர் தரப்பிலிருந்து இன்ஸ்பெக்டர் ஸ்ரீதர் மேல் புகார் சொல்லப்படுதே?”

“சாத்தான்குளம் தந்தை -மகன் படுகொலை வழக்கில் அரசுத் தரப்பு சாட்சியங்களின் விசாரணை நிறைவுபெற்ற நிலையில், எதிர்த்தரப்பு சாட்சியங்களின் விசாரணை துவங்கியுள்ளது. இதில் தற்பொழுது மெடிக்கல் கிரவுண்டில் ஜாமீன்பெற்ற இன்ஸ்பெக்டர் ஸ்ரீதர் தரப்பு சாட்சியாக சாத்தான்குளம் அழுத்துண்ணாகுடி பரம்பரையைச் சேர்ந்த 8 நபர்கள் சாட்சி கூறுவதற்கு அனுமதி பெற்றுள்ளார். புதன்கிழமையன்று ஸ்ரீதருக்கு ஆதரவாக மாசாணமுத்து, குருசாமி, பாலசுந்தரம், ஓய்வுபெற்ற மருத்துவர் செங்குட்டுவன் ஆகியோர் சாட்சியமளிக்க மதுரை நீதிமன்றத்திற்கு வந்திருந்தனர். இதில் ஸ்ரீதருக்கு ஆதரவாக சாட்சியமளிக்க வந்த மருத்துவர் செங்குட்டுவன் சாட்சியமளிக்காமலேயே தெறித்து ஓடினார். இதனால் மருத்துவர் செங்குட்டுவன் தரப்பு சாட்சிய மனுவை வாபஸ்பெற்றார் இன்ஸ்பெக்டர் ஸ்ரீதர். இன்ஸ்பெக்டர் ஸ்ரீதர் வழக்கிற்கு எதிராக, நீதிமன்ற நிபந்தனைக்கு எதிராக சாட்சியங்களை கலைக்கும் வேலையில் ஈடுபட்டு வருகின்றார் என பாதிக்கப்பட்டோர் முறையிட ஆரம்பித்துள்ளனர்.”

அன்றே 'அஜித்குமார் காவல் மரணம்!' எனச் சொன்ன நக்கீரன்





அஜித்குமார்

“அதேபோல மடப்புரம் அஜித்குமார் வழக்கிலும் காவல்துறையினர் மீது நீதிபதி அதிருப்தியை வெளிக்காட்டியிருக்காரே?”

“ஆமாங்க தலைவரே, திருப்புவனம் மடப்புரம் பத்ரகாளி அம்மன் கோவில் காவலாளியாகப் பணிபுரிந்த காவலர் அஜித்குமார் கொலைவழக்கில் தனிப்படைக் காவலர்களான கண்ணன், ராஜா, ஆனந்த், பிரபு, சங்கர மணிகண்டன் ஆகியோர் ஜாமீன் வழங்கக்கோரி மனுத் தாக்கல் செய்திருந்தனர். இந்த மனு நீதிபதி ஸ்ரீமதி முன்பாக விசாரணைக்கு வந்தது. சி.பி.ஐ. தரப்பில், அஜித்குமாரின் மரணம் ஒரு காவல் மரணம் என்பது உறுதியாகியுள்ளது. வழக்கு பதியப்பட்டுள்ள 10 பேருக்குமே இதில் தொடர்புள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. அதையடுத்து நீதிபதி 'நகைத்

www.nakkheeran.in



திருச்சி பார்வையற்றோர் பள்ளியில் 12-ஆம் வகுப்பு மாணவி மர்ம மரணம்: எஸ்.பி. தலைமையில் குழு அமைக்க உத்தரவு

PUBLISHED BY **NAKKHEERAN GOPAL** ON BEHALF OF NAKKHEERAN PUBLICATIONS, 105, JANI JAHAN KHAN ROAD, ROYAPETTAH, CHENNAI-14, AND PRINTED BY HIM AT NAKKHEERAN PRINTERS AND BINDERS 105, JANI JAHAN KHAN ROAD, ROYAPETTAH, CHENNAI-14. EDITOR : **NAKKHEERAN GOPAL**,

திருட்டு புகாரளிக்கப்பட்டது உண்மையா?' என கேள்வியெழுப்பினார். அதற்கு சி.பி.ஐ. தரப்பில், 'அது உண்மையில்லை, அறிக்கை தயாராகி வருகிறது' என தெரிவிக்கப்பட்டது. அதற்கு நீதிபதி, 'ஒன்றுமே இல்லாத விசயத்திற்கு ஒருவரை அடித்துக் கொலை செய்துவிட்டனர். புகாரளித்தவர்மீது நடவடிக்கை எடுக்கவேண்டியதுதானே? அவர்தானே காரணம்?' என கேள்வியெழுப்பினார். (அஜித்குமார் மீதான நகை திருட்டுப் புகாரில் உண்மையில்லை. அது காவல் மரணமென்று ஏற்கனவே 2025, ஜூலை 4, 8, 12 தேதியிட்ட நக்கீரன் இதழ்களில் நாம் பதிவு செய்திருந்தோம்.) தொடர்ந்து, 'முன்விரோதம் ஏதும் இருந்ததா?' என கேள்வியெழுப்பியபோது, 'முன்விரோதம் எதுவும் இல்லை. டி.எஸ்.பி. விசாரிக்குமாறு கூறியதால் இவ்வாறு நிகழ்ந்துள்ளது' என சி.பி.ஐ. தரப்பில் தெரிவிக்கப்பட்டது. அதையடுத்து நீதிபதி, 'யாராக இருந்தாலும் சிறையிலேயே இருக்கட்டும். மனசு பதறுகிறது, ஒன்றுமில்லா விசயத்திற்கு ஒருவரை இப்படி அடித்திருக்கிறீர்கள்' என குறிப்பிட்டு, காவல்துறை மீதான அதிருப்தியுடன் வழக்கை பிப்ரவரி 17ஆம் தேதிக்கு ஒத்திவைத்துள்ளார்."

"ஐ.டி. விங்கோட யோசனையை, அ.தி.மு.க. பூத் ஏஜெண்டுகள் புறக்கணிச்சிருக்காங்களாமே?"

"அதைக் கேட்கிறீங்களா, கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னதாக தமிழ்நாட்டிலுள்ள அனைத்து பூத் ஏஜெண்டுகளையும் ஒருங்கிணைத்த அ.தி.மு.க. ஐ.டி. விங், 'உங்களுக்கு ஒரு கையடக்க கருவி தருகிறோம். வீடு வீடாகப் போய் வீட்டிலுள்ளவர்களைச் சந்தித்து, அன்றைய நாளில் அவர்கள் பயன்படுத்தும் மளிகைப் பொருட்களின் விலைப்பட்டியலை அதில் பதிவுசெய்யுங்கள். அதனை பிரிண்ட் செய்து அதனுடன் அ.தி.மு.க. ஆட்சியின்பொழுது அப்போதைய விலைப் பட்டியலையும் கொடுத்து ஒப்பீடு செய்யுங்கள். விலைவாசி எவ்வளவு ஏறியிருக்குனு தெரியட்டும். இதுவும் ஒருவகையான பிரச்சாரமே' என்றது. 'சரி சார்... இதற்கு செலவுத் தொகையை யாரிடம் வாங்குவது?' என்றிருக்கின்றார்கள் பூத் ஏஜெண்டுகள். 'அதெல்லாம் எங்களுக்குத் தெரியாது, விவரம் சொல்லச் சொன்னார்கள், சொல்லிவிட்டோம்' என்றிருக்கிறது ஐ.டி. விங். 'இவங்க சம்பாதிச்சுக் குவிப்பதற்கு நாங்க வேலை பார்க்கனுமா?' என மெஷினை வாங்காமலேயே புறக்கணிப்பு போராட்டத்தில் உள்ளனர் அ.தி.மு.க. பூத் ஏஜெண்டுகள்."

"அ..மலை அப்பாவோட உடல்நிலையைக் காரணம் காட்டி தேர்தல் வேலைகளைப் புறக்கணிக்கப்போறதா கூறுகிறாரே?"

"நிஜம்தான் தலைவரே! ஆனா உண்மையான காரணம் அதில்லை. வானதிக்கும் அ..மலைக்கும் இடையே ஒரு மிகப்பெரிய சண்டை நடக்கிறது. வானதி வெற்றிபெற்ற கோவை தெற்குத் தொகுதியை அ..மலை கேட்கிறார். இதை நயினாரும் மற்றவர்களும் கொடுக்கமறுக்கிறார்கள். இதனால்தான் நான் தொகுதி வேலையைப் பார்க்கமாட்டேன் என மாஜி தலைவர் ஒதுங்குவதற்குக் காரணம். இதைப் பற்றி பா.ஜ.க.வினரிடம் கேட்டால், விஜய்யிடம் 'உங்கள் கட்சிக்கு வந்துவிடுகிறேன்' என பேசிக் கொண்டிருக்கிறார். இதை ஆதவ் அர்ஜுனா, நிர்மல்குமார், அருண்ராஜ் மூவரும் எதிர்க்கிறார்கள். எப்படியாவது த.வெ.க.வில் இணைந்துவிட விஜய்யிடம் பேசி முயற்சிசெய்து கொண்டிருக்கிறார். விஜய் கட்சியின் கோவை தெற்கு வேட்பாளராக வானதியை எதிர்த்துப் போட்டியிடுவதுதான் இவரது திட்டம். தனிக்கட்சி தொடங்கக்கூடாதுன்னுதானே தலைமை எச்சரிச்சது. கட்சி மாறக்கூடாதுன்னு சொல்லலையேன்னு, அதற்காக சாக்குப் போக்குகளையும், காரணங்களையும் தேடிக் கொண்டிருக்கிறார் என்கிறார்கள்."

**"சரி நானும் ஒரு தகவல் சொல்றேன்ப்பா... திவாகரனின் அண்ணா திராவிடர் கழகத்தை மீண்டும் உயிர்பெற வைத்து ஒரு ஆட்டம் ஆடிப் பார்க்க நினைக்கிறாராம் சசிகலா. இதற்காக திவாகரன், செங்கோட்டையன் மூலமாக விஜய்யிடம் பேசி 25 தொகுதிகளைக் கேட்டிருக்கிறார். அ.தி.மு.க. தோற்ற பிறகு, எடப்பாடியை ஒரு கை பார்ப்பதற்கான வியூகங்களை இப்போதிருந்தே சசி வகுத்து வருகிறார். இதற்கிடையில், 'அம்மா அ.தி.மு.க.' என்ற கட்சியை சசிகலா தொடங்குவதாகச் செய்தி வந்தது. ஏற்கெனவே திவாகரனால் பதிவு செய்யப்பட்ட கட்சி இருப்பதால், அண்ணா திராவிடர் கழகத்துக்குத்தான் உயிர்கொடுக்கப் போகிறாராம் சசிகலா."**

●



சசிகலா

ஜம்மு- காஷ்மீரில் துப்பாக்கிச் சூடு: 2 தீவிரவாதிகள் சுட்டுக்கொலை

Posted at Egmore RMS, Patrika Channel, Chennai-08, NAKKHEERAN TAMIL BI-WEEKLY, RNI No.: 49456/88,
Date of Publication on posting : Every Tuesday & Friday





advt